
KALKI
29.6.86
ரூ.1.50

# கல்கி



## விக்ரம் பற்றி கமல்:

"நான் கட்ட நினைத்தது தாஜ்மஹால் அல்ல"



Amulspray
Milk food for infants
Enriched with Vitamins and Iron
Breast feeding is best for your child
குழந்தைகளுக்கான அமுல்ஸ்ப்ரே பாலுணவு இப்போது நருவிசான புதிய டிசைனிலே வருகிறது*
ஸ்ப்ரே-ட்ரை செய்முறைப்படி தயாரிக்கப்பட்டு, வைட்டமின்களும் இரும்புச் சத்தும் சேர்த்து வளமூட்டப்பட்ட அமுல்ஸ்ப்ரே, இந்தியாவில் எங்குமுள்ள தாய்மார்களால் மிகவும் விரும்பப்படும் குழந்தைப் பாலுணவு—உங்கள் குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரே துவங்கு முன்பாக உங்கள் டாக்டரிடமோ அல்லது ஆரோக்கிய நலம் காக்கும் ஊழியரிடமோ ஆலோசனை கேட்டுப் பெறுங்கள். மறவாதீர்கள், உங்கள் பாப்பாவின் உடல் நலம் கெடாதிருக்க, டின் மீதுள்ள வழிமுறைக் குறிப்புகளைக் கவனமாகப் பின்பற்றுங்கள்.
அமுல்ஸ்ப்ரே
குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்தது.
* அரசாங்க விதிமுறைகளின்படி, டின் மீதிருந்து பாப்பாவின் படம் அகற்றப்பட்டு, வழிமுறைக் குறிப்புகளில் இதர மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.
விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.
OPERATION FLOOD



# எம்.ஜி.ஆர் கொடுத்த விளம்பரம்

**விபரீதம்! விசித்திரம்! வெட்கக்கேடு!**
**■ வரவேற்கப்பட வேண்டியது வேடிக்கை**

**கா. சுப்பு (அ. தி. மு. க. தொழிற் சங்கச் செயலாளர்)**

எங்கள் தலைவரின் இந்த அறிக்கையை எல்லோரும் வரவேற்க வேண்டும். காரணம் இது போன்ற அறிக்கையினை வெளியிடும் அளவுக்கு விஷயங்கள் நடந்து இருக்கின்றன! 1977 ல் ஆட்சிக்கு வந்தவுடன் அதிகாரிகளை நம்பியே ஆட்சி இருந்தது. கட்சிக்காரர்கள் குறுக்கிட முடியவில்லை. அப்புறம், கொஞ்சம் கொஞ்சமாக நுழைய ஆரம்பித்துவிட்டார்கள். இன்று முதலமைச்சரின் உடல் நிலையை நன்கு தெரிந்து கொண்டு கட்சிக்காரர்களும் அதிகாரிகளும் ஆட்டம் போடுகிறார்கள். ஒரு விஷயம் சொல்கிறேன். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக கலோசனை சம்பத்தைப் போட்டோம். ஆனால் தலைமைச் செயலாளர் கலோசனை சம்பத்துக்கு முன்னால் இருந்தவர் வைத்துக் கொண்டிருந்த அதிகாரங்களில் பலவற்றைப் புதிய தலைவர் வந்தவுடன் அதிகாரிகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டார். கலோசனை சம்பத்துக்கு அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. கேட்டால், முதல்வர் சொல்லித்தான் செய்தேன் என்றார். ஆனால் கடைசியில் முதல்வரின் காதுக்கு விஷயம் போனபோது, 'நான் அப்படி அதிகாரங்களைக் குறைக்க ஆர்டர் போடவில்லையே' என்றுதான் பதில் வந்தது.

'என் மனைவியாகவே' என்று விளம்பரத்தில் தலைவர் சொல்வதற்குக் காரணம், மற்ற அமைச்சர்களும் தங்கள் மனைவிமார்களை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தான்! காளிமுத்துவின் மனைவிகள் அதிகாரிகளை விரட்டோ விரட்டென்று விரட்டினார்கள்.

இதே போல் கே.ஏ.கே. பின்னி மில் விஷயத்திலும், பின்னி இன்ஜினியரிங் கம்பெனி விஷயத்திலும் முதல்வர் கருத்தறியாமல் செயல்பட்டார். இதன் விளைவுதான் அவரது இலாகா மாற்றமும் தொடர்ந்து அவரது ராஜினாமாவும்.

முப்பத்தெட்டு வருட சுதந்திர இந்தியாவில் இது போன்ற ஓர் அறிக்கையினை எந்த முதல்வரும் வெளியிட்டதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போதுதானே முதல்வரின் கையெழுத்தை ஃபோர்ஜரி





**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்கள்**
**விடுக்கும் முக்கிய அறிவிப்பு!**

அரசு நிர்வாகத்தில் சம்பந்தமில்லாத யாருடைய தலையீட்டையும், குறுக்கீட்டையும் நான் எப்போதும் விரும்புவதில்லை.

எனது மனைவியாகவே இருந்தாலும் அல்லது எனது உறவினர் என்று சொல்லிக் கொள்பவராகவே இருந்தாலும் அவர்களுக்கும் இது பொருந்தும்.

அமைச்சர்களே ஆனாலும் சரி, தலைமைச் செயலாளர், அரசு உயர் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகள் யாராக இருந்தாலும் சரி என்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து நடக்க வேண்டும்.

சென்னை.
13.6.86.

அன்பன்,
எம்.ஜி. இராமச்சந்திரன்.

செய்யும் வேலையெல்லாம் நடக்கிறது! அதனால் இதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது!

முதல்வர் முன்போல் உடல் நலம் மிக்கவராக இருந்தால் எல்லோரையும் கூப்பிட்டு பேசி 'எச்சரிக்கை' செய்திருப்பார். ஆனால் இப்போதிருக்கும்நிலைமையில் மக்கள் மன்றத்தில் விஷயத்தை வைத்திருக்கிறார். இது பாராட்டத்தக்க ஒன்றுதானே! அதிகாரிகளும் அமைச்சர்களும் மறைமுகமாகச் செய்யும் தவறுகள் திருத்தப்படுவதற்கும் அவர்களைத் திருத்துவதற்கும், சக்தி வாய்ந்த மக்கள் மன்றத்தை அணுகியிருப்பது வரவேற்கத்தக்கதுதானே!

## விபரீதம்! விசித்திரம்! ■ வெட்கக்கேடு! வரவேற்கப்பட வேண்டியது வேடிக்கை

**பத்திரிகையாளர் டி. எஸ். வி. ஹரி (வெங்கட்)**



எங்கப்பன் குதிருக்குள் இல்லேன்னு சொல்ற மாதிரி இருக்கு இந்த விளம்பரம். அரசு நிர்வாகத்தில் சம்பந்தப்படாத யாருடைய தலையீட்டையும் விரும்புவதில்லை என்று சொல்வதன் மூலம், இத்தனை நாள் இது போன்ற விரும்பத்தகாத செயல்கள் நடந்து வந்ததென்று ஒப்புக் கொள்வதாகத் தானே அர்த்தம்? என் மனைவியே ஆனாலும் என்று சொன்னதன் மூலம், இவர் மனைவியே அதிகார துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார் என்று பொருளாகிறது. உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும், பொறுப்பிலுள்ளவர்கள் இது போன்ற அறிக்கையினை வெளியிட்டதில்லை. என்னுடைய அபிப்ராயம் என்னவென்றால், இந்த அறிக்கை அமைச்

## மேடையில் எம். ஜி. ஆருக்கு நேர்ந்தது என்ன?



நெல்லை மாவட்டம் சேரன் மகாதேவியில் ஸன் பேப்பர் நிறுவனம் நடத்திய வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டபோது, 'மேடையிலேயே எம். ஜி. ஆருக்கு ''ஃபிட்ஸ்'' போல வந்தது. வலது கையும், காலும் நடுங்குவதை நன்றாகப் பார்க்க முடிந்தது. உடனே ஹண்டேயும், எம். ஜி. ஆரின் குடும்ப டாக்டரான சுப்பிரமணியமும் 45 நிமிஷங்கள் கழுத்தில் 'மஸாஜ்' செய்து விட்டனர். எம். ஜி. ஆர். மீண்டும் சகஜ நிலைக்கு வந்தார். திடீரென்று 'ஃபிட்ஸ்' வரக் காரணம் என்ன?' களைப்பு' தான் காரணம் என்று தமிழக அரசின் பத்திரிகைக் குறிப்பு கூறிற்று. ஆனால் மருத்துவ வட்டாரங்களில் விசாரித்த போது, incompatibility தான் இதற்குக் காரணம் என்றார்கள். மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்டவர்களுக்குச் செயல்படுவதிலும், சாப்பாட்டு முறைகளிலும், சில விதிமுறைகள் இருக்கின்றன. இவற்றை எம். ஜி. ஆர். கடைப்பிடிக்கவில்லையென்று ஒரு தகவல் கூறுகிறது. தலையில் இன்னும் 'கரையாத ரத்தக் கட்டி' நரம்பு நாளங்களினிடையில் இருப்பதன் விளைவுதான் இது என்றும் சொல்கிறார்கள். அன்றிரவு ராஜீவ்காந்திஎம்.ஜி. ஆரின் உடல்நிலை பற்றி விசாரித்து 'வெளிநாட்டு மருந்து ஏதும் வேண்டுமா?' என்று கேட்டாராம். 'தற்போது அவசியமில்லை' என்று பதில் சொல்லப்பட்டது. ஜப்பான் நரம்பியல் நிபுணர் கானு சென்னைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக



இன்னொரு தகவல் கூறுகிறது. ஆனால், இந்தத் தகவல்களெல்லாம் அநுமானங்களாக இருக்கின்றனவே தவிர, ஆதாரபூர்வமானதாக இல்லை. உடல்நிலை சற்று தேறி வந்த பிறகு முதல்வர் எம். ஜி. ஆரின் செயல்கள், ஆரோக்கிய நிலை எல்லாம் எவ்வளவு ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்குப் புற்றீசல் போல வரும் இந்த வதந்திகளே சாட்சி. வதந்திகள் பரவக் கூடாதென்றால் உண்மைகளை அரசே வெளியிட வேண்டும். உண்மைகளை அறிய மக்களுக்கு உரிமை உண்டு.

## பழனியாண்டியிடம் எம். ஜி. ஆர். மன்னிப்புக் கேட்டது ஏன்?

'மாதிரிப் பள்ளிக் கூடங்களை நாம் வரவேற்க வேண்டும்' என்று மத்திய மந்திரி சிதம்பரம் ஒரு கூட்டத்தில் பேசினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் காளிமுத்து, சிதம்பரத்தை மத்திய அரசின் ''கங்காணி'' என்று சொல்லிவிட்டார். ''கங்காணி'' என்று சொன்னது தவறு. காளிமுத்து உடனே மன்னிப்புக் கேட்க வேண்டும்; இல்லையென்றால் நாங்கள் வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேச நேரிடும்'' என்று ராபின் மெய்யன் விவகாரத்தைக் கிளப்பாமல் கிளப்பிக் காண்பித்தார் பழனியாண்டி. உடனே பயந்துபோனது காளிமுத்து அல்ல; எம். ஜி. ஆர்தான்! இ. காங்கிரஸில் யாருமே மனம் கோணுதபடி தாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள எம். ஜி. ஆர்., காளிமுத்துவுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்! இதற்கிடையில் நடந்தது சுவாரஸ்யமான விஷயம்.



தோட்டத்திற்கு அழைக்கப்பட்ட காளிமுத்துவிடம், ''ஏன் அப்படிப் பேசினாய்?'' என்று எம். ஜி. ஆர். கேட்டபோது ''பொதுக் கூட்டத்தில் அப்படிப் பேசுவது சகஜம்தானே'' என்று பதில் சொன்னாராம் காளிமுத்து. ''மன்னிப்புக் கேட்டு அறிக்கை விடு'' என்றவுடன் ஒரு வார்த்தை பதில் பேசாமல் திரும்பி வந்துவிட்டாராம் காளிமுத்து. இந்த விஷயத்தைச் சொன்ன தோட்டத்துப் பிரமுகர் ஒருவர், ''நல்லாப் புரிஞ்சுக்கிட்டாங்க ஸார். இனிமே யாரும் இவங்களை அடக்கவே முடியாது'' என்றார்.



சர் வீரப்பனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 'ஷாக்'! ஜெயலலிதா — வி.என். ஜானகி விஷயத்தில் எதிரிக்கு எதிரி நண்பர் என்பது போல், வி.என். ஜானகியின் பக்கபலத்தில் தைரியமாக விளையாடிக் கொண்டிருந்தார் வீரப்பன். இந்த விளம்பரத்தின் மூலம் அவரை மறைமுகமாக எச்சரித்திருக்கிறார் எம்.ஜி.ஆர். அறிக்கையில் எல்லோரையும் குறிப்பிட்ட எம்.ஜி. ஆர், 'கட்சிப் பிரமுகர்கள்' என்ற வார்த்தையைச் சேர்க்காதது ஏன்? அதிகாரிகள் இவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து நடக்க வேண்டுமாம்! அமைச்சர்களாலேயே இவரைப் பார்க்க முடியவில்லை; அப்புறம் அதிகாரிகள் எப்படிச் சந்திப்பது? ஃபைல் அனுப்பினால், திரும்பி வருவதில்லை. இந்த அழகில், எப்படி ஆட்சி நடக்கும்? இங்கு நடப்பது கூத்து ஸார்!

**■ விபரீதம்! • விசித்திரம்! வெட்கக்கேடு!**
**வரவேற்கப்பட வேண்டியது வேடிக்கை**

### ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியிடம் இது பற்றிக் கேட்டபோது...

**Point of no return** என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! அது போன்று நாங்கள் முதல்வருக்கு அனுப்பும் ஃபைல்கள் திரும்பி வருவதே கிடையாது. முதல்வர் நன்றாக இருந்தபோதே ஃபைல்கள் நகராது. இப்போது கேட்கவே வேண்டாம். கடந்த ஐந்து வருடங்களில் எங்கள் இலாகாவைப் பொறுத்தவரையில் சுமார் எழுபத்தைந்து பைல்கள் முதல்வரின் உத்தரவுக்காகக் காத்திருக்கின்றன. இது பற்றி விசாரிக்கலாம் என்று போனால், கேவலம் ஒரு உதவியாளர், 'போய்யா, அப்புறம் வாய்யா' என்று சொல்கிறார். சலித்துப் போய்விட்டது. இந்த அறிக்கையின் விளைவு என்னவென்றால், கொஞ்ச நஞ்சம் சுதந்திரத்துடன் செயல்பட்டு வந்த நாங்கள் இனிமேல் அதைக் கூட நிறுத்திவிடுவோம். இங்கு ஓரிரு அமைச்சர்களைத் தவிர யாருக்கும் சுதந்திரமாக முடிவெடுக்கும் திறமை கிடையாது. அவர்களும் முடங்கிப் போவார்கள். எந்த ஃபைலில் கையெழுத்துப் போட்டால் காசு வரும் என்பதைச் சில அமைச்சர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இனிமேல் அவர்கள் 'பாச்சா' பலிக்கக் கூடாது என்ற நோக்கத்தில்தான் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதோ என்று சந்தேகமாக இருக்கிறது. ஏற்கெனவே தமிழக ஆட்சிதான் இந்தியா முழுவதும் கிண்டலுக்கும், கேலிக்கும் உள்ளாகியிருக்கிறது. இது இன்னும் அதிகரிக்கவே இந்த அறிக்கை உதவும்.



**விபரீதம்! ■ விசித்திரம்! வெட்கக்கேடு!**
**வரவேற்கப்பட வேண்டியது வேடிக்கை**



### சா. கணேசன் (தி. மு. க.)

தலைவர் கலைஞர் பல நாட்களாகவே 'இந்த அரசு ஒரு செயல்படாத அரசு' என்று குற்றம் சாட்டி வருகிறார். அதை நிரூபிப்பதாகவே உள்ளது இந்த அறிவிப்பு. இதன் மூலம் எம்.ஜி.ஆர். தம்மைப் புத்தரின் மறு அவதாரமாய், புனிதமானவராய்க் காட்டிக் கொள்ள நினைக்கிறார். தமது மனைவியும் உறவினரும் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்றும் தலைமைச் செயலாளர், மந்திரிகள், அதிகாரிகள் உட்பட அத்தனை பேரும் நிர்வாகத்தில் அவரவர் இஷ்டத்துக்கு நடந்து கொள்கிறார்கள் என்றும் எம்.ஜி. ஆரே இந்த விளம்பரம் மூலமாய் பகிரங்கமாய் ஒப்புக் கொண்டுள்ளார். அரசு நிர்வாகத்தில், அனாவசியத் தலையீடுகள் இருப்பதாய் ஒரு முதலமைச்சருக்குத் தோன்றினால், அவர் என்ன செய்ய வேண்டும்? அதைக் களைவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தவறு செய்கிறவர்கள் அரசாங்க அதிகாரிகளாய் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சிக்காரர்களாய் இருந்தால் கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டும். மனைவி மற்றும் உறவினர்களாய் இருக்கும் பட்சத்தில் அவர்களைக் கண்டித்து, இனி அப்படிச் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதைவிட்டுவிட்டு பகிரங்கமாய் இப்படி ஒரு விளம்பரம் வெளியிடுவது ஊரை ஏமாற்றுகிற வேலை; மன்னிக்க முடியாத மோசடி. சில நாட்களுக்கு முன் வெளியான எம்.ஜி. ஆரின் போலிக் கையெழுத்து விவகாரம், இந்த விளம்பரம் எல்லாவற்றையும் பார்க்கும்போது, எம்.ஜி. ஆர். சுயமாய்ச் சிந்தித்து, முடிவுகள் எடுக்கிற நிலைமையில் இல்லை என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகிறது.

**விபரீதம்! விசித்திரம்! வெட்கக்கேடு!**
**வரவேற்கப்பட வேண்டியது ■ வேடிக்கை**

### ஜனா கிருஷ்ணமூர்த்தி (பாரதிய ஜனதா கட்சி)



தமிழக அரசின் இந்த விளம்பர அறிவிப்பு மிகவும் வேடிக்கையாய் உள்ளது. அதே சமயம் அரசாங்கத்தின் நிலைமை கண்டு வேதனையாகவும் உள்ளது. இது போல நடப்பது இந்திய சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை. முதலமைச்சர் உடல் நலம் குன்றியதிலிருந்தே, 'நிர்வாகம் சரிவர நடக்கவில்லை; கட்சியிலே கோஷ்டிப் பூசல் மிகுந்து கட்சியும் ஆட்சியும் எம்.ஜி. ஆரின் முழுக் கட்டுப்பாட்டில் இல்லை' என்கிற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அதோடன்றி அவருக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்படுபவர்கள், எம்.ஜி. ஆரின் பெயரைச் சொல்லி அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள்; அதிகச் சலுகை பெறுகிறார்கள் என்று ஆளும் கட்சியினரே குற்றம் சொல்கிறார்கள். இவை எல்லாவற்றையும் மறுக்கும்வகையில், விரைந்து செயல்படும் ஆட்சியை அளிப்பதைவிட்டுவிட்டு, எம்.ஜி. ஆர். இப்படி ஒரு விளம்பரத்தை வெளியிட்டுள்ளது குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதாகத்தான் உள்ளது.

கொஞ்ச நாட்களுக்குமுன் முதலமைச்சரின் கையெழுத்து ஃபோர்ஜரி செய்யப்படுவதாய் அரசாங்கமே சுற்றறிக்கை அனுப்பின செய்தி வெளியானது. சாதாரணமாய் எம்.ஜி.ஆர். உடல் நலம் நன்றாய் இருந்த போதே கோப்புக்கள் நத்தை வேகத்தில் தான் நகரும். பாராளுமன்ற ஜனநாயகத்தில், எந்த இலாகாவானாலும் சரி, சம்பந்தப்பட்ட அமைச்சருடன் முதலமைச்சர் விவாதித்து, கொள்கையை வகுத்துவிட்டு, பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சர்களே கொள்கையை ஒட்டி முடிவுகளை எடுக்க அனுமதிப்பதுதான் மரபு. ஆனால் முதல்வர் எம்.ஜி. ஆர். இதை என்

# ஃபாரெக்ஸ்®
# முதன்முதல் தேர்வு!




## ஏனெனில் புதிய மேம்பட்ட ஃபாரெக்ஸ்® முதன்முதலாக திட உணவிற்கு மாறும் குழந்தைக்கென இன்றியமையாத உட்பொருள்கள் சரியான அளவுகளில் சேர்க்கப்பட்டதாகும்.

குழந்தையின் வளர்ச்சிக்கும் மென்மையான செரிக்கும் சக்திக்கெனவும் சரியான அளவில் புரதங்களும் கொழுப்புச் சத்துக்களும் அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

குழந்தையின் இரத்தத்தை ஆரோக்கியமாக வைக்க இதில் போதுமான அளவு இரும்புச் சத்தும் உள்ளது.

குழந்தையின் எலும்புகளும் பற்களும் திடமாக வளருவதற்கு உகந்த விகிதத்தில் கால்ஷியம்-ஃபாஸ்ஃபரஸ் அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

இவை தவிர, புதிய ஃபாரெக்ஸ் கலப்பதற்கு எளிதானது...சுவைமிக்கது.




பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தால் போதும்.

புதிய மேம்பட்ட **ஃபாரெக்ஸ்®**

CLARION/B/GX/13/203.TMA

றைக்குமே கடைப்பிடித்தது கிடையாது. ஒரு காலத்தில் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்த தமிழகம், இன்று எவ்வளவு தூரம் தாழ்ந்துவிட்டது என்பதையே எம்.ஜி. ஆரின் சமீபத்திய விளம்பரம் எடுத்துக் காட்டுகிறது. முதலமைச்சர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மாதிரி விளம்பரங்கள் பிரச்னைகளைத் தீர்க்க உதவாது. முதல்வரின் உடல்நிலை அவரைத் திறம்படச் செயல்பட அனுமதிக்காத பட்சத்தில் சீரிய நிர்வாகத்தை வழங்கிட எம்.ஜி. ஆர். தமக்குப் பதிலாகவோ அல்லது உதவியாகவோ தம்முடைய நம்பிக்கைக்குரிய நபர் யாரையாவது தேர்ந்தெடுத்துத் தம் பொறுப்புக்களை அவருடன் பகிர்ந்து கொள்வதே புத்திசாலித்தனம். இதனால் அவரது செல்வாக்கு கூடுமே தவிர குறையாது.

பேட்டி: **ப்ரியன், ஜூலி.**

# தெய்வ மகள்



அடைக்கலம் புகுந்த வீட்டு எஜமானியின் கட்டளையை மீற முடியாமல் முதலில் அந்த எஜமானியின் பெண்ணாக மாறி பெண் பார்க்கும் படலத்தில் வந்து உட்கார்ந்து பாடுவது; அப்புறம் அந்த எஜமானியின் இரண்டாவது மகனின் மனைவியாக நடிப்பது; அப்புறம் அந்த எஜமானியின் பெண் வயிற்றுப் பேத்திக்குத் தாயாக நடிப்பது; கடைசி கடைசியாக அந்த எஜமானியின் மூத்த பிள்ளை இறந்து போனதால் இன்ஷூரன்ஸ் பணம் வாங்குவதற்காக விதவையாக வேஷம் போடுவது —

சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. ரேவதி தான் கதாநாயகி. வந்து புகுந்த இடத்தில் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் ஒவ்வொன்றாய் ஒப்புக் கொண்டு செய்வதைப் பார்க்கும்போது, அடடே, இவர் போய் படவுலகிலிருந்து விலகி விடப் போகிறாரே என்ற வருத்தம் ஏற்படாமல் இல்லை.

ரேவதியின் காதலனாக ராஜ்குமார். தேவதாஸ் வேஷம். முதலில் பாடிவிட்டு, அப்புறம் உளி ஏந்திவிட்டு, அப்புறம் தாடி வளர்த்து இருமி இறந்து போகிறார். 'எப்ப ஞச்சியும்' ஒரு தடவை படத்தில் தலைகாட்டுவதால் ஜமாய்த்துவிட்டார் என்று சொல்லவும் முடியவில்லை. 'ஊஹூம் தேறாதகேஸ்' என்று ஒதுக்கவும் முடியவில்லை.

கடைசிவரை பாறாங்கல் இதயத்துடன் ஒரு சுமித்ரா. ரேவதியிடம் வந்து கெஞ்சியும் மிஞ்சியும் காரியத்தைச் சாதித்துக் கொள்வதைக் கனகச்சிதமாய்ச் செய்திருக்கிறார்.

ஜீவிதாவிற்கு தம்மாத்தூண்டு ஊறுகாய் ரோல்.

ஏகப்பட்ட முகங்கள் அன்னியமாகத் தெரிகிறதே என்று பார்த்தால் தெலுங்கிலிருந்து இறக்குமதியாம்.


செந்தில், எஸ்.எஸ். சந்திரன், சரளா காமெடியை எங்கேயோ பார்த்த ஞாபகம் இருந்தாலும் 'ஹி.... ஹி....' என்று சிரிக்க முடிகிறது.

பெண்பார்க்கும்படலப்பாட்டுஇன்னொரு தடவை கேட்கலாம். வரவர எம்.எஸ். விஸ்வநாதன் தழைத்துக் கொண்டிருக்கிறார்.

அதெல்லாம் சரி, ஒரு நடிகையின் மகளாகப் பிறந்துவிட்டதால் கடைசிவரை கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டு — விதவைக் கோலமும் பூண வைத்துவிட்டார்களே....

யதார்த்தத்திற்கும் படத்திற்கும் ரொம்ப தூரம்.

— **ஜெயமன்மதன்.**



# கலையுலகக் கல்யாணம்

மணமகன் :

ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ். சுப்பு லக்ஷ்மி ஆகியோரின் பேரனும் ஸ்ரீ விசுவ நாதன், ஸ்ரீமதி ராதா விசுவநாதன் ஆகியோ ரின் மூத்த புதல்வனுமான செல்வன் சந்திரசேகர்.

மணமகள் :

ஸ்ரீ கே. எஸ். வேங்கடராமன், ஸ்ரீமதி சிக்கில் நீலா, குஞ்சுமணி ஆகியோரின் புதல்வி கலைச்செல்வி மாலா.


இரண்டு இசைக் குடும்பங்களை இணைத்த இந்தத் திருமணம் ஒரு கலைவிழாவாகவே ஜூன் 20 அன்று சென்னை ஹேமமாலினி கல்யாண மண்டபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

முகூர்த்த சமயத்தில் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும் திருமதி ஜானகி ராமச்சந்திரனும் வந்திருந்து மண மக்களை ஆசிர்வதித்தனர்.

முதல் நாள் மாலை: செம்மங்குடி — லால்குடி — சிவராமன்; திருமண தினத்தன்று மாலை: கே. வி. நாராயணசுவாமி — எம். எஸ். கோபாலகிருஷ்ணன் — ரகு; இரவு: எம். எல். வி. — கன்யாகுமரி — ஈசுவரன். மூன்று கச்சேரிகளும் கலைமகளுக்குச் சமர்ப்பிக்கப் பட்ட மூன்று வட முத்தாரமாக ஒளிர, முகூர்த்த நேரத்தில், மாம்பலம் சிவா குழுவின ரின் நாதஸ்வர இசை மங்காத மங்கல நாத மாக மண்டபத்தை நிறைத்தது.

முகூர்த்தத்தின் போதும் மாலை வரவேற் பின் போதும் கலைஞர்களும், தொழில் வர்த் தக அதிபர்களும், பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும், அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும், அறிஞர் பெருமக்களும் மற்றும் பல்வேறு துறையினரும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியதானது தமிழகமே வாழ்த்தியதாக அமைந்தது.

புகைப்படம்: சுந்தா.


கண்ணாடி விரியன் பாம்பு
மகுடிப் பாம்பு
உளவு வேலை


நீ புலியை விளாசித் தள்ளு!.. உறவு உண்டாக்கிக் கொள்ள நான் இருக்கேனே!
காளிமுத்து
காளிமுத்து பேசியது தப்புத்தான்.. மன்னிச்சுடுங்க!


கூவம் சீரமைப்புத் திட்டம்
ஊழல் ஆட்சி
கூவம் சுத்திகரிப்புக்கான முயற்சிகள் மீண்டும் தொடங்கப் பட இருக்கின்றன!



1986 ஜூன் 29
மலர் 44 இதழ் 48
அக்ஷய ஆனி 15

கல்கி



# உள்நாட்டு அகதிகள்!

பர்மாவிலிருந்து அகதிகள் வந்தார்கள் — புரிந்து கொண்டோம்; பாகிஸ்தான் பிரிவினையை அடுத்து அகதிகள் வந்தார்கள் — அனுதாபத்துடன் இடமளித்தோம்; பங்களாதேஷிலிருந்து அகதிகள் வந்தார்கள் — பரிவு காட்டினோம்; இலங்கையிலிருந்து வந்தார்கள் — வருத்தத்துடன் வரவேற்றோம். இப்போதோ —

நமது நாட்டின் ஒரு மாநிலத்திலிருந்தே இன்னொரு மாநிலத்துக்கு அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் — திகைக்கிறோம்; வேதனைப்படுகிறோம்; வெட்கப்பட்டுத் தலைகுனிகிறோம். ஆம்! பஞ்சாபிலிருந்து ஹிந்துக்கள் பல்லாயிரக்கணக்கில் விரட்டி அடிக்கப்பட்டு ஹரியானாவுக்கும் தில்லிக்கும் அகதிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள்!

வீடு வாசலையும் உற்றம் சுற்றத்தையும் துறந்து அவர்கள் பஞ்சாபிலிருந்து வெளியேறுவதே நெஞ்சை வேதனைப்படுத்துகிறது என்றால் அவர்கள் அனுபவங்கள் வேதனையுற்ற நெஞ்சில் வேல் பாய்ச்சுவது போலிருக்கிறது. சிறு வியாபாரம் செய்து வந்த ஹிந்துக்கள், வியாபாரமே செய்ய முடியாத நிலைக்கு சீக்கிய பயங்கரவாதிகளால் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர். வாங்கிய பண்டத்துக்குத் தாங்களும் பணம் தர மாட்டார்கள், பிறரையும் கொடுக்க விட மாட்டார்கள்! இதை யாராவது மீறினால் கடையையே தீவைத்துக் கொளுத்தி விடுவார்கள்! அகதிகளாக வந்து சேர்ந்துள்ள பல ஹிந்துக்கள் தங்கள் எதிர்காலம் கேள்விக்குறியானாலும் உயிருக்காவது ஆபத்தில்லாதிருக்கிறதே என்று நிம்மதி அடைந்திருக்கிறார்கள்!

''என் பக்கத்து வீட்டுக்காரரின் மகன் என் கண் முன்னால் கொல்லப்பட்டான்; அந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீள்வதற்கு முன்னால் அந்த வாலிபனின் தந்தையும் கொல்லப்பட்டார்'' என்று நடுங்கும் குரலில் கூறுகிறார் ஓர் அகதிப் பெண்மணி. ''அடுத்த இலக்கு நாங்களாக இருக்கலாம் என்பதால் குடும்பத்தோடு கிளம்பி வந்துவிட்டோம்.''

''பஞ்சாபில் போலீஸ் ஸ்டேஷனை விட்டுக் கான்ஸ்டபிள்கள் வெளியே வருவதே இல்லை'' என்று வேதனையுடன் குமுறுகிறார் ஓர் அகதி இளைஞர். ''போலீஸ் ஸ்டேஷன் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு உள்ளேயே இருக்கிறார்கள்; அவர்களில் பலரே பயங்கர வாதிகள்; அல்லது பயங்கரவாதிகளுக்கு உடந்தையாயிருப்பவர்கள்.''

பல ஹிந்துக்கள் காரணமின்றி சுட்டுக் கொல்லப்படுவதும் ''ஜூன் 21 க்கு முன்பு வெளியேறி விடுங்கள்'' என்ற மிரட்டல் போஸ்டர்களும் பலரை அகதிகளாக்கியுள்ளன. ''இளம் பெண்களை மட்டும் இங்கேயே விட்டுச் செல்லுங்கள்; அவர்களுக்கு ஏற்ற அழகிய ஸர்தார்களை நாங்கள் வழங்குகிறோம்'' என்று பல சுவரொட்டிகள் ஏளனம் செய்கின்றன. இத்தகைய போஸ்டர்கள் போலீஸ் ஸ்டேஷன் சுவர்களிலேயே ஒட்டப்படுகின்றன! அவற்றை நீக்க எந்தச் சீக்கிய போலீஸ் அதிகாரிக்கும் திராணியில்லை! சீக்கியர் நமது சகோதரர்கள்தான்; ஆனால் இந்தக் கயவர்கள் அல்ல அந்தச் சகோதரர்கள்.

இதையெல்லாம் பார்க்க, மக்களைப் பாதுகாப்பதற்கும், பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கும் அவர்களுக்குக் கள்ளத்தனமாக ஆயுதங்கள் கடத்தப்பட்டு வருவதைத் தடுப்பதற்கும் பஞ்சாபின் நான்கு எல்லைப்புற மாவட்டங்களில் ராணுவம் நிறுத்தப்பட வேண்டும் என்ற பி. ஜே. பி. யின் கோரிக்கை மிக நியாயமானதாகவே கருதப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை முன் வைத்து புதுதில்லியில் சத்தியாக்கிரஹ ஊர்வலம் சென்று, தடை உத்தரவுகளை மீறி, கைதான அக்கட்சியின் தொண்டர்களும் தலைவர் வாஜ்பாயியும் பாரத சமுதாயத்தின் நன்றிக்கு மட்டுமல்ல; சீக்கியர்களிலேயே நேர்மையாளரின் நன்றிக்கும் உரியவர்களாகிறார்கள்.

> தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
> தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

# “நான் கட்ட நினைத்தது தாஜ்மஹால் அல்ல”



* அற்புதமான ராஜ பார்வை கொடுத்தீங்க...



கமலஹாஸன் அலுவலகம்.

வாசலில் கல்யாணப்பத்திரிகை கொடுக்கக் காத்திருக்கும் ரசிகர். அவரதுசகாக்கள். டெலிஃபோனில் கமல்தான் வேண்டும் என்று அடம் பிடித்த ரசிகை.

மாடியில் கமலின் ஏ.ஸி. அறை. விக்ரம் படத்தில் **Nijamme Nijamme** சொன்ன கம்ப்யூட்டர். ஒருடூப்ளிகேட் துப்பாக்கி. விக்ரம் படத்தில் முகம்காட்டியமுகமூடி ஒன்று. மற்றபடி எளிமையான ஆனல்எடுப்பான இன்டீரியர் டெகரேஷனுடன் அறை.

சற்றே களைப்பான கண்கள். வலது காலில் சின்ன அடி. சின்னக் கட்டு. காற்றால்நிரப்பப்பட்ட குஷன் இருக்கை. கமல் ரெடி.

* ...ஒருவிக்ரம் கொடுக்க அவசியம் என்ன?

"நடிச்சா சுலபமா வரப்போறது பணம். எதுக்காகப் படத் தயாரிப்பு?"

"வாடகை வீட்ல இருக்கறதுதான் செளகர்யம். ஆனா ஒவ்வொரு வாடகை வீட்டுக்காரனுக்கும் சொந்த வீடு கட்டணும்னு ஏன் ஆசை வருது? அந்த மாதிரிதான் படம் எடுக்கறதும். அடி வயித்தில ஒரு கிளுகிளுப்பு. படம் எடுக்கணும்னு ஒரு விடாப்பிடியான ஆசை...."

"முதல் படமா ஒரு அற்புதமான ராஜ பார்வை கொடுத்த நீங்க, மணம், குணம், காரம், நெடின்னு ஒரு விக்ரம் கொடுக்க அவசியம் என்ன?"

"வெற்றிதான்.... வெற்றின்னு பணம்... ராஜ பார்வைக்குப் பதிலா அந்த நேரத்தில விக்ரமும், இப்ப ராஜ பார்வையும் பண்ணியிருந்தா நல்லா இருக்கும்னு நெனைக்கறேன்."

"காக்கிச் சட்டைக்கு அப்புறம் உங்க படம் எதுவும் ஹிட் ஆகலேன்னு ஒரு பரபரப்பை ஏற்படுத்த நீங்க விக்ரம் தயாரிச்சதா சொல்றுங்களே....?"

"சொல்லட்டும். இன்னும் அழகான கற்பனையெல்லாம் சேர்த்துக்கிட்டு ஒரு சிறு கதையாக்கூட எழுதிட்டுப் போகட்டும்.

* "இந்தப் படம் ஷிடில மூணு கை மாறியிருக்கு... for more profit... for more profit...."

உண்மையில காக்கிச் சட்டை படம் முடியறதுக்கு முன்னாலேயே விக்ரம் பத்தி ப்ளான் பண்ணியாச்சு..."

"ராஜ பார்வை மாதிரி வித்தியாசமான படம் எடுத்திருக்கலாமே...."

"வித்தியாசம், வித்தியாசம்னு அலைஞ்சு ஒரு வட்டத்துக்குள்ள மாட்டிக்கிட்டா கலைஞனும் வித்தியாசமாப் போயிடும். ஆடியன்ஸ் மாறறதே இல்லை.... தீர்மானமா இருக்காங்க. பிடிச்சது கெடைச்சா, அதை யார் கொடுத்தாலும் ஏத்துக்கத் தயாரா இருக்காங்க. பிடிக்கலேன்னா அது கமல்கிட்டேர்ந்து வந்தாக்கூட விசிலடிச்சு கலாட்டா பண்ணிடுவாங்க."

"அதுக்காக லாஜிக் பற்றிக் கவலையே படாம ஒரு கதை எழுதி விக்ரம் படமா எடுத்திருக்கிறது சரியா?"

"லாஜிக் அது இதுன்னு பேசற க்ரூப் எல்லாம் ஒரு மைனாரிட்டி க்ரூப். நீங்க நெனைக்கற கெட்டிக்காரப் படங்களை நான் எடுக்க ஆரம்பிச்சேன்னா நான் உங்களுடைய அட்டைப் படத்தில வரமாட்டேன். நீங்க எல்லாம் 4½ ரூபா டிக்கெட். கொஞ்சம் கீழே இறங்கி வாங்க. வேலை செஞ்சுட்டுக் களைப்பை மறக்கறதுக்காக சினிமா பாக்க வரவங்களோட வந்து உக்காருங்க. என்ன, உங்க சட்டை அழுக்காயிடும். உங்க இன்டெலக்சுவல் லெவல்கூட அழுக்காயிடும். ஆனா அவங்க ரசிக்கிறதைப் பாருங்க. பணம் போட்டுப் படம் எடுக்கிறோம். அதனால் அவங்களுக்குத் திருப்தி தர மாதிரி எடுக்கணும். உங்களைத் திருப்தி பண்ற மாதிரி படம் எடுத்துட்டு ஆஸ்கார் வாங்கலாம். ஆனா பதினெட்டு லட்சத்துக்குப் பதிலா ஆஸ்கார் பரிசைத் தூக்கிக் கொடுத்தா, பணம் கொடுத்தவன் ஒத்துக்குவானா?"

"மூன்றாம் பிறை, சிந்து பைரவி, பூவே பூச்சூடவா போன்ற நல்ல படங்களும் வெற்றி அடைஞ்சிருக்கே?"

"அது அபூர்வமாத்தான் நடக்கும். படம் ஜனரஞ்சகமாகவும் இருந்து கதையம்சமும் இருந்து ஓடறது எப்பவாவது ஒரு தடவைதான். ரொம்ப நல்ல படம் கொடுக்கணும்னு ஏறக்குறைய ராஜ பார்வையோட முழு ஸ்க்ரீன் ப்ளேயும் நானே எழுதினேன். என்னாச்சு? உங்களைக் கேட்டா அது நல்ல படம்னு சொல்லுவீங்க. ஆனா எனக்கு எத்தனை



நஷ்டம்? இது சோப் வியாபாரமில்லை. தொடர்ந்து வெற்றிகளையே கொடுக்க எந்த நடிகனாலயும் முடியாது. நான் தோல்விகளைச் சந்திச்சபோது என்னை எத்தனை பேர் அட்டைல போட வந்தீங்க? ஒரு ஜெயகாந்தனையோ, நஸ்ருதீன் ஷாவையோ அம்ரேஷ்புரியையோ, தி. ஜானகிராமனையோ எத்தனை தடவை அட்டைல போட்டிருக்கீங்க? நான் பாப்புலரா இருந்தாத்தான் எனக்கு இந்தக் கௌரவம் கிடைக்கும்."

"விக்ரம் வெற்றிப் படமா?"

"**We are getting very good reports.** பணம் பண்ணுபவர்களிடமிருந்து பணம் வந்து குவிந்து கொண்டிருக்கிறது. பதினாறு வயதினிலே படத்தைப் போல நாலு பங்கு சக்ஸஸ்னு சொல்லலாம்."

"விக்ரம் படத்தை இப்படித்தான் எடுக்கணும்னு முன்னாலேயே தீர்மானம் பண்ணிட்டீங்களா?"

"எஸ்.எஸ். வாசன் ஒரு தடவை சொல்லி



யிருக்காரு. இந்தியாவில சினிமா பார்க்கற ஒவ்னுட சராசரி புத்தி பதினாறு வயசு புத்தின்னு. இந்த இருபது வருஷத்துக்கு இன்னும் ரெண்டு வயசு சேர்த்துக்கலாம். ஸோ, விக்ரம் படத்தைப் பதினாறு வயசு ஆடியன்ஸுக்காக எடுக்க முடிவு செய்தோம். கதை வேகமா நகரணும். எங்க முதல் தீர்மானம் அறிவு ஜீவிகளின் விமர்சனத்துக்குப் பயப்படக் கூடாது என்பதுதான். நான் பாக்கறவங்க பிரமிக்கிற மாதிரி ஒரு அற்புதமான தாஜ் மஹால் கட்டணும்னு ஆசைப்படலே. எல்லாரும் வந்து ஜாலியா இருந்துட்டுப் போற மாதிரி ஒரு ரெஸ்டாரெண்ட், ஸ்விம்மிங்பூல், ப்ளேகிரவுண்ட் இருக்கற ஒரு பெரிய விடு, மாதிரி கட்டணும்னு நெனேச்சேன். தட் ஈஸ் விக்ரம்.''

''விக்ரம்ல ஏவுகணை, கம்ப்யூட்டர்னு எல்லாம் வருதே.... நீங்க சொல்ற பதினாறு வயசு ஆடியன்ஸுக்கு இதெல்லாம் எவ்வளவு தூரம் புரியும்?''

''சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் பத்தி எத்தனே பேருக்குத் தெளிவா தெரியும்? ஹாலி வால் நட்சத்திரம் பத்தி எவ்வளவு பேர் புரிஞ்சுக்கிட்டாங்க. இருந்தாலும் தந்தி பேப்பர்ல நியூஸை உக்காந்து படிச்சு ரசிக்கலே?''

''பல ஆங்கிலப் படங்கள்ல ரசித்த காட்சிகள், படித்த சில புத்தகங்கள்னு உக்காந்து பேசிக் காட்சிகளேத் தீர்மானம் பண்ணினதா சுஜாதா சொல்லியிருந்தாரே.... அது படத்தோட தரத்தைக் குறைக்கிற மாதிரியில்லே?''

''நாங்க ஏன் பாசாங்கு செய்யணும்? உண்மையைச் சொல்றதிலே என்ன வெட்கம்?

*** ''அறிவு ஜீவிகளேத் திருப்திப் படுத்தற மாதிரி படம் எடுத்து ஆஸ்கார் வாங்கலாம். ஆனு பதினெட்டு லட்சத்துக்குப் பதிலா ஆஸ்கார் பரிசைத் தூக்கிக் கொடுத்தா பணம் கொடுத்தவன் ஒத்துக்குவானு?''**

எங்க அப்பா கொடுத்த மூக்கு. இந்த மூஞ்சைத் தவிர எங்கிட்ட எதுவுமே ஒரிஜினல் இல்லே. யார்தான் ஒரிஜினல்? எல்லா எழுத்தாளர்களும் சுயம்பு ஞானிகளா? ஜேம்ஸ் பாண்டைப் பார்த்துக் காப்பி அடிச்சேன்னு சொன்னு, 'எத்தனே பேரால இந்த அளவுக்குப் பிரமாதமா காப்பி அடிக்க முடியும்'னு திமிராக்கூடக் கேட்பேன்.''

''இந்தப் படத்தில ஏன் அம்ஜத்கான்? டிம்பிள் கபாடியா?''

''கதை அன்னிய தேசத்துக்குப் போகுது. கொஞ்சம் அன்னிய முகமா இருக்கட்டுமேன்னுதான். ஆப்பரிக்காவில இஜாம்பா, ஜுஜாம்பான்னு ஒருத்தர் இருக்கார்னு சொன்னு நம்பலாம். ஆப்பிரிக்காவில வி.கே. ராமசாமின்னு நம்ப முடியுமா? அது போலத்தான்.''

''விக்ரம் படம் பத்தி எல்லாரும் டெக்னிக்கலா ரொம்ப நல்ல படம்னு சொல்றாங்க.''

''டெக்னிகல் விஷயத்தில நாங்க அகலக் கால் வச்சதென்னவோ உண்மைதான். ஆனு பாண்ட் கிழியாம தப்பிச்சுட்டோம்! படத்தில வர ஏவுகணை அட்டைல பண்ணினது இல்ல. நிஜமான ஸ்மைல். 750 கிலோ எடை. மினிட்மேன் II ன்னு ஒரு ஏவுகணை. மாஸல்ன்னு ஒரு பிரிட்டிஷ் மிஸைல். சுஜாதா காட்டினுர். இது ரெண்டுக்கும் கலப்பு மணம் பண்ணி 'அக்னிபுத்ரா'. உருவாச்சு. இந்த ரூம்ல இருக்கற கம்ப்யூட்டர்கூட நடிச்சிருக்கு. நிஜ கம்ப்யூட்டர்கள்தான் படத்தில. ரெண்டு பேர் உட்கார்ற மாதிரி ஒரு ப்ளேன் வருதே... நாங்க பண்ற கொனஷ்டைக்கெல்லாம்

வாடகை ப்ளேன் ஒத்துவராதுன்னு ஒரு லட்ச ரூபா செலவில நாங்களே பண்ணி னது. நிஜமாவே ஓடும், பறக்கும்! விதம் விதமா துப்பாக்கிகள் தயார் பண்ணினோம். ஐ மீன் பொம்மைத் துப்பாக்கி. குண்டை வெளியில துப்பற மாதிரி கூட ஒரு மாடல். ஆனா அது சரியா அமையலே.''

''ஏவுகணை, ப்ளேன் இதெல்லாம் எங்க தயார் பண்ணினீங்க?''

''நம்ம கிண்டியிலதான். ஷூட்டிங்குக்கு டயமாச்சு. ப்ளேன் எங்கேன்னு கேட்டா, மெட்ராஸ்ல பெய்த ராட்சத மழைல ஃபாக் டரியில மூழ்கிக் கிடந்தது. ஏவுகணையும் தண் ணில நீச்சலடிச்சிட்டிருந்தது. முதல் ஷெட் யூலே கான்ஸல்பண்ணும்படி ஆச்சு. விக்ரம்ல கம்ப்யூட்டரை இன்னும் அதிகமா பயன் படுத்தற எண்ணம்கூட இருந்தது. டைட் டில்ஸ் எல்லாம் கம்ப்யூட்டர்ல போட நெனைச் சோம். **Kamal I** ங்கற கம்ப்யூட்டர்ல சுஜாதா வும், பெரிய நாயகமும் புரோக்ராம் கூட அமைச்சிட்டிருந்தாங்க. ஆனா அது சிக்கலான 'ப்ரோக்ராம். முடிக்கறதுன்னா ரிலீஸ் தேதி தள்ளிட்டே போயிருக்கும்.''

''விக்ரம்ல வேற என்ன புது மாதிரி விஷ யங்களைச் செய்ஞ்சிருக்கீங்க?''

'''வேற எந்த இந்தியப் படத்திலயும் மினி யேச்சர்களை இவ்வளவு தூரம் பயன்படுத் தியதில்லே. விக்ரம்ல மினியேச்சர்களை எங் கெங்கே யூஸ் பண்ணியிருக்கோம்னு நான் இப்பச் சொல்லமாட்டேன். சுலபத்தில கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு அந்த மினியேச்சர்களை அமைச்ச ஆர்ட் டைரக்டர் சலம் பாராட்டுக்குரியவர். அப்புறம் இந்தப் படத்தில 125 ஒட்டகம், 65 குதிரைங்கன்னு பயன்படுத்தியிருக்கோம். ராஜஸ்தான்ல போய், ஷூட்டிங் ஸ்பாட்ல நின்னுகிட்டு பின்னாடி திரும்பிப் பார்த்தா, 125 ஒட்டகம், 65 குதிரை, அந்த ஒட்டக, குதிரைச் சாணங் கள், அவைகளோட உறுமல்கள்.... அந்த விலங்குகளைக் கவனித்துக் கொள்ள இருந்த ஆளுங்க..... ஒரு சின்ன படையெடுப்பு மாதிரி ஃபீலிங் வந்தது.''

''நீங்கதான் தளபதியாக்கும்?''

''ஹெஹ்ஹே.... தளபதியா.... பணம் போட்ட ராஜா சார்.... மஹாராஜா!''

''அழகழகான அரண்மனைகளை எங்கே பிடிச்சீங்க?''

''டைரக்டர் ராஜசேகர் ஒரு நல்ல லொகே ஷன் இருக்கு, இருக்குன்னு சொல்லிட்டிருந் தாரு. நான் அதைவிட நல்ல லொகேஷன் ஒண்ணு சொல்றேன்னு சொல்லிட்டு, இந்தி யன் ஏர்லைன்ஸ்ல போடற ஸ்வாகதம்கிற மாகஸினை, அவங்க பர்மிஷனோட எடுத் துட்டு வந்தேன். அந்த பத்திரிகையிலதான் ராஜஸ்தான் அரண்மனை பத்தி இருந்தது. கடைசியில பார்த்தா டைரக்டர் ராஜசேகரும் அதே பத்திரிகையோட வந்து நிக்கறாரு. ராஜஸ்தான்ல ஜெய் ஸால் மீர் அரண்மனை. படத்தில எலிக் கோயில் வருதே, நிஜமாவே, எலிக் கோயில் ஒண்ணு இருக்கு! பிக்கானீர் பக்கத்தில தேஷ்நேக்னு ஒரு ஊர். அங்கே ஒரு நாராயணி கோயில். எலிகளை அங்கே கும்பிடறாங்க. நூற்றுக் கணக்கில அங்க எலி கள் ஊர்ந்திட்டிருக்கும். அங்க எப்படியும் படம் எடுக்கணும்னு தீர்மானம் பண்ணிட் டோம். ஒரு சின்ன க்ரூப் மட்டும் கார்ல 600 மைல் பிரயாணம் பண்ணினோம். நாங்க போன நேரம் எலிங்களெல்லாம் தூங்கப்

* ''ஜேம்ஸ்பாண்டைப் பார்த்துக் காப்பி அடிச்சேன்னு சொன்னா, 'எத்தனை பேரால இந்த அளவுக்குப் பிரமாதமா காப்பி அடிக்க முடியும்'னு திமிரா கூடக் கேட்பேன்.''



போய்டுச்சுன்னுங்க. எழுப்பிப் படமெடுத்தோம். ஆனா அந்த பிரயாணத்தால நாங்க ரொம்ப டயர்டாயிட்டோம். விட்டா போதும் சேர்ந்த மாதிரி மூணு நாள் தூங்கத் தயாராயிருந்தோம். ஜஸ்ட் மூணு ஷாட் தான் படத்தில வரும். ஆனா அதை மிஸ் பண்ணிடக் கூடாதுன்னு ஒரு வைராக்கியம்...''

''எக்கச்சக்கமா பப்ளிஸிடி கொடுத்தீங்க. படம் அந்த அளவுக்கு இல்லியேன்னு ஒரு ஏமாற்றத்தைக் கொடுக்குதே?''

''பப்ளிஸிடி கொடுக்கிற எந்தப் படத்துக்கும் இந்தத்தலையெழுத்துத்தான். மன்மோகன் தேசாய்கூட சொன்னாரு. அதிக விளம்பரம் பண்ணின படங்கள் ரிலீசானவுடனே, 'இதுக்கா இவ்வளவு அமர்க்களம் பண்ணினுங்க'ன்னுதான் பாக்கற அத்தனை பேரும் சொல்வாங்கன்னாரும். முதல் மூணு வாரத்



துக்கு இந்தச் சலசலப்பு இருக்கும். என்னைப் பொறுத்தவரை நல்ல படம்கறது நல்லா ரசிக்கும்படியான படமா இருக்கணும். எல்லோரும் நிராகரிச்ச பொருளை மட்டும் ரசிக்கறதுதான் கெட்டிக்காரத்தனம்னு சிலர் நெனைக்கலாம். அது ஒரு காம்ப்ளெக்ஸ். இந்தப் படத்தைப் பொறுத்தவரைக்கும் ஸிடியில மூணு கை மாறியிருக்கு. மூணு கை மாறியிருக்குன்னு வாங்கினவன் கை கழுவிட்டான்னு அர்த்தமில்ல. **for more profit.... for more profit....**''

''இந்தப் படத்தில நீங்க பண்ணியிருக்கிற சில டான்ஸ் மூவ்மென்ட்ஸ் அடிக்கடி ரிபீட் ஆகிற மூவ்மென்ட்ஸ்னு தோணுதே....''

''இதப் பாருங்க, ஒரு நடிகனுக்கு ஒன்பது மூஞ்சி இருக்கும். ஒன்பது வகை பாவங்கள். திரும்பத் திரும்ப அதையேதான் பண்ண வேண்டி இருக்கும். இப்பப் புதுசா பண்ணனும்னா நான் பாலேதான் கத்துக்கணும். சிவாஜி சார் ஒவ்வொரு படத்திலயும் அவரு டைய நடையை வைப்பார். ஜனங்க கை தட்டி ரசிப்பாங்க. யாராவது சின்னப்பசங்க, ஸ்டைலா நடந்தாலும், 'சிவாஜி மாதிரி நடக்கறுன்டா'ம்பாங்க. புதுசு புதுசா பண்ணனுங்கறதுக்காக (இடது பக்கம் சாய்ந்து) இப்படி நடக்கணும், (வலது பக்கம் சாய்ந்து) அப்படி நடக்கணும்னா, கடைசியில தவழ்ந்து வாரணும்கிற நிலைமை உருவாகிடும்.''

''விக்ரமுக்கு அடுத்தபடி?''

''**Keep producing.**''

''அடுத்த படத்தை நீங்களே டைரக்ட் பண்ணப் போறதா சொன்னீங்களே?''

''டைரக்ட் பண்ணுவது ரொம்பச் சிக்கல். பார்க்கலாம். டைரக்டர் ஆகவேண்டுமென்று தான் இந்த ஃபீல்டுக்கு வந்தேன். ஆனா அதிர்ஷ்டவசமா நடிகன் ஆயிட்டேன். நான் டைரக்ட் பண்ணினா நான் நடிக்காம இருப்பதுதான் நியாயம். ஆனா அதை ரசிகர்கள் ஒப்புக் கொள்ளமாட்டாங்க.''

*** ''தொடர்ந்து வெற்றிகளையே கொடுக்க எந்த நடிகனாலும் முடியாது. நான் தோல்விகளைச் சந்திச்சபோது என்னை எத்தனை பேர் அட்டைல போட வந்தீங்க?''**

''படத்தைப் பார்த்துவிட்டு சுஜாதா என்ன சொன்னார்?''


''படம் முடிஞ்சப்புறம் அவர் இன்னும் பார்க்கலே. ஆனா அப்பப்பப் பார்த்தாரு. பார்த்தவரை **he was very happy:**''

கமலஹாஸன் உணர்ச்சி வசப்பட்டும், கோபப்பட்டும், கைகளை ஆட்டியும், நிறையப் பேசினார். ஒரே நாளில் 2500 கண்களைத் தானம் செய்த அவரது ரசிகர்களை, இரத்த தானம் செய்யும் அவரது ரசிகர்களை, தோரணம் கட்டும் ஜாதியைச் சேராத அவரது ரசிகர்களைப் பற்றி பத்திரிகைகள் எழுதவேயில்லை என்று குறைப்பட்டார். பேச்சில் ஹாஸ்யம் இயல்பாகத் ததும்பியது. நாங்கள் அங்கங்கே மனம் விட்டுச் சிரிக்க நேர்ந்தது.

சுஜாதாவுக்கு விக்ரம் படத்தில் இணைந்து வேலை செய்தது ஒரு மகத்தான அனுபவம் எனில் அந்த விக்ரமைப் பற்றி கமலுடன் நாங்கள் பேசிய அந்த இரண்டு மணி நேரம் எங்களுக்கும் ஓர் அற்புத அனுபவம்தான்

சந்திப்பு: ஜெயமன் மதன்

சந்திப்பின்போது
புகைப்படங்கள்: ஏவி. பாஸ்கர்


Blackbelt
Blackbelt
BRIEFS & BANIANS
For strong ones
who wish to remain in style and comfort.
BRIEFS
Sultan
BANIANS
BOXER
TRUNKS
FIANCEE
COMFORT BRIEFS
SAHEB
BANIANS
MARSHALL
BRIEFS
ARMS-AH-185-1
Quality Products of Aristocrat Hosiery Pvt. Ltd.
Post Box No. 3359, Bombay-400 003. Tel: 321861 • 330251

## வட்ட மேஜை

* மாவட்டத்துக்கு ஒரு மாதிரி பள்ளிக்கூடம் அமைக்கலாம் என்ற விஷமத்தனமான போர்வையில், ஹிந்தியைத் திணிக்கும் மத்திய அரசுக்கு, 'மாதிரிப் பள்ளிகளா? தந்திரப் பள்ளிகளா?' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்த தலையங்கத்தின் மூலம், சவுக்கடி கொடுத்துள்ளதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சாங்கியம், ஜி. பாரதி.

* அரசியல் சாசனத்தைச் சுட்டிக் காட்டி எழுதப்பட்டிருந்த தங்களின் எச்சரிக்கைத் தலையங்கம் மனம் விட்டு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

சிங்காரப்பேட்டை, வெ. இரமேஷ்நாதன்.

* 'கல்கி'யின் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை வெளியாகும் கட்டுரைகளைப் படிப்பதால் மனத்தில் ஏற்படும் சோக நிழல்களை நீக்கும் அருமருந்தாய் அமைந்தது இயற்கை எழில் கொஞ்சும் அட்டை வண்ணப்படம்.

கும்பகோணம் — 1, பா. கிருஷ்ணதாஸ்.

* ரப்பர் கழகம் பற்றிய கட்டுரை படித்தேன். அதன் நிர்வாகத்தில் அரசு காட்டும் 'ரப்பர்'த்தனம் வேதனையூட்டியது!

திருமருகல், எம். வேணுப்ரியன்.

* கல்கி நிருபரின் கேள்விக்குப் பொறுப்புணர்வுடன் பதிலுரைத்த கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர் திரு. சையத் முனிர் ஹோதா நமது பாராட்டைப் பெறுகிறார். பீஹாரிலிருந்து வந்த அவர் கன்னியாகுமரி மாவட்டத்தை உண்மையிலேயே மிகவும் நேசிப்பதை அவரது பேட்டியின் மூலம் நன்கு உணர முடிகிறது.

காட்டுமன்னார் கோயில், இரா. பழநி.

* மண்டைக்காடு இனக் கலவரம் பற்றி எழுதியுள்ள இந்த இதழில் 'எல்லாம் ஒன்றே' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்த துணுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

கொப்பம்பட்டி, செ. அன்பு மதியழகன்.

* பத்மனாபபுரம் அரசு மருத்துவமனை பற்றிய கட்டுரை படித்தேன். 'ஜெனரல் வார்டே போதும்' — என்று சுப்பிரமணிய பிள்ளை கூறியதைப் படித்த போது பொதுமக்களை நினைத்து வேதனையாகவும், இதற்குக் காரணமானவர்களை நினைத்து எரிச்சலாகவும் இருந்தது.

ஒண்டிப்புதூர், கா. க. வேலாயுதன்.

* 'ஜெரா'வின் சாலைத் திருப்பங்களும் 'லையல'வின் 'சக்கரம் பூட்டிய வாகனமும்,' காதலின் இரு வேறு முனைகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், முடிவில் தோல்வி எனும் மையத்தையே வந்தடைந்திருந்தன. இரு கதைகளும் வெரி சூபர்ப்.

மதுரை — 1, மதுமலரன்பன்.

* "பூக்களைப் பறிக்காதீர்கள்" விமர்சனத்தில் ஒரு கிலோ ஐஸாவது தேறும் போலிருக்கிறதே! நீர் என்ன நதியாவின் தீவிர ரசிகரோ...?!

நெல்லிக்குப்பம், ஜெ. முகம்மது பாரூக்.

* மனித குலத்தையே காதலிப்பதாகக் கூறும் நராக நம் எண்ணத்தில் உயர்ந்து விட்டார்!

கொடைக்கானல், வி. பாலன்.

* புல்லாங்குழல் மேதை 'மாலி'யைப் பற்றி அவரது மாணவி சேசியின் 'நினைவு'த் தொகுப்பு மனத்தைத் தொட்ட அஞ்சலியாக அமைந்தது.

கும்பகோணம் — 1, பி. கே. செல்விதாசன்.

# அட்டைப்படம்தான் அருமருந்து

* கல்கி இதழில் என்னுடைய புரவி ஆட்ட வண்ணப்படம் வெளியிட்டதற்கு மிக்க நன்றி. பூனாவிலிருந்து தஞ்சைக்கு இந்தக் கலை வந்ததாக ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். இது தவறு. தஞ்சையை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் புரவியாட்டக் கலையிலே வித்தகன். இதிலிருந்து, சோழர் காலத்திலேயே புரவி நாட்டியக் கலை தஞ்சையில் போற்றிப் பாதுகாக்கப்பட்டது புலனாகும். 1798க்குப் பின் நலிவுற்ற இக்கலை, பின்னர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புத்துயிர் பெற்றது. சோழர்கள் காலத்திலேயே வித்தூன்றி, நாயக்க — மராட்டிய மன்னர்கள் காலத்திலே வளர்ந்து, என்னுடைய 40 மாணவர்கள் இந்தியா முழுவதும் இன்று ஆடி மகிழ்விக்கும் கலையாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

பெங்களூர் — 51,
கலைமாமணி த. சி. சுந்தரமூர்த்தி.

* கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியினால் நான் மீண்டும் மண்ணெண்ணெய் லைசென்ஸ் கிடைக்கப்பெற்று வியாபாரம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளேன். மனுக்களும் தந்திகளும் முறையீடுகளும் சாதிக்க முடியாததை தங்கள் கல்கி சாதித்துத் தந்துள்ளது. எனக்கு இழைக்கப்பட்ட அநீதியை நீக்க உதவிய தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை, சா. இராமகிருஷ்ணன்.



"உங்க எஜமானியம்மா வெத்தலைப் பாக்கு போடற பழக்கம் உண்டா மாதையா?''

இன்பா, கட்டிலில் முழங்காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்து கேட்க —

மாதையன், மீசையை ஒரு கையால் தடவி விட்டவாறே சொல்கிறான்.

''வெத்தலைப் பாக்கு இருந்தா, சோறு தண்ணி வேண்டாங்க அவங்களுக்கு... அம்மா வுக்குச் சீதனமா — தெற்கு பாத்த நிலத்துல வெத்தலைக் கொடிக்காலே வந்தது... ராமா யணப் பொஸ்தவம் மாதிரி பெரிய வெள்ளி வெத்தலைப் பெட்டி, பாக்கு, ஏலம், கிராம்பு, சுண்ணாம்புன்னு ஒவ்வொண்ணுத்துக்கும் தனித்தனியா சம்புடம். அய்யோ... அவங்க வெத்தலைப் போட்டுக்கற அழகே தனிங்க...''

அவன், அந்த நாளைய ஞாபகங்களில், இரு விழிகளையும் செருகியபடி சொல்கிறான்.

இன்பா, உதட்டைக் கடித்தபடி, அந்த அறையைப் பார்வையால் அளந்தபடி உட்கார்ந் திருக்கிறாள்.

மனசுக்குள், எப்பொழுதோ, வெற்றிலையைக் குதப்பியபடி, ஊஞ்சலில் சாய்ந்த நிலையி லேயே பிராணனை விட்ட — அவளது வளர்ப்புத் தாயின் முகம்...

மரணமென்பது — ஒருவரின் வாழ்க்கை நாவலுக்கு ஆண்டவன் வைக்கும் முற்றுப் புள்ளி... சில பேரின் விதி — சிறுகதையாகவே அல்பாயுசாக ஆயுசு முடிந்து விடும்தான்... ஆனாலும் எவன் கதையை நாவலாக்குவது — எவன் கதையைச் சிறுகதையாக்குவது என்பது கடவுளின் சித்தமல்லவா...

அப்படிப் பார்க்கப் போனால் — இந்த மங்களாம்பாளின் கதை... முற்றுப் பெறாமலேயே, கடவுள் என்கிற கதாசிரியனின் கையிலிருந்து பிடுங்கப்பட்டதா...?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்றே இன்பாவிற்குத் தோன்றியது..

''அப்பாவோட வாழப் பிடிக்காம, பெரியம்மா ஓடிப் போயிட்டா...

''அப்பாவைக் கல்யாணம் செஞ்சுக்கறதுக்கு முன்னாலேயே — பெரியம்மாவுக்கும், அவ அத்தை மகனுக்கும் ஒரு லிங்க் இருந்ததாம். எப்படியும், அத்தானைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்னு இருந்திருக்கா பெரியம்மா... அவங்க குடும்பத்துல என்ன தகராறோ... பெரியம்மாவோட அப்பா, ரோஷம் தானாம, எங்க அப்பாவை மாப்பிள் ளையாப் பிடிச்சாரு...''

''மனசுல ஒருத்தனையும், வாழ்க்கையில இன்னொருத்தனையுமா வெச்சு வாழப் பிடிக் காமத்தான், அந்த ஆளோடேயே ஓடிப் போயிட்டா... கடைசியில, எங்க அப்பாவுக்குத் தான் கெட்ட பேரு...''

நந்துவுக்கு அப்பாவின் மீதுள்ள அபரிமிதமான பிரியத்தை, புன்னகையுடன் அவள் ரசித்தாலும் — பல்லிடுக்கில் அகப்பட்ட பாக்குத் தூள் போல ஏதோ ஒன்று நெருடாமல் இல்லை...

அதற்கு முக்கியமான காரணம், நாலைந்து நாட்களாக அவள் தங்கியுள்ள அறை...

மாதையன், கட்டிலையும், மெத்தையையும் தான் மாற்றிப் போட்டான். அறையைத் துப்புரவாகப் பெருக்கினான். அலமாரியில் இருந்த சில சாமான்களையும், புத்தகங்களையும் எடுத்துவிட்டு, அவளது பெட்டி படுக்கையை வைக்கப் போனபோது — இன்பா, தடுத்து விட்டாள்.

"என் பெட்டியை இப்படி ஓர் ஓரமா வை மாது... அந்த அலமாரியில் இருக்கிற எதையும் கலைக்காதே!"

"ஏதோ பழசு, பட்டு இருக்கு... அம்மாவோடது — எடுத்து, தூசு தட்டிப் பளிச்சுனு வைக்கிறேனே..."

இன்பா புன்னகையுடன் மறுத்து விட்டாள்.

அது என்னமோ — அந்தச் சின்னக் கூடமும், படுக்கையறையும் — கூடத்தின் எதிர்ப்புறமிருந்த பூஜை அறையும் மனசுக்கு இதமாய் இருக்கிறது.

இத்தனைக்கும், அவளுக்கோ — அவள் அப்பாவிற்கோ உருவ வழிபாட்டில் அத்தனை நம்பிக்கை கிடையாது. அவள் அம்மா, புருஷனை வணங்குவாள். தனியாய் அலமாரியில் நாலைந்து சாமி படம் மாட்டி வைத்திருப்பாள்.

கணவரும் தன் கூட சாமி கும்பிட வேண்டும் என்றெல்லாம் அவள் எதிர்பார்த்ததில்லை. அவரும் பெண்டாட்டி, சாமி கும்பிடுவதைத் தடுத்ததில்லை.

எப்பொழுதாவது—இன்பா, அப்பாவைக் கேட்பாள்.

"உங்களுக்குக் கோவிலுக்குப் போறதோ, சாமி கும்பிடறதோ பிடிக்காதாப்பா..."

"கோவில்லே மட்டும்தான் சாமி இருக்கா என்ன... உனக்குள்ளேயும், எனக்குள்ளேயும் இல்லையா... இன்பா... கிரீடம் வெச்சு, நிறைய நகைங்கள மாட்டி, கையில் சங்கையும், சக்கரத்தையும் கொடுத்து, தாமரைப்பூ மேலயும், அன்னபட்சி மேலேயும் உட்கார்ந்திருக்கிறதா கற்பனை செஞ்சு பார்க்கிறப்ப, சாமி, நம்மைவிட்டு ரொம்ப ரொம்ப விலகியிருக்கிறது போலவும், யாராலேயும் எட்ட முடியாத வஸ்து போலயும் ஒரு பயத்தை உண்டு பண்ணறது..."

இன்பா இதைக் கேட்டுச் சிரிப்பாள்.

அப்ப, சாமியையும் நம்மளை மாதிரி பேண்ட், ஷர்ட், மிடி, ப்ளவுஸ் போட்டுக்கச் சொல்றீங்களா?"

"பேண்ட் ஷர்ட் போட்ட மனுஷனுக்குள்ளேயும் — மிடி போட்ட மனுஷிக்குள்ளேயும் இருக்கிற சாமிய அப்படியே பார்க்கிறதுலஎன்னம்மா தப்பு? அவருக்குமாத்திரம் எதுக்காகத் தனி மேக்கப்?"

அப்பா, இதுபற்றியெல்லாம் பேச ஆரம்பித்தால் லேசில் ஓய மாட்டார்.

இன்று —

மங்களாம்பாளின் பூஜையறையைப் பார்த்ததும் அப்பாவின் வாதங்கள் அனைத்தும் காற்றில் கரைந்தாற் போலிருக்கிறது.

பெரிய பூஜை மண்டபம். மண்டபம் முழுக்க சின்னச் சின்ன வெண்கல மணிகள். மணிகளில் படர்ந்துள்ள ஒட்டடை — அந்த வீட்டில் மங்களாம்பாளின் மறைவுக்குப் பிறகு தாங்களும் ஊமைகளாகி விட்டதை, மௌனமாய்ச்சொல்வதுபோல...

மண்டபத்தின் உள்ளே காமாட்சியம்மன் ஐம்பொன் விக்கிரகம். அறையிலுள்ள கண்ணாடி அலமாரி முழுக்க ஆன்மீகப் புத்தகங்கள். கிழக்குப் பார்த்த சுவரில் வரலட்சுமி விரதத்துக்காக வரைந்த அம்மன் உருவம்...

கைதேர்ந்த ஓவியர் வரைந்தது போல...

அம்மனின் உதடுகள் மட்டுமில்லை... கண்களில் கூட சிரிப்பு வழிந்தது...

"இது யார் வரைஞ்சது மாது?"

இன்பா, மாதையனைக் கேட்கிறாள்.

"பெரியம்மா வரைஞ்சதுதாங்க. அவங்க கைவிரல் பத்தும் கதை பேசும். வாசல்லே கோலம் போட்டாங்கன்னா நாள் முழுக்கப் பார்த்துட்டே இருக்கலாம்..."



இன்பா, மறுபடி மறுபடி அந்த அம்மன் முகத்தையே உற்றுப் பார்க்கிறான்

மங்களாம்பாள் — தன்னைப் போலபேலட்டும், பெயின்ட் டியூப், பிரஷ் சகிதம் இதை வரையஉட்கார்ந்திருக்கமாட்டாள்; நிச்சயம்.

கொஞ்சம் காவி வர்ணம்... கோபி மஞ்சள், சுவருக்கு வெள்ளையடிக்க உபயோகிக்கும் ராபின் புளூ... பச்சை மட்டும் ஏதோ இலையின் சாறு போலத் தெரிந்தது...

இவ்வளவுதான்... இருந்தாலும் ஏதோ அஜந்தா குகைக்குள் வந்துவிட்டதைப் போன்ற உணர்வு —

தவிரவும் — ஒவ்வொரு நிலை வாசற்படி விளும் மஞ்சள் பூசி, பொட்டு வைத்திருந்த நேர்த்தி...

பெரிய ஆஞ்சனேயர் படத்துக்கு, பொட்டு வைக்க ஆரம்பித்து, முழுசும் பூர்த்தியடையாமல் பாதியிலேயே நின்ற கோலம்...



* ஒரு தடவை சர்ச்சில், கடை வீதியில் நடந்து கொண்டு இருந்தார். அப்போது படங்கள் விற்கப்படும் கடை அவர் பார்வையில் பட்டது. என்ன ஆச்சரியம்! அந்தக் கடை முழுவதும் சர்ச்சிலின் படங்கள் தொங்கிக் கொண்டு இருந்தன. சர்ச்சிலுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஆவலுடன் கடைக்காரரை அணுகிய சர்ச்சில், ஏன் என்னுடைய படங்களை மட்டுமே விற்பனைக்கு வைத்துள்ளாய். மற்றவர்களின் படங்களையும் விற்பது தானே எனக் கேட்டார். அதற்குக் கடைக்காரர், 'மற்றவர்கள் படங்கள் எல்லாம் வித்துப் போச்சுங்க' என அமைதியாகக் கூறினார்.

— ஏ. கே. நாசர்.



நந்து சொன்ன — 'பெரியம்மா, எவன் கூடவோ ஓடிப் போயிட்டா' — என்கிற கதைக்கும், இங்கே இவள் பார்த்து, தொட்டு, அனுபவிக்கிற ஒவ்வொரு விஷயத்துக்கும், நிறைய முரண்பாடுகள் இருப்பது போல உணர்கிறாள் அவள்.

அன்று — அப்பாவிற்கு எழுதிய கடிதத்தில் கூட இதுபற்றிச் சில வரிகளை எழுதுகிறாள்...

... இந்த வீட்டோட ஒவ்வொரு பகுதியும் எனக்கு முன்னேயே பழக்கமான இடம் மாதிரி இருக்கு... அதுவும் — நந்துவின் பெரியம்மா... அவங்களோட முகத்தைக் கூட இது வரைக்கும் நான் பார்க்கலையின்னாலும் — அவங்களைப் பத்தின பேச்சு வரும் போதெல்லாம் என் தொண்டையில் துக்கம் அடைக்கிறது... ஏன்னு தெரியலை...

அன்று —

அப்பாவிற்குக் கடிதம் எழுதி முடித்தவுடன் — பக்கத்திலிருந்த ஸ்கெட்ச் நோட்டில் — கைக்கு வந்த வாக்கில் ஏதோ வரைந்து கொண்டிருந்தவள் —

அறை வாசலில் நிழலாடியதைப் பார்த்ததும் 'சட்'டென நிமிர்கிறாள்...

அறை வாசலில் இரு கைகளையும் ஊன்றிய படி லோகநாதன்தான்...

அவள், கட்டிலிலிருந்து எழுந்து நிற்கிறாள்.

"உள்ளே வாங்க..."

"வேண்டாம்மா. அவ போனதுக்கு அப்புறம், நான் இந்த வாசலைத் தாண்டி உள்ளே வந்ததே இல்லே... ஆமா... நந்து எங்கே?"

"டவுனுக்குப் போயிருக்கான்... ஃபிலிம் வாங்கிட்டு வர்றதுக்காக... இன்னிக்கு பக்கத்துல இருக்கிற அணைக்கட்டுக்குப் போகலாம்னு..."

"பேஷ்... போயிட்டு வாங்க. அணைக்கட்டுக்குப் பக்கத்துலதான் நம்ம தோப்பு இருக்கு... கையில் சித்ரான்னம் ஏதாவது கலந்து எடுத்துட்டுப் போகலாமில்லே... புவனா, நல்லா இருந்தப்ப எல்லாம், நானும் புவனாவும் அங்கே போய் அடிக்கடி தங்கியிருக்கோம்."

"பெரியம்மாவுக்குக் கூட ரொம்பப் பிடிச்ச இடமுங்க அது..."

விதரணை புரியாத மாதையன், இடையில் புகுந்து சொல்ல, லோகநாதன் அவனைப் பார்வையாலேயே கண்டிக்கிறார்.

நிலைமையைச் சகஜமாக்க வேண்டி — இன்பா 'சட்'டெனச் சொல்கிறாள்.

"இப்பத்தான் என்ன... நீங்களும், நந்துவோட அம்மாவுமா வாங்களேன்..."

"சேச்சே... நீங்க சிறுசுங்க — உங்க கூடப் போய்..."

"ஏன் சார்? நாங்க என்ன, அங்கே போய் லவ் டூயட்டா பாடப் போறோம்... ரெண்டு பேரா போறதைவிட, நாலு பேரா போறதுல இன்னும் கொஞ்சம் குஷி இருக்கும்... என்ன மாது... நீ என்ன சொல்றே?"

"ஐய்யோ... அந்த மாதிரி ஒரு காலம், மறுபடி வராதான்னு இருக்கும்மா..."

லோகநாதன், நரைத்த மீசையைத் தடவியபடி சிரிக்கிறார்.

"எல்லாம் சரிதான்... புவனாவுக்கு உடம்பு முடியுமான்னு தெரியலையே..."

"கண்டிப்பா முடியும். வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறதே பாதி வியாதி... நீங்க, அவங்களையும் கிளம்பச் சொல்லுங்க..."

லோகநாதன், ஏழெட்டு வயது குறைந்தவர் போல மாடிக்கு விரைகிறார்.

சந்தோஷத்தில் — விஷயத்தை டாக்டருக்கு போன் செய்து சொல்ல வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை.

தோப்பில், தன்னால் ஏற்படப் போகும் ரகளையைப் பற்றிச் சற்றும் கற்பனை செய்து பார்த்திராத இன்பா, பிக்னிக்குக்குத் தேவையான சகலத்தையும் கவனிக்கத் துள்ளி ஓடுகிறாள்.

(தொடரும்)



மின்னும் மேனி
மெருகுக்கு ரெக்ஸோனா
Rexona
REXONA
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

# இரட்டைச் சித்திரமாய்...

"என்னங்க, கல்யாணி வந்திருக்கா!"—கீழே இருந்தபடியே குரல் கொடுத்தாள் என் மனைவி தமிழரசி.

சட்டென்று என் மனசுக்குள் பயம் சூழ்ந்து ஆரம்பித்த மாதிரி இருந்தது. ஏனோ தெரியவில்லை. அவனை நான் ஏன் சந்திக்க வேண்டும்? கண்டு கொள்ளாமல் போய்விட்டால் என்ன?

நேருக்கு நேர் அவனை நிறுத்தி விசாரிக்க வேண்டும் என்ற நினைவுதான் என்னைப் பயமுறுத்தி, 'தப்பிப் போ' என்று எச்சரித்தது. அவனை நாம் வேறு விசாரித்துத் துயரப் படுத்துவானேன் என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.

கல்யாணி எங்கள் வீட்டு வேலைக்காரி. வயது நாற்பதுக்கு மேல்தான் இருக்கும். இருபத்தி இரண்டு வயதில் அவளுக்கு ஒரு மகன் இருக்கிறான். சரியான தடிமாடு.

இவளுக்கு எமனே அவன்தான். அவனை நினைக்க நினைக்க எனக்குள் கோபம் கொப்பளித்துப் பெருகிக் கொண்டே போகிறது.

''என்னங்க!'' என்றாள் தமிழரசி மறுபடியும்.



"வந்திட்டேன்" என்றவாறே, படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்து, படித்துக் கொண்டிருந்த பக்கத்தில் வைக்க ஒரு துண்டு அட்டையை எடுத்தேன். உள்ளே வைத்துப் புத்தகத்தை மூடி மேஜை மேல் போட்டேன்.

என்ன செய்யலாம் என்று புரியாமலேயே கீழே இறங்கினேன்.



ஹாலின் மத்தியில் சோபாவுக்கு எதிரில் கல்யாணி நின்று கொண்டு இருக்க, தமிழரசி சோபாவில் உட்கார்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் எழுந்தாள்.

கல்யாணியின் கண்கள் கலங்கியிருந்தன. தலையில் பெரிய அளவில் ஒரு கட்டு. அதன் மேல் ரத்தம் திட்டுத் திட்டாகப் பரவிக் கிடந்தது.

என் கண்கள் லேசாகப் பனித்தன.

"என்ன கல்யாணி, ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தியா?"

"ஆமாங்க ஐயா, அந்தப் பாவி மகன் இன்னைக்குக் காலையிலே விறகுக் கட்டையாலே அடிச்சிட்டான்."

"பொன்னி காலையிலேயே வந்து சொன்னாள். அதிலே இருந்தே உன்னைப் பார்க்கணும்னு இருக்கார்" என்றாள் தமிழரசி.

கல்யாணி நெகிழ்ந்து போனாள்.

"ஐயாவுக்கு ரொம்ப இளகின மனசு, அதுதான்! காலையிலே, கிட்டு குடிக்கக் காசு கேட்டான். இல்லேன்னேன். அடிச்சுட்டான். ஊரே கூடிப் போச்சு."

'அந்தக் கூட்டத்திலே நானும் இருந்தேன் கல்யாணி' என்று சொல்லத்தான் நினைத்தேன். சொல்லவில்லை.

காலையில் எனது நண்பர் ஒருவரைத் தென்னங் கன்று வாங்குவது சம்பந்தமாகப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன்.

ஒரு வீட்டின் முன் ஏராளமான கூட்டம் நிற்பதைக் கண்டேன்.

கொஞ்சம் நிதானித்தேன்.

ஒரு கரடு முரடான இளைஞன் இந்தக் கல்யாணியின் குடுமியைப் பிடித்தபடியே, வாசலில் சுழன்று கொண்டிருந்தான்.

என் வீட்டு வேலைக்காரி என்றதும் எனக்குக் கவனம் அதிகரித்தது.

கல்யாணி பலமாகக் கதறிக் கொண்டிருக்க, அந்த இளைஞன் அவள் முதுகிலும் முகத்திலும் சரமாரியாக அடித்தான்.

"பாவி.... பாவி.... பெத்த தாயை இப்படிப் போட்டு அடிக்கிறானே" என்றாள் என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு கிழவி.


"அட, இவன் இவளோட மகனா?" என்றேன் நான்.

"ஆமாங்க. சரியான முரடன். ஒரு வேலை வெட்டி கிடையாது. எப்பவும் குடியும் சீட்டாட்டமும்தான். கல்யாணி பாவம். நாலு வீடுகளில் சட்டி கழுவி இவனுக்குச் சோறு போடறா" — கிழவி அங்கலாய்த்தாள்.

"அட நாயி, என்னை ஏண்டா இப்படிப் போட்டு அடிக்கறே?" என்று கதறினாள் கல்யாணி.

அவள் மகன் வாயைத் திறக்கவே இல்லை. குடுமியைப் பிடித்துத் திருகிக் கொண்டே இருந்தான்.

**மலர்வண்ணன்**



"கண்ணைப் பார்த்தால் நடிகை ஜிகிஜுஸ்ரீ போல இருக்கு' என்று என் மனைவியிடம் சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன் என்ன ஆச்சு?"

"குழந்தைகளிடம் 'அம்மா' என்று என்னைக் கூப்பிடாதே; 'அக்கா' என்று கூப்பிடு என்று சொல்லி வற்புறுத்தறு!"

— லலிதா செல்லப்பா

ஆள் படு வாட்டசாட்டம். கைகள் கரணை கரணையாக இருந்தன. அதனாலோ என்னவோ யாரும் தடுக்கக் காணோம்.

வலி பொறுக்க முடியாத கல்யாணி தன் மகனைத் திட்ட ஆரம்பித்தாள்.

கல்யாணியின் மகன் அவளை வேகமாக உதறித் தள்ள, அவள் கீழே மல்லாந்து விழுந்தாள். அவன் எதையோ தேட, விறகுக் கட்டை ஒன்று கண்ணில் பட்டுவிட்டது.

தூக்கினான்! சமாளித்து எழுந்த கல்யாணியின் தலையில் பலமாக அடிக்க, ரத்தம் குபுக் குபுக் என்று பாய ஆரம்பித்தது. உயிரைக் கவ்வும் ஓர் அலறலோடு மறுபடியும் சாய்ந்தாள் கல்யாணி.

அப்புறம் ஒரே நிசப்தம்.

"ஐயையோ கிட்டான் அவங்க அம்மாவை அடிக்கக் கொன்னுட்டான்'' என்றவாறே ஓடினாள், என் அருகே இருந்த கிழவி.

நல்லவேளை அப்படி எதுவும் ஆகவில்லை. அரை மணி நேரத்தில் எழுந்து உட்கார்ந்து விட்டாள், கல்யாணி.....

"ஐயா'' என்ற கல்யாணியின் குரல் என் நினைவைக் கலைக்க, நனவு நிலைக்கு வந்தேன்.

"என்ன இது, அடி பலமா இருக்கே? ஆமா, இன்னும் குடிச்சிட்டு வந்து ரகளை பண்ணுவானாமே?'' என்றேன்.

இப்படி ஒரு கேள்விக்காகக் காத்திருந்த மாதிரி, வரிந்து கட்டிக் கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தாள் கல்யாணி.

"அதை ஏன் கேட்கறீங்க? இவனோட அப்பன் இவன் என் வயித்திலே இருக்கறப்பவே, எவளோ ஒரு சிறுக்கியை இழுத்திட்டு ஓடிட்டான். அவன் ஓடின பிறகு, இவனைச் சுக்கைத் தின்னு முக்கிப் பெத்தேன். இன்னைக்கு இந்தக் கொள்ளையிலே போனவன் என்னைக் கொல்றதுக்குன்னே அலையறான்.''

ஏதாவது செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன், "விடு கல்யாணி. நடந்ததைப் பேசி என்ன ஆகப் போகுது. அவனைத் திருத்த முடியுமான்னு பாரு!'' என்றேன்.

"அவனையா, இனிமேலா, அது எப்படி ஐயா முடியும்?''

"இங்கே பாரு. வீட்டுக்கு அடங்காத பிள்ளை, ஊருக்கு அடங்கியே தீரும். போலீஸ்லே சொல்லி இழுத்து விடு. எனக்குத் தெரிஞ்ச டி.எஸ்.பி. ஒத்தர் இருக்கார். சிவராஜுன்னு பேரு. அவர்கிட்டச் சொல்லிக் கொஞ்சம் மிரட்டச் சொல்லட்டுமா?''

"ஐயோ போலீஸா?''

"பயப்படாதே. கேஸெல்லாம் வேண்டாம்னு சொல்லிடறேன். சும்மா மிரட்டு வாங்க. அது போதாதா?''

கல்யாணி வேகமாகப் பேசினாள். "போதாதுங்க ஐயா. அவனை ரெண்டு வருஷம் ஜெயில்லே போடணும்.''

"அவன் செய்யற தப்புக்கு இருபது வருஷமே போடலாம். அவனாலே உனக்கு என்ன லாபம்? கழுதையை அடிச்சு விரட்டாமல் இத்தனை வருஷம் இருந்திட்டியே?''

"பாம்பைப் பெற்றால் வேலியிலேயா விட முடியும்னு நினைச்சிட்டேன்.''

"கல்யாணி, உன் மகனைப் பற்றி நானும் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். அவனை எனக்கு மனுஷனாத் தெரியலே. பேசாமல் தலை முழுகு.''

எனக்கு வந்த ஆவேசத்தில் வார்த்தைகளைக் கொட்டினேன்:

"ஆமாங்க ஐயா. அப்படித்தான் பண்ணப் போறேன். இனி எனக்கும் அவனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லே'' என்றாள் கல்யாணி தீர்க்கமாக.

**மா**லை மணி ஆறு இருக்கும். தமிழரசி மேலே வந்தாள்.

"என்னங்க, இந்தக் கல்யாணி ரொம்பப் பாவம். நேற்றுப் பூராவும் ஒண்ணுமே சாப்பிடலையாம். காலையிலே ஏதோ கொஞ்சம் சமைச்சிருக்காள். இவள் மகன் கிட்டு வந்து சட்டியைப் போட்டு உடைச்சிட்டானாம். எல்லாம் வீணாகிப் போச்சேன்னு அழறா. பாவம்.... ரெண்டு நாளாகப் பட்டினியாம்!''

"அடப் பாவமே, அவன் செத்தால்தான் இவளுக்கு நிம்மதி போல இருக்கு. சரி, நீ ஏதாவது கொடு. சாப்பிடட்டும்!''

"ஒண்ணும் இல்லீங்க. இனிமேல்தான் சமைக்கணும். இருந்து சாப்பிட்டுட்டுப் போன்னு சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறாள்.''

ஒரு நிமிஷ யோசனைக்குப் பிறகு மேஜை டிராயரை இழுத்து, பர்ஸை எடுத்தேன். இரண்டு ரூபாயை உருவினேன்.

"இந்தா, ஹோட்டல்லே எதையாவது சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லு. மகளைப் பத்தி என்னென்னவோ சொன்னாள். கடைசியிலே நாம் என்ன செய்யணும்னு சொல்லாமல் போயிட்டாள். டி.எஸ்.பி. கிட்டச் சொல்லவான்னு கேளு."

தமிழரசி வாங்கிக் கொண்டே, "இன்னைக்கு ஏழு மணிக்கு மரகதமும் வெற்றிவேலும் வருகிறதாகச் சொல்லியிருக்காங்க. மரகதத்துக்கு முந்திரிக் கேக்குன்னா இஷ்டமாச்சே. கண்ணன் ஸ்வீட் ஸ்டால்லே பத்து முந்திரிக் கேக் வாங்கிட்டு வந்திடுங்கனேன்" என்றாள்.

"சரி" என்றேன். தமிழரசி போய்விட்டாள்.

வீட்டில் நானும் என் மனைவியும் மட்டுமே. எனவே எடுபிடி வேலைகள் நான்தான். கல்யாணி பாத்திரம் கழுவி வீடு கூட்டுவதோடு சரி.

சட்டையை எடுத்து அணிந்து கொண்டேன். தலையை வாரி, சொட்டையைச் சிரமப்பட்டு, மறைத்த பிறகு, புறப்பட்டேன்.

**நா**ன் கண்ணன் ஸ்வீட் ஸ்டாலை நெருங்கியபோது, கடையில் ஏராளமான கூட்டம் இருந்தது.

கொஞ்சம் குறையட்டும் என்று நினைத்தேன். இந்தக் கூட்டத்தில் முண்டியடிக்க நம்மால் ஆகுமோ?

ரோட்டில் போய்க் கொண்டு இருந்த பஸ்ஸையும் கடையில் கூடி நின்ற கூட்டத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

அப்போதுதான் கல்யாணி என் கண்ணில் பட்டாள். ஸ்வீட் ஸ்டாலின் கும்பலுக்கு மத்தியில் இருந்து பிதுங்கியபடியே வெளியே வந்து கொண்டிருந்தாள் அவள்.

தலையில் இருந்த கட்டு, அவளை நன்றாக அடையாளம் காட்டியது. அவள் என்னைக் கவனிக்கவில்லை. ஆனாலும் என்னை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தாள்.

இரண்டு ஜிலேபிகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பாலிதீன் கவர் ஒன்று அவள் கையில் இருந்தது.

கல்யாணி என்னைப் பார்த்துவிட்டாள். சந்தோஷமாகச் சிரித்தாள். ஏதோ ஒரு மன நிறைவு அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொண்டேன்.

"என்ன கல்யாணி, யாருக்கு ஜிலேபி?" என்றேன்.

கல்யாணி ஜிலேபியை ஒருதரம் பார்த்தாள். பிறகு என்னைப் பார்த்தாள். கடைசியில் பல்லெல்லாம் தெரிய இப்படிச் சொன்னாள்.

"எல்லாம் என் மகன் கிட்டுக்குத்தானுங்க ஐயா. ஜிலேபின்னா அவனுக்கு உயிர். பாவம் பொறந்ததிலேயிருந்து ஒருசுகத்தையும்அவன் கண்டதில்லே. கடையிலே ஜிலேபியைப் பார்த்ததும் கிட்டு ஞாபகம்தான் வந்தது. நீங்க கொடுத்த ரெண்டு ரூபாய் வேறு இருந்ததா.... அதான் வாங்கிட்டுப் போறேன். வரட்டுங்களா?"

## அருள்வாக்கு



எப்போதெல்லாம் வேத தர்மத்துக்கு ஹீனம் உண்டாகி, லோகம் க்ஷீணமாயிற்றோ அப்போதெல்லாம் பாலன கர்த்தாவான மஹாவிஷ்ணு அவதாரம் பண்ணி வேதத்தைப் புனருத்தாரணம் செய்வார். இதனால் லோகம் க்ஷேமம் அடைந்துவிடும்.

ஸோமுகாஸுரன், ஹயக்ரீவன் போன்ற அஸுரர்கள் வேதத்தையெல்லாம் ஜலக்காட்டிலே ஒளித்து வைத்தபோது பகவான் மீனாகத் தோன்றி அதை மீட்டு வந்ததுதான் மத்ஸ்யாவதாரம். 'ப்ரளயபயோதிஜலே' என்று ஜயதேவர் அஷ்டபதியில் இதைச் சொல்லியிருக்கிறது.

இது மாதிரியான பத்து அவதாரங்களில் பகவான் தம்முடைய உயர்ந்த ஸ்தானத்தை விட்டு இந்தப் பூலோகத்துக்கு இறங்கி வருகிறார். பரமபதம் என்று சொல்கிற உத்தமமான வைகுண்டத்திலிருந்து இறங்கி நம் லோகத்துக்கு வருகிறார். 'அவதாரம்' என்றாலே 'இறங்கி வருவது' என்பதுதான் அர்த்தம். 'தார' என்றால் உச்சி. தாரஸ்தாயி என்று மேல் ஸஞ்சாரத்தைச் சொல்கிறோம் அல்லவா? 'அவதாரம்' என்றால் Reverse Order இல் அந்த உச்சியிலிருந்து கீழே வருவது. பரம கருணையால் பகவான் இப்படி இறங்கி வருகிறான். கீழே இருக்கிற நம்மைக் கையைப் பிடித்து மேலே அழைத்துக் கொண்டு போக வேண்டும்என்பதற்காக,உச்சத்துக்கெல்லாம் உச்சத்திலுள்ள பகவான் நம்லெவலுக்கு இறங்கி வருகிறான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



# மாண்புமிகு முதலமைச்சர்

**சருக்கம் 12**

பட்டீச்சுர பவானி

**வ**டதளியின் வரவேற்பு தமிழின் வனப்பை வசீகரப்படுத்துகிறது.

நேற்றே வந்து வணங்கிச் சென்ற சேக்கிழார் இன்றும் வருவானேன்?

ஓ..... வடதளியை வணங்கித் தலைநகரை நோக்குகிறாரோ?

ஜோதியின் பொருட்டு வந்த சேதி அவர் களறிய நியாயமில்லை.

ஜோதியை அழைத்துச் சென்று அமர்நீதியார், குடும்பத்துடன் சிலா ரூபம் கொண்டுள்ள காட்சியைக் காட்டுகிறார்.

அமர்நீதியாரும் அவர்தம் பிறை நுதல் மனைவியும் மற்றும் மனைவியின் கைகளில் மகன் இருப்பதையும் காட்டிய சேக்கிழார், ''ஜோதி! இரவு நீ ஆடிய நாட்டிய நாடகத்தில் துலாபாரத்தில் அமர்நீதியாரும், அவரது மனைவியாரும் மட்டுமே ஏறியமர்ந்ததாக அமைத்திருந்தாய். இங்கே பார்த்தாயா அவரது மகனும் இருப்பதை!'' என்றார்.

கமலக் கண்களின் புறவிதழ்கள் படபடக்க, ''நம்பியாண்டார் நம்பிகள், 'தன் பெரும் செல்வமும், தன்னையும் தன் துண்டு மதி நுதலாளையும் ஈந்த தொழிலினனே' என்றுதானே திருத்தொண்டர் அந்தாதியில் பாடியிருக்கிறார்?'' என்று வினவினாள்.

செம்மைசேர் சரித்திர நாயகர் சேக்கிழார் சிரிக்கிறார்.

''ஜோதி நம்பி பெருமான் தமிழை மட்டுமே நம்பிய பெருமான்! தமிழ் வேறு, ஆராய்ச்சித் தகைமை வேறு. செவி வழியில் அறிந்ததைச் செப்பினார் நம்பிகள். சரித்திர ஆராய்ச்சி



## கோ.வி.மணிசேகரன்

நுட்பத்தோடு கதை சொல்லப் புகுவது என்பது எல்லோருக்கும் இயல்கிற செயலாகாது.''

'பிடிப்பான இடமமை ஜோதி' என்று சிந்தனையில் துடிப்பாய்த் துடிக்கிறான் கபாலீச்சுரன். பிடித்துக்கொள். அச்சாரத்தை இங்கேயும் ஆரம்பமாய் அர்ச்சித்து வை!

''பிரபோ! உங்கள் அருள் மொழியால தமிழின் இந்தப் பொருள் மொழி, அதாவது நாயன்மார்களின் புராண மொழி, ஏன் சுவாமி புதுப் பொலிவு பெறக் கூடாது? இந்தச் சூரியன் வருகையால் நாயன்மார்களின் சொப்பனங்கள் விடியட்டுமே!''

பகலில் பிரகாசிக்கும் பிறை போல் ஜோதி பற்களைக் காட்டுகிறான்.

''எனக்கு அந்த வல்லமை ஏது ஜோதி?''

''இருப்பதாக ஈசன் சொல்லுகிறார்.''

''உனது கபாலீச்சுரனா?''

''இல்லை ஈசன்.''

''கனவு கண்டாயா?''

''என் கனவு ஒரு தீர்க்க தரிசனம். நீங்கள் பாடத்தான் வேண்டும்; அதனை ஆடி நான் பரப்பத்தான் வேண்டும். நேரமாகிறது. புறப்படுவோம் சுவாமி!''

ஜல்!

அதே சலங்கையொலி கேட்கிறது.

தரிகிட, தரிகிட, தொம்கிட...

எந்தை ஈசனின் எடுத்த பாதச்சிலம்பொலியோ? மலர்ச் சிலம்படியின் மாணிக்கப்பரலொலியோ? ஜோதி நடனத்துச் சூட்சுமமோ? நாயன்மார் மோட்சமோ?

ஜோதி.....

இதயத்துக்கு அப்பால் எங்கோ எதிரொலிகள்....

வடதளியிலிருந்து வெளியே வருகிறார்கள்.

**ப**ழையாறை மக்கள் மட்டுமல்லாது அந்தச் சுற்று வட்டத்து மக்களும் பக்கத்துக்குப் பக்கம் நிற்கிறார்கள்.

அனைவரையும் வணங்குகிறார் மாண்புமிகு முதலமைச்சர்.

ஒரு விவசாயி – வயதான முதியவர் கோவணத்தோடு வந்துநின்றுகூப்பித்தொழுகிறார். ''பெரிய மந்திரியாருக்குத் தண்டனிட்டுக் கொள்கிறோம். ஏரியுடைப்பால் பாழாகிப் போன எங்க விவசாயம் என்ன



குமரி மாவட்டம், தெற்குச் சூரங்குடி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு A பிரிவில் என்னுடன் படிக்கும் மாணவன் பெயர்: முகமது நீலைஸ் முருகன் சிங்!

— ஜே. ஜான் பிரேம்

வது? இதனாலே ஒரு வருஷம் பஞ்சம், பட்டினி தான்! ஏழைச் சனங்க..... கஞ்சி காய்ச்சிக் குடிக்கக்கூட முடியாம வஞ்சனை புரிஞ்சுட்டானுங்க.... பாவிங்க! பெரிய மந்திரியார் தான் பெரிய மனசு வைக்கணும்.''

இரு கரங்களையும் மாறி மாறி இரு தோள்களைப் பற்றிக் கொண்டு, கூனிக் குறுகி அந்தக் குடியானவ மக்கள் நின்ற கோலம்....

சேக்கிழாரே! முதலில் நாடு; பிறகுதான் நாயன்மார்கள் என்பது போலிருந்தது.

அரசு உதவி கோரி இவர்கள் நிற்கிறார்கள். எவ்வகையில் இவர்களுக்கு உதவுவது?

''செய்ஞலூர் மூல* பருஷையார்கள் எங்கே? மகாசபையார் யார்? யார்? அதன் உறுப்பினர்கள் எங்கே?''

கூட்டத்தில் ஒரே அமைதி.

சேக்கிழார் மூக்கிலே சின்னக் கோபம் குந்துகிறது. ''எங்கே கணக்கன்?''

கணக்கன் ஓடோடி வந்து கைகட்டி நிற்கிறான்.

''மகா சபையார் யார் யார்?''

''பெரிய மந்திரி நாயகமய்யாவுக்குத் தண்டம்! மூல பருஷையார் போட்ட விதிமுறையெல்லாம் தலைகீழா போயிடுச்சுங்க. நம்ம மந்திரிமாருங்க சரியா கவனிக்கலைங்க.... வருவாங்க... பார்ப்பாங்க.... பெரிய தனக்காரரோட கலந்துக்குவாங்க.... தேவதாசிங்களோ, இல்லே.... எந்தத் தாசி கிடைச்சாலும் கண்டுக்குவாங்க... போயிடுவாங்க. இதாங்க நடைமுறைங்க.... நம்ம மிழலை நாட்டுச் சண்பகராமன் தானுங்க கவனிச்சிக்கறாரு... வரி வசூல் பண்றதோடு சரி.''

''எங்கே மிழலை நாட்டான்?''

''நீங்க வர்றது தெரிஞ்சு சீகாழித் தலை ஞாயிறுலே இருக்கிற மாமியார் வீட்டுக்குப் பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லேன்னு போயிட்டாருங்க! பயந்துக்கிட்டுத்தான் போயிட்டாருங்க!''

''ஏன் பயந்து போகணும்?''

''நாற்பது வயசுக்குக் கம்மியா மகா சபை அங்கத்தினரா இருக்கக் கூடாதுன்னு சட்டங்க! அவருக்கு நூப்பத்தொரு வயசுங்க! வேறே அங்கத்தினருங்க இல்லீங்க.... அவரு தான் மகா சபை.... எல்லாம்....''

என்ன கொடுமை இது?

''தேர்தல் நடந்து எத்தனை வருஷமாகிறது?''

''ரெண்டு வருஷமாகுதுங்க! ஒருத்தர் ஒரு தடவை ஜெயிச்சா.... அடுத்த வருஷம் நிக்கக் கூடாதுங்க.... அடுத்த அஞ்சாவது வருஷம்தான் அவரு போட்டி போடலாமுங்க. அதனாலே ஏற்பட்ட தகராறுதான் பஞ்சாயத்து மகா சபை தேர்தலையே ஒத்திப் போட்டுக்கிட்டு வர்றாங்க. நடுவே மிழலை நாட்டாரு கொள்ளையடிக்கிறாருங்க!''

இத்தனையையும் தொலைவில் நின்று கவனித்த கபாலீச்சுரன் மீசை துடிப்பதை ஜோதி ஓரக் கண்களால் கவனிக்கிறான்.

''நல்லது கணக்கரே! உடனே இங்கே மட்டுமல்ல. இந்த அக்கிரமம் எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் தேர்தல் நடத்த உத்தரவிடுகிறேன். இங்குள்ள விவசாயிகளுள், அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி.... நியாயம் நேர்மை மிக்கவர் யார் என்பதை உன்னால் சொல்ல முடியுமா?''

''ஏனுங்க சொல்ல முடியாது? ஆம்பளைங்களை விடப் பெண்டுங்கதானுங்க இங்கே ரொம்ப நேர்மை. நம்ம பட்டீச்சுரத்து பவானி பொண்ணு எதிலியும் தைரியங்க. நேர்மைங்க....! இங்கே ஏதாச்சும் பஞ்சாயத்துன்னாலு எழுத்துப்படிச்ச அதுதானுங்க... தீர்ப்புச் சொல்லும்! மிழலை நாட்டான் தீர்ப்பைக்கூட நாங்க ஏத்துக்க மாட்டோமுங்க... பவானி தீர்ப்புத்தான் பட்டீச்சுரர் தீர்ப்பு மாதிரிங்க!''

''யார் அந்தப் பெண்?''

குடுகுடுவென்று ஓடி வந்து பணிந்து நின்றாள். கறுப்பு முல்லையும் உண்டு; அதன் மணம் வெண்முல்லையினும் வேகம் நிறைந்தது என்பது போன்ற ஒரு பெண். முப்பது வயதே மதிக்கத்தக்க அந்தப் பெண்ணின் கரிய பெரிய விழிகளில் தீட்சண்யம் தெரிந்தது. இரண்டு ஆண்பிள்ளைகளானாலும் வரிந்து கட்டிக் கொண்டு இழுத்துப் போட்டு உதைக்கிற அளவுக்கு உடல்வாகு இருந்தது.

''நீதான் பவானியா?''

''ஆம்; அமைச்சர் பெருமானே!''

''என்ன படித்திருக்கிறாய்?''

''சோழ சாம்ராஜ்யத்தைப் படித்திருக்கிறேன் பெருமானே!''

''சோழ சாம்ராஜ்யத்தை?''

''கலிங்கத்துப் பரணியை!''

''*பலே! பவானி! தேர்தல் நடக்கிற வரைக்கும் விவசாயிகள் பொறுப்பினை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நீ என்னுடன் தலைநகர் வருகிறாய். ஆனை நஷ்டத்துக்கு அரசு பொருளுதவி செய்கிறது. இது அரசுக்கு அப்பாற்பட்டதல்ல; எனவே எனது சொந்தப் பொறுப்பில் துணிந்து செயல்படு

* அதிகாரி என்ற அர்த்தத்தில் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

* பல், பல — ஏகாரம் ஏற்றுப் 'பலே'வானது. பல செய்திகளைத் தெரிந்துகாரிருக்கிறும் என்பதொக்கும்.

உங்களுக்காகவே



# அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

**நம்பகமான ஒரே கூந்தல் தைலம்**

# குணா

## கூந்தல் தைலம்

தலை மயிர் உதிர்தல், செம்பட்டை நிறம்.
பருவத்திற்கு முன்பு ஏற்படும் பித்த நரைகள் மாறும்.
தினசரி தலைக்குத் தடவி வந்தால் தலை மயிர்
நீண்டு கறுத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு
பொடுகு, மண்டையில் சொறிந்தால் செதில் உரிதல்
குணமாகும். பெண்கள் ஆண்கள் அனைவரும்
விரும்பி உபயோகிக்கின்றனர்
1 பாட்டில் விலை ரூ 16-25 V.P.P. உண்டு
தபால் செலவு இல்லை.

தேவைக்கு எழுதவும் **நவசக்தி வைத்தியசாலை**
**தபால் பெட்டி எண் 7 சேலம் 636 001**

எமது தைலம் கிடைக்குமிடங்கள் : 1. சேலம் — ரோசு மெடிக்கல்ஸ் 2. ஆத்தூர் — முத்து மெடிக்கல்ஸ், 3. நாமக்கல் — கஸ்தூரிபா மெடிக்கல்ஸ். 4. ராசிபுரம் — ராசி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 5. மேட்டூர் — ஜெயலஷ்மி மெடிக்கல்ஸ், 6. திருச்செங்கோடு — சீனிவாசா மெடிக்கல்ஸ், 7. தர்மபுரி — விஜயலஷ்மி மெடிக்கல்ஸ் 8. கிருஷ்ணகிரி — கோபாலகிருஷ்ணா மெடிக்கல்ஸ் 9. ஒசூர் — மூர்த்தி மெடிக்கல்ஸ் 10. பெங்களூர் — பிரசாத் ஸ்டோர்ஸ் K.G. சர்கிள் 11. சென்னை-3 — ஹேமா மெடிக்கல்ஸ் 12. அமிஞ்சிகரை — வேலவன் மெடிக்கல்ஸ் 13. குடியாத்தம் — திருமகள் மெடிக்கல்ஸ் 14. காஞ்சிபுரம் — லஷ்மி மெடிக்கல்ஸ் 15. அரக்கோணம் — அகிலாம்பிகை மெடிக்கல்ஸ் 16. ஆரணி — பாக்கியம் அண்ட் கோ., மருந்துகடை 17. திருவண்ணாமலை — அன்னை மெடிக்கல்ஸ் 18. வேலூர் (NA) — பாரத் மெடிக்கல்ஸ் 19. திருப்பத்தூர் (NA) — லஷ்மி மெடிக்கல்ஸ் 20. விழுப்புரம் — அன்பு மெடிக்கல்ஸ் 21. கள்ளக்குறிச்சி — A. ராஜீ நாட்டு மருந்துக்கடை 22. கும்பகோணம் — செல்வம் மெடிக்கல்ஸ் 23. தஞ்சாவூர் — சிட்டி மெடிக்கல்ஸ் 24. திருச்சி — சண்முகா மெடிக்கல் ஹால் 25. திண்டுக்கல் — தமிழ்நாடு சித்த மருந்துக்கடை 26. பெரியகுளம் — N. லஷ்மணன் மருந்துக்கடை 27. தேனி — ஆண்டாள் மெடிக்கல்ஸ் 28. மதுரை — குமார் மெடிக்கல்ஸ் 29. மதுரை — ஸ்டேட் மெடிக்கல் கார்பரேசன் (24 மணி நேர கடை) 30. ராமநாதபுரம் — பாத்மா மெடிக்கல்ஸ் 31. காரைக்குடி — மலேசியா ஜெனரல் ஸ்டோர்ஸ் 32. விருதுநகர் — S.S.K. மெடிக்கல்ஸ் 33. தூத்துக்குடி - அன்பு மெடிக்கல்ஸ் 34. திருநெல்வேலி — கோமதி மெடிக்கல்ஸ் 35. பாளையங்கோட்டை — ஒலிவா இந்தியன் மெடிக்கல்ஸ் 36. நாகர்கோவில் — S. நல்ல பெருமாள் மருந்துக்கடை 37. தென்காசி — M.R. மெடிக்கல்ஸ் 38. ராஜபாளையம் — அரவிந்த் மெடிக்கல்ஸ் 39. சிவகாசி — சிவகாசி மெடிக்கல்ஸ் 40. கோவில்பட்டி — சாந்தி மெடிக்கல்ஸ் 41. ஸ்ரீ வில்லிபுத்தூர் — பாலாஜி மெடிக்கல்ஸ் 42. உடுமலை — ஜாம் ஜாம் மெடிக்கல்ஸ் 43. பொள்ளாச்சி — ராமநாதன் மெடிக்கல்ஸ் 44. கோவை — காசிநாத் அண்ட் கோ., 45. கோவை — திருமலை மெடிக்கல்ஸ், காந்திபுரம் 46. திருப்பூர் — சீதா மெடிக்கல்ஸ் 47. சிவகங்கை குணா & கோ (கெமிஸ்ட்) 48. கோபி — வாணி பார்மஸி 49. ஈரோடு — ஸ்ரீ ராகவேந்திரசாமி மெடிக்கல்ஸ் 50. திருச்சி ஜங் — சுபஸ்ரீ மெடிக்கல்ஸ் 51. புதுக்கோட்டை — மீனு பார்மஸி 52. திருவாரூர் — அன்னபூர்ணா மெடிக்கல்ஸ் 53. மாயவரம் — ஸ்வாமி மெடிக்கல்ஸ் 54. சிதம்பரம் — ராஜா பார்மஸி 55. விருத்தாசலம் — ஜெயா பார்மஸி 56. சேலம் செவ்வாய்பேட்டை — பிரபாத் மெடிக்கல்ஸ் 57. தொட்டியம் — மீனாஷி மெடிக்கல்ஸ் 58. கிருஷ்ணகிரி - பி. கே. பி. எம். ஜி. மெடிக்கல்ஸ் 59. கரூர் - அண்ணாமலை மெடிக்கல்ஸ் 60. நாமக்கல் — சரஸ்வதி மெடிக்கல் ஹால், 61. காரைக்குடி — சரோஜா ட்ரகஸ் ஸ்டோர்ஸ். 62. பாண்டிச்சேரி — ராஜா மெடிக்கல்ஸ். 63 சென்னை-4 மீனாட்சி மெடிக்கல்ஸ் 64. மதுரை-1 பரவீன் மெடிக்கல்ஸ் 65. நாகை - ரங்கா ஸ்டோர்ஸ் 66. மைலாப்பூர் R.R. பார்மஸி 67. தி. நகர் சுந்தரம் ஸ்டோர்ஸ் (கெமிஸ்ட்) 68 சேலம் — சாமுண்டி சூப்பர் மார்க்கெட் 69. கடலூர் — சிவா மெடிக்கல்ஸ் 70. ஊட்டி — நீலகிரிஸ் ட்ரக் ஸ்டோர்ஸ் & பார்மஸி 71. தஞ்சாவூர்-1 சிங்காரம் மெடிக்கல்ஸ் மார்ட்

---

*"எமது நவரத்ன கல்ப லேகியம் சக்திக்கும் வலிமைக்கும் அனைவரும் சாப்பிடத்தக்க சிறந்த டானிக்; 1 புட்டி ரூ. 30/-, V.P.P. உண்டு. தபால் செலவு இலவசம். எமது ஸ்டாக்கிஸ்டுகளிடமும் கிடைக்கும்.*

கிறேன்! பத்தாயிரம் பொன்னைக் கடனாகத் தருகிறேன். விளைச்சல் அறுவடையானதும் நாணயத்தோடு கொண்டு வந்து செலுத்தி விடுவாயல்லவா?''

பவானி தயங்குகிறாள்.

''ஏன் தயக்கம் பவானி?''

''தயங்கவில்லை, முதலமைச்சர் பெருமானே! உடனிருந்து உதவ ஓர் உத்தம அதிகாரியை என்னுடன் அனுப்ப வேண்டுகிறேன். இங்கே பொருள் கொண்டு என்னை விலைபேசப் பலர் முயன்றனர். பயனளிக்காமல் போகவே, நாள் கருதிக் காத்திருக்கிறார்கள். இப்போது என்னை நம்பிப் பொருளையே ஒப்படைக்கிறீர்கள். இந்த விவசாயிகள் மீது எனக்கு நம்பிக்கையுண்டு. இங்கேயுள்ள வெறியர்கள் மீது நம்பிக்கையில்லை. எனவேதான் தயங்கினேன்.''

''ஓ... அப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா? நல்லது பவானி! உனது நிழலை இங்கு எவரேனும் கெடுமதியோடு மிதிப்பார்களேயானால், அவர்கள் கால் துண்டிக்கப்படும். இது எனது ஆணை! போதுமா?''

''இனித் துணிச்சலோடு இந்த வயற்காட்டின் தேவதையாவேன்!''

பவானி பவித்திரமாய்ப் பணிகிறாள்.

பயணம் தலைநகர் நோக்கிப் புறப்பட்டது.

பழையாறைத் திருநகரில் நடந்த அக்கிரமங்களையும் துரோகச் செயல்களையும் கேட்கக் கேட்க அநபாய குலோத்துங்க சோழ மாமன்னனுடைய அங்கமெலாம் பதறியது! மீசை துடித்தது. மீளாத்துயர் வெடித்தது.

வயிற்றுக்குச் சோறு போடும் விவசாயிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்ட இழிநிலை சோழநாட்டிலா?


''மன்னா! இது எனக்கு ஏற்பட்ட சோதனை! என்னை வஞ்சம் தீர்ப்பதற்கு மாறாக, சோறு வளம் படைத்த சோழ நாட்டோடு விளையாடி இருக்கிறார்கள்!''

''சேக்கிழாரே! தவறு செய்தவர்கள் எப்பேர்ப்பட்ட பதவியிலிருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே! அது குலோத்துங்கனாகவே இருந்தாலும் குற்றம் குற்றமே! இந்தச் சோழப் பேரரசு, ஏழைகள் முகங்களில் இறைவனைக் காணும் பேரரசாக இருக்க வேண்டும்! கடமை தவறாப் பேரரசு; கண்ணியம் தவறாப் பேரரசு; கட்டுப்பாடு நிறைந்த பேரரசாகத் திகழ வேண்டும்!''

குலோத்துங்கன் எரிமலையாய்க் குமுறுகிறான்.

''சோழ மாமன்னா! இதற்கொரு விசாரணை, தீர்மானங்கள் போன்றவை கொலு மண்டபம் வரை கொண்டு செல்ல வேண்டுமா? ஆணை பிறப்பிக்க வேண்டியவர் நீங்கள் என்பதால் சொல்லுகிறேன்.''

''அவசியமில்லை சேக்கிழாரே! முதலமைச்சராகிய தாங்களே இதனைக் கவனித்துக் கொள்ளலாம். என் பார்வைக்கு வந்துதான் ஆக வேண்டும் என்று குழுவும் ஆயமும் கூடி முடிவு செய்யுமானால்



108 ஆண்டுகள் கழித்து, பிரிட்டனில் இனி நாய்களுக்கு லைசென்ஸ் பெற வேண்டியதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

காரணம்?

நாய்களின் லைசென்ஸ் தொகை 1.12 மில்லியன் டாலர் வசூலிக்க 5.3 மில்லியன் டாலர் செலவழிக்க வேண்டி இருந்ததாம்!

— சிவமணாளன்

வரட்டும்! அதுவரை அரசு பொறுப்புக்களனைத்தையும் கவனிக்க முழு உரிமையைத் தங்களிடம் அளிக்கிறேன். அதன் சான்றாக, இதோ குலோத்துங்கன் தனது அரசலாஞ்சனையையே அளிக்கிறான்'' என்று கூறிய குலோத்துங்க மாமன்னன், தனது வலக்கை விரலிலிருந்த புலிபொறித்த வைர இலச்சினையைக் கழற்றி வழங்கினான்.

இக்காட்சி அங்கிருந்த அவைக்குரவர் ஒட்டக்கூத்தருக்கே கூடச் சற்று வேதனையாகத்தானிருந்தது.

''மன்னா! நான் ஒரு சத்தியப் பெண்ணை பழையாறையில் சந்திக்க நேர்ந்தது'' என்று தொடங்கிய சேக்கிழார், பவானியின் கதையைச் சொன்னார். அவள் மூலமாக பத்தாயிரம் பொன்னைக் கருவூலத்திலிருந்து கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்தக் கடன் தொகையைத் திரும்பப் பெற்றுத் தருவது தமது பொறுப்பு என்றும் ஏற்றுக் கொண்டு, பவானியை அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

சற்றைக்கெல்லாம், 'கறுப்பு முத்தோ? கற்பின் சொத்தோ?' வென அங்கு வந்து வணங்கி நின்றாள் பவானி.

''பவானி! முதலமைச்சர் உன்னைப் பற்றி வெகுவாகச் சொன்னார். உன்னை நம்பலாம் அல்லவா?''

''என்னை நம்புவதைவிட, என்னுடன் அனுப்பப் போகும் அரசியல் அதிகாரியை நீங்கள் நம்பவேண்டும். நான் சோழராசபாரம்பரியத்தைப் படித்தவள். சொப்பனத்திலும் சோழருக்குத் துரோகம் நினைக்க மாட்டேன்!''

''பலே பவானி! உன்னை நம்புகிறேன்'' என்று கூறிய குலோத்துங்க சோழ மாமன்னன், சேக்கிழார் பக்கம் திரும்பி, ''இவளுடன் யாரை அனுப்பப் போவதாக உத்தேசம் சேக்கிழாரே?'' என்றான்.

சேக்கிழாரும் முன்கூட்டியே முடிவு செய்துவிட்டபடியால், தம்மை இதயமார நேசிக்கும் குலோத்துங்க சோழ யாதவராயனைப் பரிந்துரைத்தார். ஆரம்பத்தில் அவரை அழைத்து வரத் தூது சென்றவனல்லவா?

பொக்கிஷத்திலிருந்து பத்தாயிரம் பொன்னா? திரும்பி வருமா?

ஒட்டக்கூத்தர் எதிர்ப்பை எப்படித் தெரிவிப்பது என்று புரியாமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தார்.

(தொடரும்)

# மங்கையர் மலர்

ஜூலை 86



## இது மனிதாபிமானப் பிரச்னை

முஸ்லீம் பெண்களுடன் பேட்டி

## ஆஸ்துமா ஒரு விளக்கம்

இலவச இணைப்பு

மற்றும் ஏராளமான சிறப்பு அம்சங்கள்

அதிக பக்கங்கள்

கொஞ்சம் சின்ன ஊர்தான் அது. கோமணம் மாதிரி ஒல்லியான நீளமான கடைத் தெருவைத் தாண்டிவிட்டால் உடனே வயல். வயலில் பயிரில் செழுமை. அநேக மாக ஓட்டு வீடுகள், அதிகப் பிரசங்கித்தன மாக ஒன்றிரண்டு டி.வி. ஆண்ட்டெனாக்கள். தூரத்தில் ஒரு ஷெட்யூல்ட் பாங்கின் மானே

பட்டுக்கோட்டை பிரபாகர்

# பால்



ஜரைப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு கட்டப்பட்ட பர்மனெண்ட் தியேட்டர்.

கூட்டுறவு பால் சொஸைட்டியின் கட்டிடம் அடுத்த புயலுக்கு நிச்சயம் சமாதி. அலு வலர் நாகப்பன் அஞ்சரை மணி அதிகாலை யில் குளித்த சோப்பின் வாசனையுடன், நெற்றியில் ச்ரமாய் விபூதியுடன் பால் கொண்டு வரும் வேலுக்காகச் சுறுசுறுப் பாகக் காத்திருந்தார்.

அந்த நான்கு இளைஞர்களும் இரண்டு சைக்கிள்களில் வந்து இறங்கினார்கள். இரண்டு பெரிய மூடி போட்ட அலுமினியப் பாத்திரங்கள் வைத்திருந்தார்கள்.

''என்ன, நாகப்பன் சார், பால் வந்துடிச்சா?''

''எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். வர்ற நேரம்தான். என்ன பாத்திரம் எல்லாம் பெரிசா இருக்கு?''

''பால் வாங்கத்தான் வந்தோம். எவ் வளவு பால் வருது வேலு?''

''அம்பது லிட்டர் வருது. எவ்வளவு வேணும் உங்களுக்கு?''

''அம்பது லிட்டரும் வேணும்.''

''விளையாடறீங்களா? வாடிக்கைக்காரங் களுக்குத் தரணுமே. நீங்க நேத்தே சொல்லியிருந்தாலும், சேர்த்து எடுத்துட்டு வரச் சொல்லியிருப்பேனே.... எதுக்கு அவ் வளவு பால்?''

''அதைப் பத்தி என்ன? எங்களுக்கு வேலு வர்ற அவ்வளவு பாலும் வேணும். தர்றதுக்கு வாய்ப்பிருக்கா, இல்லையா?''

''அதெப்படிங்க தர்றது?''

''மனசு வெச்சாத் தரலாம்.''

''எப்படிங்க மனசு வைக்க முடியும் இதிலே? இன்னும் கொஞ்ச நேரத்திலே கால் லிட்டர், அரை லிட்டர்னு வாங்கறத்துக்கு ஜனங்க வந்துடுவாங்க. அவங்களுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?''

''அதெல்லாம் நான் சொல்லித் தர்றேன். பால் லிட்டர் எவ்வளவு?''

''நாலு ரூபா.''

''நான் அஞ்சு ரூபா தர்றேன். ஐம்பது லிட்டருக்குக் கணக்கா காலங்கார்த்தால





அம்பது ரூபா கிடைக்குது. கெடுத்துக் காதீங்க.''

நாகப்பன் சலனப்பட்டார்.

''ஒரு நாளைக்குக் காப்பி, பால் சாப்பிடலேன்னு ஜனங்க செத்துடுவாங்களா? பிழைக்கிற வழியைப் பாருங்க. என்ன சொல்றீங்க? பணம் எண்ணட்டுமா?''

மேலும் சலனப்பட்டார்.

''சரி, எதுக்கு அவ்வளவு பால்? வீட்ல எதுவும் விசேஷமா?''

''இல்லே. அவசரமாத் தேவைப்படுது. டேய் மாரி, இருநூத்தம்பது ரூபா எடுத்து சார் கைல கொடுடா.''

''இல்லே இருக்கட்டும். நான் என்ன சொல்ல வர்றேன்னா....''

''நீங்க எதுவும் சொல்ல வேணாம். அதோ வந்துடிச்சி வேன்.''

வேன் வந்து நின்று ஐம்பது லிட்டர் அலுமினியக் கேனை இறக்கிவிட்டுப் பதிலாகக் காலி கேன் எடுத்துக்கொண்டு, கையெழுத்து எல்லாம் வாங்கிக் கொண்டு செம்மண் புகை எழுப்பிப் புறப்பட்டுச் சென்றது.

''பாத்திரங்களைத் திறங்கடா. எடுத்து ஊத்துங்க நாகப்பன்.''

''இல்லே.... வந்து.... ஜனங்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னு....''

''அவ்வளவுதானே?'' என்று அவன், வந்த கேனைத் திறந்து அருகில் இருந்த குவளை எடுத்து, அரை லிட்டர் போல் பாலை எடுத்துக் கீழே கொட்டினான். பின் சொன்னான்:

''எல்லாப் பாலும் கொட்டிப் போச்சி கை தவறி. இப்பத்தான் கழுவித் தள்ளினேன் சாக்கடையிலே. இதோ பாருங்க. தேங்கியிருக்கு கொஞ்சம்னு சொல்லுங்க. நம்பிடுவாங்க.''

நாகப்பன் ஐம்பது ரூபாய் மோகத்தில், ''சரி, சரி, உங்க பாத்திரத்துக்குச் சீக்கிரம் மாத்திக்கிட்டுப் புறப்பட்டுப் போய்டுங்க'' என்றார்.

இளைஞர்கள் துரிதமாகச் செயல்பட்டுப் பாலுடன் சைக்கிள்களில் புறப்பட்டுச்

சென்றார்கள்.

குழந்தையின் இடைவிடாத அழுகையால் விழித்துக்கொண்ட சிவகாமி அவசரமாக எழுந்து தூளியில் இருந்து தூக்கி மடியில் வைத்துக்கொண்டு ரவிக்கைப் பித்தான்களைப் பிரித்தாள்.

குழந்தை இன்னும் வேகமாக அழ... சிவகாமி, சற்றுத் தள்ளிக் கைலி விலகிப் படுத்திருந்த, இன்னும் லேசாகச் சாராய நெடி வீசிக்கொண்டிருந்த தன் கணவனை எழுப்பினாள்.

''எந்திரிங்க. குழந்தை அழுவுது. பால் கொடுக்கணும்.''

''கொடேண்டி. அதுக்கு என்னை ஏன் எழுப்பறே?''

''என்கிட்டே பால் இல்லீங்க. வாங்கிட்டு வந்து காய்ச்சித்தான் கொடுக்கணும். கொஞ்சம் இவனை அழாமல் சமாதானப் படுத்துங்க.''

''காலங்கார்த்தால என்ன எழவுடி இது'' என்று ஏக அலுப்புடன் எழுந்து உட்கார்ந்து குழந்தையை வாங்கிக்கொண்டு ''ஏய்! நிறுத்துடா. சத்தம் வெளில வந்திச்சி, தொலைச்சிடுவேன் படவா!'' என்றான்.

குழந்தை திடுக்கிட்டு, முகம் வெளிறிப் பயத்தில் அழுகையை நிறுத்தி, பசியின் உந்துதலில் மறுபடி அழத் துவங்கியது.

''நல்லா இருக்கு நீங்க சமாதானப்படுத்தறது'' என்று பாத்திரமும், காசும் எடுத்துக்கொண்ட சிவகாமி சொசைட்டியை நோக்கி ஓட்ட நடையில் விரைந்தாள்.

டாக்டர் அதிகாலை தூக்கக் கலக்கத்துடன் தன் பேடில் வரிசையாக மூன்று ஊசி மருந்துகளை எழுதி 'டர்ர்' என்று கிழித்துக் காளிமுத்துவிடம் நீட்டினார்.

''பயப்பட ஒண்ணுமில்லேய்யா. உன் பெண்டாட்டி பொழைச்சுக்குவா. உயிருக்கு ஆபத்தில்லே. காயம்தான் அதிகம். இந்த ஊசி மருந்தெல்லாம் வாங்கிட்டு வந்துடு.''

''அய்யா, இந்த ஊர்ல இப்போ மருந்துக்கடை திறந்திருக்காதுங்களே.... எட்டு மணிக்கு மேலதான் திறப்பாங்க.''

''தெரியும். இந்த ஊசியெல்லாம் போட்டாக வேண்டியது ரொம்ப அவசியம் தான். ஆனா அவசரம் இல்லே. கடை திறந்த உடனே வாங்கிட்டு வந்துடு.''

''சரிங்கைய்யா. இந்த ஊசி எல்லாம் எவ்வளவு வரும்ங்க?''

''இருபது ரூபாய் வரும்.''

''சரி, வாங்கிட்டு வந்துடறேன் டாக்டர் அய்யா'' என்று உள்ளறையில் அங்கங்கே பாண்டேஜுகளோடு இருந்த தன் மனைவியைப் பார்க்கப் போனான் காளிமுத்து.

''எப்படி இருக்கு லெச்சுமி?''

''இப்போ தேவலாங்க. முதுகிலேதான் பெரிய காயம். அங்கேதான் வலி அதிகமா இருக்குது. அதென்னங்க சீட்டு?''

''உனக்குத்தான். ஊசி மருந்து எழுதியிருக்காரு. வாங்கணும்.''

''காசு வச்சிருக்கீங்களா?''

''அதெல்லாம் சமாளிச்சுடலாம். எட்டு மணிக்கு மேலே வாங்கிட்டு வந்தா போதும்னு டாக்டர் சொல்லிட்டாரு. நீ தூங்கு. நான் இதோ போயி நம்ம கடையைத் திறக்கறேன். மணிகிட்டே பாலுக்குக் காசு நாளைக்குச் சேர்த்து வாங்கிக்கச் சொன்னா சரின்னுடுவான். ரெண்டு மணி நேர வியாபாரத்திலே காசு சேர்ந்திடும். வரட்டுமா?''

காளிமுத்து மருந்துச் சீட்டை ஜாக்கிரதையாக மடித்துப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு நடந்து தனது டீக்கடைக்கு வந்து கதவைத் திறந்தான்.

பாய்லரைக் கழுவி வைத்து, ஊதுவத்திக் கொளுத்தி வைத்து, கிளாஸ்களைக் கழுவி வைத்து, சைக்கிளில் வழக்கமாய்ப் பால் கொண்டு வந்து கொடுக்கும் பக்கத்து ஊர் மணிக்காகக் காத்திருந்தான்.

''மணி, மணி, கொஞ்சம் வண்டியை நிறுத்தப்பா'' என்றான் மாரி. மற்ற மூவரும் சூழ்ந்து கொண்டார்கள்.

பைப் வைத்த பித்தளைக் கேனை சைக்கிளின் காரியரில் கட்டியிருந்த மணி எதுவும் புரியாமல் இறங்கினான்.

''என்ன மாரிண்ணே?''

''பால் எவ்வளவு வச்சிருக்கே?''

''பதினாறு லிட்டரு.''

''பதினாறு லிட்டரையும் கொண்டா, வாங்கிக்கறோம்.''

''வாடிக்கை கெட்டுடும்ணே.''

''உடம்புக்கு முடியாம ஜுரம்னு என்னப்பா பண்ணுவே? நாளைக்குக் கேட்டா மேலுக்கு முடியலே. பால் எடுக்கலேன்னு சொல்லிடேன். எனக்கு அர்ஜெண்ட்டாத் தேவைப்படுது.''

''எதுக்கு?''

''பால் எதுக்கு வாங்குவாங்க? காய்ச்சிக் குடிக்கத்தான். கொடேன். கைமேல காசு. எட்டணா லிட்டருக்கு அதிகம் வேணும்னாலும் போட்டுக்கோ.''

மணி பாலை அவர்களின் பாத்திரத்தில் மாற்றிவிட்டுத் தன் ஊரை நோக்கித் திரும்பிப் போக....

இவர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டே சைக்கிள்களை மிதித்தார்கள்.

''நாம எதுக்கும் குறைஞ்சவங்க

---


**''அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.''**

**''அப்புறம்?''**

**''அவனுக்கும் மெட்ராஸ் ஐ; அவளுக்கும் மெட்ராஸ் ஐ!''**



# தர்மபுரி மாவட்டத்தில் கல்கி



வாசகர்கள் எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்களைப் பரிசீலித்து அவற்றின் அடிப்படையில் நமது நிருபர்கள் தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் அனுபவங்கள்,

ஜூலை 13, 20 கல்கி இதழ்களில் இடம்பெறும்.

இல்லேன்னு தலைமைக்குத் தெரிஞ்சாகணும் மாரி. குடம் குடமாப் பாலைப் பார்த்துட்டு அவனவன் அசந்து போகப் போறான் பாரேன்.''

''ஊர்ல இருக்கிறவன் அசந்து போறது இருக்கட்டும். நேரா அண்ணன் காதுக்கு உடனே சேதி போகும். பாராட்டிக் கைப்பட லெட்டர் எழுதலேன்னா என் பேரையே மாத்திக்கறேன்.

**சொ**சைட்டியின் வாசலில் நிறைய பேர் கைகளில் பாத்திரங்களோடு ஆளுக்கு ஆள் சத்தம் போட்டுக் கொண்டிருக்க....

''என்னை என்னங்க பண்ணச் சொல்றீங்க. கை தவறிக் கொட்டிப் போனதுக்கு என்ன செய்ய முடியும்?'' என்றார் நாகப்பன்.

''கை தவறிச்சன்னா.... அதுக்காக வேற ஏற்பாடு பண்ணணும். அஞ்சு லிட்டர் சொல்லி வச்சேனா இல்லையா? வீட்ல நிச்சயதார்த்தம் இன்னிக்கு. காப்பிகூட குடுக்க முடியலையான்னு சம்பந்தி வீட்டுக்காரன் கேவலமா பேசுவான்யா.''

சிவகாமி அப்போதுதான் அங்கே வந்து, பால் இல்லை என்பதறிந்து பதறிப் போய் ஓட்டமாய்த் திரும்பி முதலியாரம்மா வீட்டிற்கு ஓடினாள்.

இங்கே விடாமல் அழுத குழந்தையை எரிச்சலாய்த் தூக்கித் தூளியில் கிடத்தி, ''ஏய்! சத்தம் போட்டேன்னா பாரு!'' என்று சிவகாமியின் கணவன் அதட்டினதில் குழந்தை கப்சிப் என்றானதும், ''எங்கே போய்ட்டா இவ செருக்கி இன்னும் காணோம்'' என்று துண்டெடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, குடிசையின் கதவை லேசாய்ச் சாத்தி வைத்துவிட்டு நேராய் சாராயக் கடைக்கு நடந்தான்.

முதலியாரம்மா உதட்டைப் பிதுக்கினாள்.

''எங்கே இருக்கு பாலு. மடி வத்திப் போச்சு. எங்க வீட்டுக்கே பத்தலே.''

குழந்தை விடாமல் அழுது கொண்டிருந்தது.

சிவகாமி ஊரில் இருக்கும் ஒரே டீக்கடையான காளிமுத்துவின் கடைக்கு ஓட்டமாய் வந்து மூச்சிரைத்தாள்.

''அண்ணே, ஒரு பால் கொடுங்க சீக்கிரமா.''

''இந்த மணிப் பயலைக் காணோம். பால் இன்னும் வரலேம்மா. நானே பரிதவிச்சி நிக்கறேன். பால் வந்து, வித்து காசெடுத்துப் பெண்டாட்டிக்கு மருந்து வாங்கணும்.''

''குழந்தை பசியிலே துடிச்சிக்கிட்டிருக்கு.''

''பேச்சியம்மா வீட்ல கேளேன். அங்க தான் நாலு மாடு நிக்கிது.''

பேச்சியம்மா, ''அடிப் பாவி, கொஞ்சம் முன்னாடி வந்திருக்கக் கூடாது? இப்பத்தான் வித்துத் தீர்த்தேன். இன்னிக்கு சொசைட்டியிலே பால் கொட்டிப் போச்சாம். எல்லாம் இங்கே வந்துட்டாங்க.''

''அம்மா கொஞ்சம் தயவு பண்ணுங்க. குழந்தை பசில கத்திக்கிட்டிருக்கு. உங்க வீட்டுக்கு எடுத்து வச்சிருக்கிற பாலாவது கொஞ்சம் கொடுங்க.''

''அந்த அளவுக்கு இரக்கமில்லாமயா இருக்கேன். இரு தாயி, எடுத்துட்டு வர்றேன். காய்ச்சின பாலே தர்றேன்ம்மா.''

வாங்கிக் கொண்டு குடிசைக்கு வந்த போது.....

தூளியில் இருந்த குழந்தைக்குப் பால் தேவைப்படவில்லை.

**ப**த்து மணி காலைக் காட்சி சினிமாவுக்குக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்க... பிரபல நடிகன் விமல் நடித்த புதிய படத்தின் அன்றைய ரிலீசுக்காக, தியேட்டர் முழுக்க ஜோடனை செய்து, வண்ணக் காகிதங்கள் படபடத்துக் கொண்டிருக்க...

முகப்பில் வைக்கப்பட்டிருந்த பெரிய விமல் கட் அவுட்டிற்கு, விமல் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த மாரியும் மற்றும் அவன் சகாக்களும் குடம் குடமாய்ப் பாலாபிஷேகம் செய்து கொண்டிருந்தார்கள்!

கட் அவுட்டின் கால் பகுதியில் வழிந்து கொட்டிக் கொண்டிருந்த பாலைச் சிறுவர், சிறுமிகள் கொட்டாங்கச்சியால் போட்டி போட்டுக் கொண்டு பிடித்துக் கொண்டிருந்தார்கள்!

# 9

(லஞ்ச் ரூம். டைனிங் டேபிள் ஒன்றின் மேல் உட்கார்ந்து கொண்டு மாடசாமி கைகளால் தாளம் போட்டபடியே பாடிக் கொண்டிருக்கிறான். ரகுவீர், சுசிலா, பாண்டியன், ஆனந்த் ஆகியோர் உட்கார்ந்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓரத்தில் நின்று கொண்டிருக்கும் நிர்மலா, அந்தப் பாட்டைக் கேட்டு வெட்கத்தால் நெளிகிறாள்.)

மாடசாமி: என்னடி முனியம்மா... இது யாரு வச்ச மையி... எனக்கு வச்ச மையி... அது நீ சொன்ன பொய்யி... டமுக்கு... டய்யா... டய்யா... ஹைய்யா...

பாண்டியன்: என்னப்பா மாடசாமி...? நல்ல பாட்டைக் கெடுக்கறே?

மாடசாமி: சினிமாப் பாட்டுத்தானே... அப்பப்ப நேரத்துக்குத் தகுந்த மாதிரிவிட வேண்டியதுதான்... நீ கண்டுக்காதே... இந்தப் பாட்டை நான் ஏன் பாடினேன்? நிர்மலா கண்ணைப் பாரு தெரியும்.

(எல்லோரும் நிர்மலாவையே பார்த்துச் சிரிக்கிறார்கள்.)

நிர்மலா: ம்ஹூம்... நான் என்ன பயாஸ்கோப்பா காட்டறேன்... எல்லாரும் என்னைப் பார்த்து இந்தச் சிரிப்பு சிரிக்கிறீங்க?

சுசிலா: உன்னைப் பார்த்துச் சிரிக்கலே நிர்மலா... உன்னோட கண்ணுல அப்பியிருக்கிற மையைப் பார்த்துச் சிரிப்பு வருது.

நிர்மலா: ம்... ம்... இந்த மெட்ராசுல அடிக்கிற வெயில், கண்ணுல வெச்ச மையி ஒழுகிக் கன்னத்துக்கு வருது. நான் என்ன செய்யறதாம்? உங்களை மாதிரி சினிமா இஸ்டார் கணக்கா புருவத்தையும் மையையும் வரைய என்னால முடியுமா?

பாண்டியன் புருவமா அது... ரகுவீரோட மனசைச் சுண்டி இழுக்கும் பருவம் ஆச்சே...

சுசிலா: என்ன சார்... அவரை வெச்சிக்கிட்டே இப்படியெல்லாம் பேசறீங்க... (கோபமும், வெட்கமும் சமஅளவில் கலந்த உணர்ச்சியைக் கொட்டுகிறாள்.)

ரகுவீர்: ஐயோ... சுசி... நீ வெக்கப்பட்டே என்னைக் கொன்னுடுவே!

(ஆனந்த் டேபிளைத் தட்டுகிறான்.)

ஆனந்த்: இது லஞ்ச் ரூமா... இல்லே லவ் ரூமா...? அளவுக்கு மீறிப் போனா கல்யாணம் ஆனவங்க மூடு கெடாது?

பாண்டியன்: உண்மையான காதலி மனைவிதான்... நான் படிச்சிருக்கேன்.

ஆனந்த்: உன் பெண்டாட்டி போடற தலையணை மந்திரமே ஏகப்பட்ட வால்யூம் இருக்குமே... உனக்குப் படிக்க வேற டயம் இருக்கா என்ன?

ரகுவீர்: பாவம்... ஆனந்த்துக்கு ரெண்டு பொண்ணு. லவ்வு கிவ்வுன்னு வீட்டுல பக்கத்துல போனாலே மாடு முட்டும்.

ஆனந்த்: சரி.. சரி... இந்த விஷயம் சத்தியா, சிவமான்னு நீண்டுகிட்டே போகும். சனிக்கிழமையானாலும், நாம இங்க கூடியிருக்கிற சஸ்பென்ஸ் என்னான்னு பாருங்க...

மாடசாமி: ஆமா..... எல்லோரையும் சோக்கா டிரஸ் பண்ணிக்கிட்டு ஒரு மணிக்கே வரச் சொன்னாரு ஜி. எம். அவரே இன்னும் வரலையே. ஒரு வேளை ஏப்ரல் ஃபூலா இருக்



குமா?

ரகுவீர்: ச்சீ... இது என்ன மாசம்? உளருதே....

(அப்போது நிர்மலா திடீரென்று ஆர்வத்துடன் துள்ளுகிறாள்.)

நிர்மலா: ஜி. எம். ஐயா வந்தாச்சு.... ஜி. எம். ஐயா வந்தாச்சு...

(அப்போது ராகவாச்சாரியும், சாம்பசிவமும் உள்ளே நுழைகிறார்கள். ராகவாச்சாரி ஃபுல் சூட்டுடன் இருக்கிறார்.)

ராகவா: வெரிகுட்... எல்லாரும் வந்துட்டேளா?...

சுசீலா: நீங்கதான் சார் லேட்.

ராகவா: கோவிச்சுக்காதேள். இன்னைக்கு ஆபீசுல நடக்கப்போற சமாசாரத்தை என் ஆம்படையாகிட்டே சொன்னேன். ஸ்பெஷலா அலங்காரம் பண்ணி அனுப்பிச்சுட்டா...

(கோட்டுப் பாக்கெட்டில் இரு கைகளையும் விட்டுக் கொண்டு, ஸ்டைலாக ஆடுகிறார்.)

பாண்டியன்: என்ன சார்... கோட்டு முழங்காலுக்குக் கீழ் இருக்கு...?

ராகவா: இது என் மாப்பிள்ளை அழைப்பு கோட்டு. எனக்கு 1948 இல் கல்யாணம். அதுனால அந்த ஞாபகார்த்தமா கோட்டுக்கு 48 பட்டன் வெச்சி எங்க மாமனார் தைச்சுட்டார். இன்னிக்கு 12 மணிக்குக் கோட்டை மாட்ட ஆரம்பிச்சி, 1 மணி சுமாருக்குத்தான் கடைசி பட்டனைப் போட்டேன்...

ரகுவீர்: நல்லவேளை... 48 ல கல்யாணம் ஆச்சோ... பொழைச்சுதோ... 68 ல ஆகியிருந்தா கோட்டு தரைக்கே வந்திருக்கும்.

ராகவா: ஆமா... கூட்டத்துல நெறைஞ்ச மனுஷி மைதிலி... எங்கே காணும்?

(அப்போது மைதிலி ஏற்கெனவே குண்டு உடம்பில், ஒரு பட்டுப்புடவையைச் சுற்றிக் கொண்டு, மேலும் குண்டாகக் காட்ட, உள்ளே நுழைகிறாள்.)

மைதிலி: இதோ... வந்திட்டேன் சார்...

சாம்பசிவம்: நாயகி...ஜி.எம். சொன்னவுடனே வந்திட்டீங்களே... என்ன லேட்?

மைதிலி: என்ன சார் செய்யறது? லஞ்ச் டயத்துல அரட்டை அடிச்சிக்கிட்டே சாப்பிட்டுச் சாப்பிட்டு, வீட்டுல சாப்பாடே எறங்க மாட்டேங்குது. பேசாம பசியே இல்லேன்னு பதினைஞ்சு இட்லி மட்டும் தின்னேன்... மாடசாமி... இதை என் டேபிள் டிராயர்ல வெச்சிரு. பசிச்சா அப்புறமா சாப்பிட்டுக்கறேன். (ஹேண்ட் பேகைத் திறந்து ஒரு டிபன் பாக்ஸை எடுத்து மாடசாமியிடம் தந்துவிட்டு) நான் டிபன் சரியா சாப்பிடலேயேன்னு என் ஹஸ்பெண்ட் கவலைப்பட்டு டிஃபன் பேக் பண்ணிக் கொடுத்தார். என்ன வைச்சார்னு கூடப் பார்க்கலே நான்! அவசரத்தில் எடுத்துண்டு ஓடி வந்துட்டேன்.

(மாடசாமி அதை வாங்கிக் கொண்டு போகிறான்.)

ராகவா: நான் இப்போ லஞ்ச் டைம் தோழர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லப் போறேன்.

மைதிலி: சீக்கிரம் சொல்லுங்க சார்... நீங்க சஸ்பென்சை உடைக்கறதுக்குள்ளே நான் சாப்பிட்ட இட்லி ஜீரணம் ஆயிடும் போல இருக்கு.

ராகவா: இன்னைக்கு நம்ம லஞ்ச் ரூம்ல ஷூட்டிங் நடக்கப் போகுது. அதுக்காகத்தான் நீட்டா டிரஸ் பண்ணிண்டு வரச் சொன்னாரு நம்ம எம். டி.

சுசீலா: ஷூட்டிங்கா... கமலா? ரஜினியா சார்?

(மாடசாமி கேட்டுக் கொண்டே திரும்பி வருகிறான்.)

மாடசாமி: சிலுக்கு உண்டா சார்... அப்படியே நானும் சேர்ந்து ஓர் ஆட்டம் போட்டுக்கறேன்.

நிர்மலா: ஏய்... உடம்பு எப்படி இருக்கு? என்னை வெச்சிக்கிட்டே இன்னுய்யா...?

மாடசாமி: கண்டுக்காதே... சும்மா டமாஸ்... அவ்வளவுதான்.

ராகவா: சிலுக்கும் இல்லே. கைத்தரியும் இல்லே... இது வீடியோ ஷூட்டிங். நடிகர்கள் யார் தெரியுமா? முழுக்க முழுக்க லஞ்ச் டைம் தோழர்கள்தான்...


ரகுவீர்: அப்படியா? சார்... சார்... அப்படின்னு எனக்கு ஒரு ஹீரோ சான்ஸ் குடுங்க சார்.



# கோகுலம்

ஜூலை இதழ்

* பள்ளி திறந்து புதுப் புத்தகங்கள் வாங்கி அட்டை போட்டாகி விட்டதா? கோகுலம் உங்களுக்காக வண்ண வண்ண லேபிள்களைத் தாங்கி வருகிறது!




* அறிஞர் அண்ணா சொன்ன மின்மினிக் கதைகள்

* என் குழந்தைப் பருவம்
— சரோஜினி வரதப்பன்





* கோகுலம் தம்பி தங்கைகளின் பிருந்தாவனப் பக்கங்கள்

* 16 பக்க வண்ணப் படக்கதை வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி.




சாம்பசிவம்: என்னைக்கும் இந்த ஆபீசுக்கு நீதாம்பா ஹீரோ....

ஆனந்த்: எல்லா விஷயமும் இந்த சாம்பசிவத்துக்குத் தெரிஞ்சிருந்தும், நேத்தைக்கு கேட்டேன்... மூச்சு விடலையே...

பாண்டியன்: ஜெயவர்த்தனேக்கு மெட்ராசுல உளவுக்காரங்க இருக்கிற மாதிரி நம்ம எம். டி.க்கு லஞ்ச ரூம்லேயே ஸ்பைஸ் இருக்காங்கப்பா...

சாம்பசிவம்: சஸ்பென்சா சொல்லணும். வாயைத் திறந்தா தொலைச்சிருவேன்னாரு... நான் என்ன பண்ண முடியும்?

(மாடசாமி ஜன்னலை எட்டிப் பார்த்து விட்டுக் குதிக்கிறான்.)

மாடசாமி: சார்... நம்ம ஆபீஸ் வாசல்ல ஒரு வேன்... பின்னாலேயே எம். டி. கார்!

ராகவா: அவாளேதான்... வந்துட்டா... எல்லாரும் களையா மூஞ்சியை வெச்சிக்கோங்கோ. ஆத்துல ஆயிரம் பிரச்னை இருக்கலாம். எல்லாம் விடியோவுல தெரியப்படாது என்ன?

(எம். டி. காமிரா படை சூழ, ஒரு சபாரி சூட்காரருடன் உள்ளே அமர்க்களமாக நுழைகிறார்.)

எம். டி.: குட்மார்னிங்... எல்லாரும் பக்காவா இருக்கீங்க போல இருக்கே!

ராகவா: பர்ஃபெக்டா செட் பண்ணிட்டேன். நம்ம ஸ்டாஃப் எல்லாம் ரொம்ப ஆர்வமா இருக்கா.

ஆனந்த்: ஆமா சார்...எங்களுக்கெல்லாம் காலேஜ் டிராமாவுல நடிச்ச அனுபவம் இருக்கு... எத்தனை பக்கம் வசனம் குடுத்தாலும் உளறிடுவேன்.

ராகவா: அபிஷ்டு... வசனம் என்ன சிகரெட்டா? நீ ஊதித் தள்ளறதுக்கு...?

எம். டி.: சைலன்ஸ்... இவரை உங்களுக்கு இன்ட்ரடியூஸ் பண்றேன்... வாங்க... (சபாரி சூட்காரரை அறிமுகப்படுத்துகிறார்.) மீட் மிஸ்டர் கரிவரதன்... பேமஸ் கரி பட்டர் சப்ளையர்.

ராகவா: வருஷா வருஷம் எங்க தோப்பனாரோட தெவசத்துக்கு இவர் கடை வெண்ணெய்தான் நான் வாங்கறது வழக்கம்.

எம். டி.: யோவ்... அறிமுகப்படுத்தும் போது என்னய்யா தெவசம் கிவசம்னு... பேச்சு?

கரிவரதன்: வணக்கம். எங்க கம்பெனி வெள்ளிவிழாவை முன்னிட்டு, டீ. வி. விளம்பரதாரர் நிகழ்ச்சியில உங்களைக் காட்டப் போறேன். வெண்ணெய் பாக்கெட் தரேன்... ரசிச்சு சாப்பிடற மாதிரி போஸ் கொடுத்தா போதும்.

ஆனந்த்: ரசிக்கிற மாதிரி வெண்ணெய் இருந்தா ஆட்சேபனை இல்லே.

ராகவா: சப்போஸ் வெண்ணெயில சகிக்க முடியாது வாசனை வந்தாலும் கொஞ்சம்

பொறுத்துண்டு, நடியுங்கோ.,... என்ன அப்படித்தானே கரிவரதன்?

கரிவரதன்: இது டெமான்ஸ்ட்ரேஷன் வெண்ணெய். கண்டிப்பா நாத்தம் வராது. இந்தாப்பா... எல்லாருக்கும் வெண்ணெய், ரொட்டி, கூல்டிரிங்க்ஸ் எல்லாம் குடு...

(கரிவரதனின் கூட வந்த ஆள், அனைவருக்கும் ஒரு கூல்டிரிங்க் பாட்டிலும், வெண்ணெய் பாக்கெட்டும் கொடுக்கிறான்.)

சாம்பசிவம்: என்ன பாண்டியா? நீ பாட்டலை ஓபன் பண்றதைப் பார்த்தா இங்கிலாந்து மேட்சுல ஜெயிச்ச கபில் ஓபன் பண்ற மாதிரி இல்ல இருக்கு.

பாண்டியன்: பின்ன...? 35 லட்சம் பேர் பார்க்கிற டீ. வி. யில என் மூஞ்சி தெரியப் போகுதே... சும்மாவா?

(கூல்டிரிங்க் குடித்தவுடன் எல்லோரும் லஞ்ச் டேபிளில் உட்கார்ந்து பரபரவென்று வெண்ணெய்ப் பாக்கெட்டைப் பிரிக்க, பிரகாசமான ஹாலஜன் லைட் எரிந்து, வீடியோ கேமிரா ஓடுகிறது.)

எம். டி.: இதுக்கு சவுண்ட் கிடையாது. எல்லாரும் சந்தோஷமா சிரிச்ச மாதிரி ரொட்டிக்கு வெண்ணெய் தொட்டுச் சாப்பிடுங்கோ... அப்புறமா நாங்க சவுண்டு குடுத்துப்போம்...

(அப்போது சுசீலா வெண்ணெய் பாக்கெட்டைப் பிரிக்க, அது கைதவறி கீழே விழுகிறது. அருகே உட்கார்ந்து இருந்த ரகுவீர் உடனே தன் கையிலுள்ள வெண்ணெயை சுசீலாவின் வாயில் ஊட்டிவிடுகிறான். இதைக் கவனித்துவிட்ட எம். டி. வாயில் வெண்ணெயுடன் எழுந்துதுள்ளுகிறார்.)

எம். டி.: என்ன தகுவீர்?... இங்க என்ன லவ் சீனு எதுக்கறுங்க... இத்தனை பேதுக்கு நதுவுல துதீலாவுக்கு வெண்ணெய் எதுத்து ஊத்தி விதறியே... நோ... இட் ஈஸ் பேத்...

(எம். டி. யின் மழலையைக் கேட்டு, அனைவரும் பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக் கொள்கின்றனர்.)

கரிவரதன்: போகட்டும் விடுங்க... இந்த மாதிரி சீன் விளம்பரத்துல வந்தா பார்க்கறவங்களுக்கும் கொஞ்சம் கிளுகிளுப்புத் தானே...? ஆமா... அந்த பையன் பேரு என்ன சொன்னீங்க...? ரகுவீரா?

எம். டி.: ஆமா... எங்க ஆபீஸ் காதல் மன்னன் இவன்தான்.

கரிவரதன்: நல்லவேளை... தப்பிச்சேன்... இவங்க அப்பாகிட்டே என் பொண்ணைத் தர்றதா சொல்லியிருந்தேன்... என் வெண்ணெய் செஞ்ச புண்ணியம், பையனோட யோக்கியதை புரிஞ்சு போச்சு.

(எல்லோருக்கும் நன்றி சொல்லிவிட்டு, வீடியோ கோஷ்டி புறப்பட, எம். டி., ராகவாச்சாரி ஆகியோர் போகிறார்கள். சிறிது நேரத்தில் ஜி. எம். மட்டும் திரும்பி வருகிறார்.)

சாம்பசிவம்: ஏன் சார்...? நீங்க மட்டும் தனியா வரீங்க? எம். டி. போயிட்டாரா?

ராகவா: அவருக்குச் சாப்பிட்ட வெண்ணெய் ஒத்துக்கலே. வயித்தை என்னமோ பண்றதாம். வீட்டுக்குப் போயிட்டார். வீடியோ ஆர்வத்துல சணப்பன் பேப்பரோட வெண்ணெயைக் கபளீகரம் பண்ணிட்டாரோ என்னவோ? இன்னொரு குட் நியூஸ்.

பாண்டியன்: என்ன சார்?

ராகவா: இந்த வீடியோ எடுக்க வந்த வெண்ணெய் கரிவரதன் யாரு தெரியுமோ? ரகுவீரோட அப்பா ஒரு பணக்கார இடமாப் பார்த்து வெச்சிருக்கேன்னு குதிச்சாரே... அது கரிவரதனோட சீமந்த புத்திரி கறுப்பு விசாலம்தானும்.

சுசீலா: அப்படின்னா... ரகுவீரை அவருக்குப் பிடிச்சுப் போச்சா, சார்...

ராகவா: எப்படிப் பிடிக்கும்? அதுதான் வெண்ணெய் வந்து வழுக்கி விட்டுடுத்தே.. உங்க காதல் லீலைகளைக் கண்ணால பார்த்துட்டு, மனசை இரும்பாக்கிண்டு போயிட்டார்... அதுனால ரகுவீர் — சுசீலா காதல் இன்னொரு மைல் கல்லைத் தாண்டிடுத்து...

(அப்போது போன் அழைப்பு வரவே, ஜி. எம். ராகவாச்சாரி தம் அறைக்கு ஓடுகிறார். போனை எடுத்துக் கேட்கக் கேட்க, அவர் முகம் வேர்த்து, கிறுத்துப் போகிறது. ரிசீவரை ஓசைப்படாமல் வைத்துவிட்டு, தலைதெறிக்க லஞ்ச் ரூமிற்கு ஓடி வருகிறார்.)

ராகவா: மோசம் போயிட்டோம்... மோசம் போயிட்டோம்... எங்கெங்கேயோ நடந்ததா பேப்பர்லே படிச்சோம்... இப்போ நம்ம ஆபீசுக்கே வந்துடுத்தே... ஏழுமலையானே... கோவிந்தா!

சுசீலா: (பதற்றத்துடன்) என்ன சார் ஆச்சு?

ராகவா: பா... பா..., (வார்த்தை வராமல் குழறுகிறது.)

ரகுவீர்:; உங்க பாட்டிக்கு ஏதாவது ஆக்சிடென்ட்டா சார்?

ராகவா: எங்க பாட்டிக்கு ஒண்ணும் இல்லே... அவளுக்கு 98 வயசுதானே ஆறது. நேத்தைக்குக் கூட டீ. வி. யில ஈரப்பதம் எவ்வளவுன்னு கேட்டுட்டு, வடாத்துக்குப் பச்சமொளகாய் அரைச்சாளே... இது... இது... நம்ம ஆபீஸ்ல யாரோ பாம் வெச்சிருக்கிறதா போன்... ஆபீசுக்குள்ள குண்டு இருக்காமே... என்ன பண்ணுவேன்? ராமா...

(குண்டு என்றதும் எல்லாரும் என்ன செய்வது என்று தெரியாமல், பேய் அறைந்தது போல் நிற்கிறார்கள்.)

(திரை)

(தொடரும்)

# வெயில் வீணாக ஒரு வழி!



**வேலையும் ஆயிற்று, அருமையும் புரிந்தது!**

கோடை விடுமுறையின் போது எங்கள் ஊர் வேலைக்காரர்கள் மூன்று மாத 'லீவி'ல் தங்கள் ஊருக்குப் போய்விடுவார்கள். ஒவ்வொரு கோடையிலும் மாற்று ஆள் கிடைக்காமல் திண்டாடுவேன். ஆனால் போன தடவை ஓர் அபாரமான யோசனை தோன்றியது — அதன்படி என் எட்டு வயது மகனையும் ஒன்பது வயது மகளையும் வீட்டு வேலைகளைச் செய்வதில் எனக்குத் தினமும் அரை மணி நேரம் உதவச் சொல்லிக் கேட்டேன். பதிலுக்கு அவர்களுடைய குட்டி உண்டியல்களில் தினமும் நான் சிறு தொகை ஒன்றைப் போடுவதாக ஒப்பந்தம்! வேலைக்கு வேலை ஆனதோடு அவர்களுக்குச் சுய சம்பாத்தியம் மற்றும் சேமிப்பின் அருமையும் புரிந்தது.

— சந்திரிகா நாராயணஸ்வாமி, பம்பாய்—19.

வாசகர் பங்கு

**தென்னை மர நிழலில்...**

என் அண்ணன் மற்றும் தங்கையுடன் சேர்ந்து சென்ற கோடை விடுமுறையின் போது எங்கள் வீட்டுவாசலிலேயே தென்னை மர நிழலில் ஒரு சிறிய பெட்டிக் கடை வைத்தேன். மிட்டாய், சிகரெட், வத்திப் பெட்டி போன்ற சிறிய பொருட்களை விற்ற இக்கடை எங்கள் தெருவில் மிகப் பிரபல மாகிவிட்டது. இரண்டு மாத விடுமுறையில் பொழுதும் போனது, கணிசமான தொகை யும் லாபமாகக் கிடைத்தது.

— எஸ். சௌமிஸ்ரீ, கடலூர்.

**வீடே வண்ண மயமாயிற்று!**

போன வருடம் என் இரு பெண்களுக்கும் எம்பிராய்டரி கற்றுக் கொடுத்தேன். புதி தாக ஒரு கைவேலை கற்றுக் கொண்ட உற்சா கத்தில் இரண்டு பேருமாகச் சேர்ந்து வீட் டில் உள்ள திரைச் சீலை, மேஜை விரிப்பு, தலையணை உறை என்று ஒரு துணி விடாமல் எம்பிராய்டரி செய்து வண்ண மயமாக்கிவிட் டார்கள்! வீட்டிற்கு வந்தவர்களிடமெல்லாம் பாராட்டுப் பெற்றுப் பூரித்தார்கள்.

— எஸ். ராதாலட்சுமி, நெய்வேலி.

**சிறுகச் சேர்த்து...**

விளையாட்டாகத் தீப்பெட்டிக்குள் குச்சி களை அடுக்கும் வேலையைக் கொடுத்துச் செய்யச் சொன்னபோது என் சிறிய தங்கை கள் இருவரும்-உற்சாகத்துடன் செய்யலா யினர். இந்த உபயோகமான வேலை செய்த தில் கோடை விடுமுறை பறந்து போனது. தினமும் மூன்று ரூபாய் கூலி கிடைத்தது. சேர்ந்த தொகை அவர்களுக்குப் பள்ளி திறந்ததும் பாடப் புத்தகங்கள் வாங்கித் தர உபயோகமாய் இருந்தது.

— டி. ராஜசேகரன், காஞ்சிபுரம்.

**வெளியிலிருந்து ஆட்கள் வேண்டாம்!**

என் கணவர், குழந்தைகளை லைப்ரரியில் சேர்த்து அவர்களுக்குப் புத்தகங்கள் படிக் கும் வழக்கத்தை ஏற்படுத்தினார். அதோடு வீட்டில் உள்ள சிறிய பழுது பார்க்கும் வேலைகளைச் செய்யச் சொல்லிக் கொடுத் துப் பழக்கினார். படித்த புத்தகங்களின் அடிப்படையில் வினாடி வினா நடத்தினார். இப்போது என் குழந்தைகள் அறிவும், பொறுப்பும் நிறைந்த இளைஞர்கள் — எங்கள் வீட்டில் எந்த 'ரிப்பேர்' வேலைக்கும் நாங்கள் வெளியிலிருந்து ஆட்களைக் கூப்பிடுவ தில்லை — சமையலறைக்கு Glaced Tiles பொருத்தும் வேலையைக் கூட என் கணவ ரும், மகனுமாகச் சேர்ந்து செய்து முடித்து விட்டார்கள்.

— சாரதா கணபதி, பம்பாய் — 22.

**புதுப் பொலிவு!**

சென்ற கோடையில் என் இரு பையன் களுக்கும் 'பெயின்ட்' அடிக்கக் கற்றுக் கொடுத்தேன். வீட்டில் இருந்த நாற்காலி, ஸ்டூல், மேஜை, பைப்பாய் என்று எல்லாப் பொருட்களுக்கும் புதுப் பொலிவு ஏற்று வதில் உற்சாகத்துடன் எனக்கு உதவினார் கள். வீட்டிற்கு வருபவர்கள் அப்பொருட் களைப் பார்த்து 'புதிதாய் வாங்கியதா?' என்று கேட்டபோது பெருமை பிடிபட வில்லை!

— உமா குமார், திருநெல்வேலி.

**கோடையின் கொடுமையே மேல்**

எங்கள் குடும்ப நண்பர் ஒருவருக்கு நிறைய குழந்தைகள். பையன்கள் வெளியில் சென்று அலையாமல் இருக்க வீட்டிலேயே சாதாரணமாகச் சீட்டு விளையாட ஊக்கு வித்து வந்தார். நாளடைவில், பையன்கள் வளர்ந்து, சீட்டு ஆடுவதையே தொழிலாகக் கொண்டு, இரவு பகலாகக் காசு வைத்துச் சீட்டு ஆடி வருகின்றனர். சிறு வயதில் வெளி யில் சுற்ற விட்டிருந்தாலும் பரவாயில்லை என இப்போது மிகவும் வருந்துகிறார் நண்பர்.

— எஸ். பாலசுப்பிரமணியன்,
பொள்ளாச்சி.

**உபயோகமான கைத்தொழில்**

என் மகளுக்கு வாரப் பத்திரிகையில் வெளியாகும் தொடர்கதைகளைச் சேகரித்து பைண்டு செய்யும் முறையைக் கற்றுக் கொடுத் தேன். விடுமுறையில் கற்றுக் கொண்ட கலையை மறந்து விடாமல் கல்வி ஆண்டு இறுதியில் தன் பாடப் புத்தகங்களை பைண்டு செய்து, ஏழை மாணவ மாணவியருக்குக் கொடுத்து உதவி வருகிறாள்.

— டி. ஜயச்சந்திரன், சென்னை — 94.



**ப்ளோப்ளாஸட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக் கல் முறையில் பரிசாகப் பெறு பவர்:**

Sarada Ganapathy.
8/3, Surya Nivas.
Sion — West.
Bombay — 22.

### லாபகரமான பொழுது போக்கு!

கடையில் ஒயர் பை பின்னிக் கொடுத்தால் ஒரு பைக்கு இவ்வளவு என்று கணக்கு வைத்துப் பணம் கொடுப்பார்கள். சென்ற கோடை விடுமுறையில் என் மகளுக்குப் பை பின்னக் கற்றுக் கொடுத்தேன். வெயிலில் அலையாமல் அவளுடைய பொழுது இனிமையாகவும், வருவாயுடன் கூடியதாகவும் கழிந்தது.

— எல். வத்சலா, கும்பகோணம்.

### செஸ் சாம்பியன்

யாருக்கும் தொந்தரவு தராத, மூளைக்கு மட்டும் வேலை தரும் விளையாட்டு 'செஸ்'. என் பத்து வயது மகனுக்குச் சென்ற விடுமுறையின் போது செஸ் போர்டு வாங்கித் தந்து அவ்விளையாட்டை விளக்கினேன். இப்போது என்னையே தோற்கடிக்கும் அளவிற்கு அவன் சிறப்பாக விளையாடுவது எனக்குப் பெருமையாய்த்தான் இருக்கிறது.

— ஆர். கிருஷ்ணமூர்த்தி, சென்னை—2.

### வேலையும் ஆயிற்று, விடுமுறையும் கழிந்தது!

ஏப்ரல், மே — புளி சீஸன் ஆயிற்றே! மலிவாகக் கிடைத்ததால் 25 கிலோ புளி வாங்கிப் போட்டேன். அதிலிருந்து கொட்டைகளை நீக்கும் வேலையில் என் இரு குழந்தைகளையும் ஈடுபடுத்தினேன்., அவர்களுக்கு அலுப்புத் தட்டாத வண்ணம் நானும் அவர்களுடன் உட்கார்ந்து கொண்டு, நல்ல கதைகளையும் என் கல்லூரி, பள்ளி வாழ்க்கை அனுபவங்களையும் சொல்லிக் கொண்டே வேலை செய்தேன். எனக்கு வேலையும் ஆயிற்று! குழந்தைகளுக்கு விடுமுறையும் பறந்தோடியது! வெயிலும் விருச்க!

— லலிதா பிரபாகர், கல்கத்தா—45.

---

ஒருமுறை முல்லா தன் வறுமையைக் கூறி மன்னரிடம் பரிசில் பெறலாம் எனச் சென்றபோது, மன்னன் முல்லாவைப் பார்த்து, "நான் கூறும் மூன்று கேள்விகளுக்குத் தக்க பதில் தந்தால்தான் பரிசு என்றார். அதற்கு முல்லாவும் சம்மதித்தார்.

மன்னர் முதல் கேள்வியைக் கேட்டார். ஏன் என் உள்ளங்கையில் முடியில்லை?"

முல்லா, "என்னைப் போன்ற ஏழைகளுக்குப் பரிசளித்துப் பரிசளித்து உம் உள்ளங்கையில் முடி இல்லை" என்றார்.

"உன் உள்ளங் கையில் ஏன் முடி இல்லை?" இது மன்னரின் இரண்டாவது கேள்வி.

"உம்மைப் போன்ற வள்ளல்களிடமிருந்து பரிசு பெற்று என் உள்ளங்கையில் முடி இல்லை" என்றார்.

திருப்தியடைந்த மன்னர் கடைசியில், "இந்த அவையில் வீற்றிருப்போருக்கு ஏன் உள்ளங் கையில் முடி இல்லை?" என்று கிடுக்கிப் பிடி போட்டார்.

முல்லாவும் விடுவதாக இல்லை:"உம் வள்ளல் தன்மையைப் பாராட்ட கைகளைத் தட்டியே மகிழ்ந்ததனால் இவர்கள் கைகளிலும் இல்லை" என்றார் சாதுரியமாக.



முல்லாவின் அறிவுத் தன்மையை வியந்த மன்னர் ஏராளமான பரிசுகளை அவருக்கு வழங்கினார்.

— தேனி எம். சுப்பிரமணி

---



"முல்லா! காரட் கொள்ளை ருசியாயிருக்கும். அப்படித் தானே?" என்றார் பாதுஷா.

"ஆமாம்பாதுஷா ,அதில்சந்தேகமென்ன ?காரட்கொள்ளை ருசி" என்றார் முல்லா.

தினமும் காரட்டே சமையல் ஆனதால் சிறினர் பாதுஷா. "வீசி எறியுங்கள்! இந்தக் காரட்டைப் பார்த்தாலே கோபம் வருகிறது!" என்றார்.

"சேச்சே, இதுவும் ஒரு கிழங்கா? படுமோசம்!" என்று பாதுஷாவுக்கு ஜால்ரா போட்டார் முல்லா.

"என்ன முல்லா, போன வாரம்தானே இதைப் புகழ்ந்து சொன்னீர்கள்?" என்று கேட்டார் பாதுஷா.

"ஆமாம் பிரபோ! ஆனால் முல்லா அரசனுக்கு அடிமையே தவிர, காரட்டுக்கு அல்லவே!" என்றார் முல்லா!


— பிரியா பாலு.

சட்டம் என்ன சொல்லுகிறது?


பதில்கள்:
வழக்கறிஞர் ஆர்.எம்.கிருஷ்ணராஜு

# பணம் பேச ஆரம்பித்துப் பாசம் மௌனம் சாதிக்கும் போது...








**வி. லட்சுமி, சென்னை — 5.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்ட என் தந்தை, திருவல்லிக்கேணி வங்கி ஒன்றில் ரூ. 9,000/— போட்டிருந்தார். அந்தத் தொகையை எனக்குத் தெரியாமல் என் அண்ணனும், இரண்டு தம்பிகளும் பெற முயற்சி செய்கிறார்கள். ஒரே பெண்ணான நானும் அந்தப் பணத்தில் பங்கு பெற முடியுமா? என்ன செய்ய வேண்டும்?

பணம் பேச ஆரம்பிக்கும்போது, பாசம் மௌனம் சாதிக்கும் என்ற உண்மையை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள்.

உயில் (விருப்புறுதி) எதுவும் எழுதி வைக்காமல் உங்கள் தந்தை இறந்திருந்தால், பாங்கில் உள்ள பணத்தில், உங்களுக்கும், உங்கள் சகோதரர்களுக்கும் சம பங்கு உண்டு.

சிவில் நீதிமன்றத்தில் 'வாரிசு உரிமைச் சான்றிதழை' முறைப்படி பெற்று, வங்கியிடம் சேர்ப்பித்து, உங்கள் பங்குத் தொகையை அசலும், வட்டியுமாக நீங்கள் வசூலித்துக் கொள்ள முடியும்.

அவசியப்பட்டால், நீங்கள் 'வாரிசு உரிமைச் சான்றிதழை'ச் சமர்ப்பிக்கும் வரையிலும், உங்கள் தந்தையின் பணத்தை எவருக்கும் தரலாகாதென்று வங்கிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து தடைக் கட்டளையும் பெறலாம்.

**எஸ். சேகரன், கோவை — 2.**

வாடகையும் தராமல், கட்டிடத்தையும் காலி செய்யாமலிருக்கும் ஒரு 'ரௌடி'யை எப்படியாவது இடத்தைவிட்டு அப்புறப்படுத்தினால், பெருந்தொகை ஒன்றை எனக்குத் தருவதாக, கடைக்காரர் ஒருவர் ஒப்பந்தம்

செய்து கொள்ள முன் வந்திருக்கிறார். அந்த ஒப்பந்தம் சட்டப்படி செல்லுமா?

அதெப்படி செல்லும், மிஸ்டர் கேசவன்?

வீடு வாங்கச் செய்து கொள்ளும் ஒப்பந்தமும், விபசாரம் செய்யச் செய்து கொள்ளும் ஒப்பந்தமும் ஒன்றாக முடியுமா?

வியாபாரம் துவக்கச் செய்து கொள்ளும் ஒப்பந்தமும், விரோதிகளைக் கொல்லச் செய்து கொள்ளும் ஒப்பந்தமும் ஒன்றாக முடியுமா?

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நாட்டில் பெருகி வரும் 'ரௌடி'களை அப்புறப்படுத்துவது (அல்லது அப்புறப்படுத்தாதது) சட்டத்தின் பணியே அன்றி, அது உங்கள் வேலை அல்ல. அதற்கெல்லாம் ஒப்பந்தமோ, அதற்குச் சட்டத்தின் அங்கீகாரமோ கிடையாது.

கே. ஆர். தங்கவேல், வெள்ளமடை.

''என் நண்பர் 1972 முதல் 50 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு நிம்மதியாக இருந்தார். 1980இல் வீட்டுக்காரரின் விருப்பத்தின் பேரில் 60 ரூபாய் கொடுக்கவும் ஒப்புக் கொண்டார். இப்போது ரிடையர் ஆகி மூன்று வருடம் ஆயிற்று. 80 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வீட்டுக்காரர் வற்புறுத்துகிறார். காரணம், சதா வீட்டிலேயே இருப்பதால்தானாம். பரிகாரம் கூறுங்கள்.

கட்டிடத்தில் கூடுதலோ, மேம்பாடோ, மாறுதலோ வீட்டுச் சொந்தக்காரரின் செலவில் செய்யப்பட்டிருந்தாலோ, சொத்து வரி உயர்த்தப்பட்டிருந்தாலோ அன்றி, நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகை அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட வாடகைக்கு அதிகமாக வீட்டுக்காரர் எந்தத் தொகையும் கேட்க முடியாது.

''சதா வீட்டிலேயே இருக்கிற'' காரணத்திற்காக அதிக வாடகை கேட்கும் வீட்டுக்காரரின் விவஸ்தை கெட்டத் தனத்திற்கு உங்கள் நண்பர் அடிபணிய வேண்டிய அவசியமில்லை.

கே. வைத்தியநாதேஸ்வரன், நெய்வேலி— 3.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் பத்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 18,000. ஆனால் தொழிற்சங்கங்களில் சேர்ந்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கையோ 75,000 க்கும் மேல்! இது எப்படி முடியும் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? விஷயம் இதுதான் ... எல்லாத் தொழிலாளர்களையும் எல்லாத் தொழிற்சங்கங்களும் உறுப்பினர்களாக்கிக் கொண்டு, தங்களைப் பலம் பொருந்தியதாகப் பொய்த் தோற்றத்தை உண்டாக்கிவிடுகின்றன. ஒரு தொழிலாளி எத்தனை தொழிற்சங்கங்களில் வேண்டுமானாலும் உறுப்பினராகலாமா? அத்தனை சங்கங்களின் நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்கத் தனித்தனியே வாக்களிக்கலாமா? இதைத் தடுக்க தொழிற்சங்கச் சட்டங்களில் இடம் இருக்கிறதா?

இந்த நிமிடம் வரை இம்மியளவும் இடம் இல்லை.

சட்டத்தின் அனுமதியோடும், அங்கீகாரத்தோடும் தாராளமாகவும், ஏராளமாகவும் நடந்து கொண்டிருக்கிற நகைப்பூட்டும் நடைமுறைகளுள் இதுவும் ஒன்று!


ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம், தொழில் செய்பவரே அத்தொழிற்சங்கத் தலைவர் என்ற கண்டிப்பும், கட்டுப்பாடும்தான் தொழிலாளர்களின் நன்மைக்கு உகந்த திட்டம். இதற்கேற்ற சட்டத்தை அரசாங்கம் கொண்டு வராத வரை இப்படிப்பட்ட சிரிப்புக்கிடமளிக்கும் விசித்திர நிலைகள் இருந்து கொண்டேதான் இருக்கும்.

---

**ஜாக்கிரதை!**

# உங்கள் குழந்தை கூடக் கயவர்களால் கடத்தப்படலாம்!

டீ.வி.யில் தினந்தோறும் காணாமல் போன குழந்தைகள் பற்றிய அறிவிப்பு ஒளிபரப்பாகிறது. எத்தனை குழந்தைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன? கண்டுபிடிக்கப்படாத குழந்தைகளின் கதி என்ன? விவரங்கள்......



அடுத்த இதழில்......

# ஊழலினிடையிலும் ஒரு குதூகலம்!

"பம்பாய், தில்லி தொலைபேசிகளைப் பராமரிக்க அண்மையில் துவக்கப்பட்ட மஹாநகர் டெலிபோன் நிகம் (இதன் ஆங்கிலப் பெயரும் இதுவே!) தனது முதல் பத்திரிகையாளர் கூட்டத்தை ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடத்தியது. இந்தக் கூட்டத்தில் கழகத்தின் பொருளாதார நிலைமை மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதால், வாடிக்கையாளர்களுக்குத் தொலைபேசி வேலை செய்யாத ஒவ்வொரு நாளுக்கும் அவர்கள் செலுத்தும் வாடகையில் தள்ளுபடி செய்து கொடுக்க இயலாது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் 72 நபர்களுக்கு உணவு அளிக்க ரூ. 11,089/– ம், மதுவகைகளுக்காக ரூ. 820/– ம், பழரசங்களுக்காக ரூ. 870/– ம், மெது பானங்களுக்காக ரூ. 246/– ம், சோடா போன்றவற்றிற்காக ரூ. 176/– ம் செலவிடப்பட்டது!"

இந்த செய்தியை டைம்ஸ் ஆஃப் இந்தியா தனது முதல் பக்கத்தில் கட்டம் கட்டி வெளியிட்டது. ஒரு வாரம் கழித்து தொலைபேசி கழகத்தின் பொது மேலாளர், செலவழித்த தொகை மற்ற நிறுவனங்களுடன் ஒப்பு நோக்குகையில் அப்படியொன்றும் அதிகமல்ல என்றும் தங்களுடைய விருந்தோம்பலை அனுபவித்த ஒரு நிருபர், இது மாதிரி எழுதியிருக்கக் கூடாது என்றும் கடிதம் எழுதினார். இதைப் பிரசுரித்துவிட்டு, டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் பிரதம நிருபர் ஆல்வின் பெர்னாண்டஸ் மீண்டும் எழுதினார்:

"அவர்கள் செலவழித்த தொகையில் நூற்றில் ஒரு பங்கு செலவில் இந்தக் கூட்டத்தை நடத்தியிருக்கலாம். டெலிபோன் வாடிக்கையாளர்களுக்குத் தொலைபேசி வேலை செய்யாத நாள் ஒன்றுக்கு ரூ. 3/– தள்ளுபடி செய்து கொடுக்க இயலாத ஒரு கழகத்திற்கு இந்தச் செலவு எப்படி நியாயமாகும்? அவர்களுடைய உபசரிப்பை அனுபவித்தவர்கள் இப்படி எழுதியிருக்கக்கூடாது என்று கூறுவதிலிருந்து அவர்கள் எங்களை மௌனியாக்குவதற்குத்தான் உபசரித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. என்னுடைய விருந்துக்கான செலவை (ரூ. 150/–) மணி ஆர்டர் மூலம் கழகத்திற்கு அனுப்பியுள்ளேன்."

இதுபோன்ற நிருபர்கள் இருக்கும் வரை பத்திரிகை சுதந்திரம் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

—ஜயா கோகுல், பம்பாய் – 86.

பாங்க் ஆஃப் தஞ்சாவூர் அம்பத்தூர் கிளையில் கணக்கு வைத்திருக்கும் என் நண்பர் தமது கணக்கிலிருந்து ரூ. 400/– பெற்றார். எண்ணிச் சரிபார்க்கும்போது அதில் ஏற்கெனவே முக்கால் பாகம் கிழிந்திருந்த ஒரு பத்து ரூபாய் நோட்டு முழுவதுமாகக் கிழிந்துவிட்டது. வேறு நோட்டு கேட்டதற்கு வாக்குவாதம் ஏற்பட்டு ஏகமாக வளர்ந்ததேயொழிய நோட்டு மாற்றப்படவில்லை. பாங்கு மேலாளர் கூட, 'என்னிடம் வராதீர்கள்' என்று கூறிவிட்டார். கடைசியில் அந்த வங்கியில் பணிபுரியும் வேறு ஒருவர் அதைப் பெற்றுக் கொண்டு தமது சொந்தப் பணத்திலிருந்து பத்து ரூபாய் நோட்டு எடுத்துக் கொடுத்தார். வங்கிகளில் சேமிக்கும்படி விளம்பரங்கள் செய்கிறார்களேயொழிய, பணம் போடுகிறவர்களின் வசதியையும் நலனையும் கவனிப்பதில்லையே! இதை எண்ணினால் வருத்தமாக இருக்கிறது. கிழிந்த நோட்டுக்களைக் கஷ்டமில்லாமல் மக்கள் மாற்றிக் கொள்ள அரசு வழி செய்யக் கூடாதா?

— ஏ. ஜி. அசோக் ராஜா, சென்னை–4.

## வாசகர் குமுறல்

7.6.86 இரவு டி. வி. யில் குறிப்பிட்ட ஒரு குரூப் ரத்தம் அவசரத் தேவை என்று அறிவிப்புத் தந்தனர். எனக்கு அந்த குரூப் ரத்தம்தான்; ரத்த தானம் செய்யவும் தயாராக இருந்தேன். எனவே டி. வி. யில் எந்த டெலிஃபோன் நெம்பரில் தொடர்பு கொள்ளச் சொன்னார்களோ அந்த நெம்பருக்கு ஃபோன் செய்ய விரைந்தேன். ஆனால் என்ன ஏமாற்றம்! மெடிகல் ஸ்டோர்கள் இரண்டு, நர்ஸிங் ஹோம் ஒன்று ஆகியவற்றில் நான் காசு கொடுக்கத் தயாராக இருந்தும் ஃபோன் செய்ய அனுமதி மறுத்து விட்டார்கள்! அவசரக் காரணத்தைக் கூறியும் அவர்கள் மனம் இளகவில்லை. இவ்வளவு ஏன், போலீஸ் ஸ்டேஷனிலேயே அனுமதி தரவில்லை! கடைசியில் ஒரு டாக்டர் அனுமதி அளித்தார்; ஆனால் அதற்குள் ஃபோன் நெம்பர் மறந்துவிட்டது! டி. வி. நிலையத்துக்கு ஃபோன் செய்தால் ஃபோன் எடுப்பார் இல்லை! டி. வி. கண்ட்ரோல் ரூமை அழைத்துப் பேசினால் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று கைவிரித்து விட்டனர்! எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்ச நஞ்சமல்ல.

— ஏ. கோபு, சென்னை–78.

சிலர் ஊர்க் கோயிலோடு நின்று கொண்டார்கள். சிலர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டார்கள். சிலர்தான் ரயில் நிலையத்திற்கு வந்தவர்கள்.

ஒருவர் குமரவேல் ஆசாரி. அவர்தான் தாளக்கட்டை போடுகிறவர். குள்ளமாகக் கையும் களவுமாகப் பிடிபட்ட முழி. அடுத்து மொட்டையப்ப கவுண்டர். எப்பவோ ஒரு கச்சேரியில் பாலக்காடு மணி ஐயர் வாசிப்பைப் பார்த்து விட்டுத் தன்னை ஓர் ஏகலைவனாகப் பாவித்துக் கொண்டு தலையை உருட்டு உருட்டென்று உருட்டுகின்ற ஆசாமி. அவர்தான் மிருதங்கம். தடவித் தடவி ஆன மொட்டை போல சதா ஒரு தலை தடவல்.

அடுத்து ஒரு பஜனை தவறாமல் விளக்குத் தண்டைப் பிடித்துத் திரிந்த பூபாலன். அரை நிஜார் போட்ட காலத்தில் அவன் தண்டைப் பிடித்தான். ஆயிற்று. அடுத்த ஆனியிலோ ஆவணியிலோ அவனுக்கும் கால் கட்டு விழுந்து விடும். பெண் பார்க்கிறார்கள்.


சென்று தூக்கம் கலைந்த மாதிரி நாதமுனி நாயுடுவின் கீர்த்தனைக் கிறக்கத்திலிருந்து விடுபட்டு ஓடும் அதே பணிவு.

இவர்களெல்லாம் வர வேண்டியவர்கள். ஒரு கோஷ்டி. வந்திருக்கிறார்கள். ஆனால் விழுவெள்ளி வில்லாளன் வர வேண்டிய ஆளல்ல. அந்தக் காலத்தில் நாஸ்திகர். அப்புறம் கழகம் உடைந்து கட்சி கட்சியாகப் பிளக்கிற சமயத்தில் டக்கென்று



# அடிவேர்

## வையவன்



ஆள் நெடுநெடுவென்று வளர்ந்துவிட்டான். பதினெட்டாம் போருக்கு நடுகிற அர்ஜுனன் தவசு மரம் மாதிரி. இருந்தாலும் அதே பவ்யம். விளக்குத் தண்டு தூக்குவது அவன் பட்டா பாத்தியம் போல் அதே ஈடுபாடு. ஆணிக் குத்து மாதிரி ஊன்றிப் பார்த்து உட்கிரகிக்கிற அதே ஊமைப் பார்வை.

சமயத்தில் "தடிமாடுமாதிரிமுழிக்கிறியே! பிள்ளைவாள் வீட்டிலே வெளக்குக்கு எண்ணெய்ச் சொம்போட நிக்கிறாங்க! முண்டமே, தண்டு தூக்கினா மட்டும் போறுமா?" என்று இரைந்தாலும் சிவுக்

ஓரிடத்தில் நின்று விட்டவர். பக்தி, பஜனை என்றால் பலாப்பழம் பிளக்கிறவர் போல அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு உண்டு இல்லையென்று வேரறுக்க வந்துவிடுவார்.

அவரும் வந்திருந்தார்.

மார்கழியிலும் சரி, குரு பூஜை, ஸ்ரீராம நவமி, கிருஷ்ண ஜயந்தி என்று பண்டிகையிலும் சரி பஜனை கோஷ்டி அவர் வீட்டு

முற்றத்தைத் தாண்டி வீடு திரும்புகிற வரை தலையைச் சுவருக்கு முட்டுக் கொடுத்து சாய்மானத் திண்ணைத் திண்டில் முதுகு சாய்த்துப் போட்ட காலை அகற்றாமல் மார் மேல் கட்டிய கையை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர். அவர் கூட வந்திருந்தார்.

இன்னும் எவ்வளவோ பேருக்கு ஸ்டேஷன் வரை வரப் பிரியமுண்டு. நாதமுனி நாயுடுவுக்கும் தெரியும். போக வர பஸ் செலவு. அரைநாள் வேலை கெடல். இப்படி ஹைதராபாத்தில் இதெல்லாம் இருக்கப் போவதில்லை. டோங்கா வண்டி, கார், பஸ் என்று கண் மண் தெரியாத வேகம். இரைச்சல். யந்திர மமகாரம். நாகரிகத்தின் வேஷ மாற்றம். மனசு தெரியாது முகமூடி அணிந்த மனிதர்கள்.

யார் கண்டது?

அங்கும் மனிதர்கள் இருக்கலாம். போகப் போகத் தெரியும்.

"என்ன நாயுடு! ஊரை விட்டுட்டுப் போறமென்னு துக்கமா இருக்கும்."



அசௌகரியங்கள். புரிந்தது.

விடிவெள்ளி கிராமத்தில் வேலைக்கா பஞ்சம்? அருகில் உள்ள மலைக்காடு விறகுக்கு வா,வா என்று கூப்பிட்டுக் கொண்டேயிருந்தது.

வயலும் வரப்பும், மாடும் கன்றும், திரிக்கிற கயிறும் உரிக்கிற நாரும். யோசித்தால் சொப்பிச் சுகம் காணுகின்றது போல் தோன்றும் கிராமம் கைராட்டையில் ஓயாமல் நூல் ஓடுகிற மாதிரி சன்ன இழையாக இயங்கிக் கொண்டேதான் இருக்கிறது.

குமரவேல் ஆசாரி, "இருக்காதா பின்னே! பொறந்து வளர்ந்த ஊரு" என்று இடைவெட்டினார்.

மொட்டையப்ப கவுண்டர் தலையைத் தடவிக் கொண்டே, "அந்திமக் காலத்தை நாயுடு மாமா இங்கேயே கழிச்சுடணும்னு தான் பிரியப்பட்டாரு" என்று கருதி போட்டார்.

பூபாலன் கையில் இப்போதும் விளக்குத் தண்டு இருப்பவன் போல் பேசாமல் இருந்தான்.

நாதமுனி நாயுடுவுக்கு ஆட்காட்டிவிரலில் முதல் மடக்கு நீளத்துக்கு நரைத்த தாடி தலை வெளுத்து மாமாங்கம் ஆகிவிட்டது. இமை விளிம்பைத் தொடாத விழிப்பாவை. தணதணவென்று எப்பவும் அக்கினி இருக்கிற மாதிரி ஒரு சிம்மப் பார்வை. ஒரு சமயம் பண்டாரம் மாதிரி ஒரு சமயம் ரிஷி மாதிரி ஒரு முகத்தோற்றம்.

இவர்களுக்கு என்ன சொல்வது?

மலைப்பாதையில் கிணுகிணுக்கும் மாட்டு மணியோசை... நாடு காத்தான் மலைப்பாறையில் துயிலும் சூரியன் பார்க்காத ஜூலை. சேணியம்பாடி மேட்டிலிருந்து வண்டி இறங்கும்போது அந்தப் பள்ளத்தில் தானுகக் கொப்புளிக்கும் தெம்மாங்கு...

என்னென்ன நஷ்டங்கள்... என்னென்ன பறிமுதல்கள்...

'ம்ஹூம்... இதுதான் கால ஓட்டம்!'

நாதமுனி நாயுடு சிரித்தார். புகையிலை படாத, வெற்றிலை கறை படாத வயோதிகப் பற்கள் இன்னும் வெண்மை மாறவில்லை.

''நாம என்ன பண்றது வில்லாளன்! பிராப்தம் அவ்வளவுதான். ருணம் தீர்ந்தா பந்தம் பட்டுனு விட்டுடும்! ஒங்களுக்கு இதெல்லாம் நம்பிக்கை இல்லே.''

வில்லாளன் தொண்டையைச் செருமிக் கொண்டார். ''என் நம்பிக்கைக்கு என்ன நாயுடு அவசியம்?''

''நல்லாச் சொன்னீங்க!'' என்று மொட்டையப்பன் தலையை உருட்டினுர்.

''நாயுடு மாமா நெலத்தை வித்தது என்னமோ சரி! வீடு வித்திருக்கக் கூடாது!''

''நான்என்னுபண்ணட்டும்! பசங்க ஆட்சி. வந்தாச்சு. ப்ளாட்மட்டும்எழுபத்தையாயிரம்' னுன் பெரியவன்: சின்னவன் மொஸைக் இல்லாம எப்படி வீடு கட்டுவேன்னுன்!. ரெண்டும் ஜீரணமானுதான் அங்கே 'வீடு எழும்பும்' என்று வேதாந்தி போல வலக்கை விரித்துத் தாடியைச் சொறிந்தார்.

''சாமான்லாம் லாரியிலே போயாச்சா?'' என்று விசாரித்தார் வில்லாளன்.

''ஒரு வாரமாச்சு! புதனுட புதன் எட்டாவது நாள். கௌம்பணும் கௌம்பணும்னு பார்க்கிறேன். எட்டு நாளா ஊர் முழுக்க விருந்து. நான் யாருக்குப் போடப் போறேன்? மண்டையைப் போட்டா தந்தி வர ஒரு நாள். இங்கேயிருந்து அவ்வளவு செலவு பண்ணிக்கிட்டு யார் வரப் போறுங்க?''

நாயுடு குரலில் துக்கமில்லை. வெறும் விவகாரம் பேசுகிற தொனி. பேச்சு பாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தாலும் மனசு எங்கோ!

**ரா**ஜ வீதி திரும்பி ஒரு நிலைக் குத்து. மெல்ல பஜனை கோவிலருகில் ஒரு நிறுத்தம். கையில் ஹார்மோனியம். பின்னங்கழுத்தில் வார்ப்பட்டை உறுத்தாமல் பாந்தமாக உட்காரத் தொங்கத் தொங்க விரல்கள் அதன் மேல் இழைகின்றன.

## திருமண நாளன்று ஒரு தந்திரம்!

வி.ஜி. பன்னீர்தாஸ் அவர்களின் மனைவி பாரிஜாதம் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். சுத்த சைவம். கிறிஸ்தவரை மணந்து கொண்டு முப்பத்தாறு ஆண்டுகள் ஆகியும் இவர் முட்டை போட்டுச் செய்த கேக் கூடச் சாப்பிடுவதில்லை.

ஒவ்வொரு திருமண நாளன்றும் கேக் வெட்டி கணவர் பன்னீர்தாஸ் மனைவியின் வாயில் போடுவது போல் போட்டோவுக்காக போஸ் கொடுப்பதுடன் சரி. நிஜமாகவே ஊட்டிவிடமாட்டார்.

ஆனால் இந்த ஆண்டு திருமண நாள் விழாவில் உண்மையிலேயே மனைவியின் வாயில் கேக்கை ஊட்டி விட, அவரும் அதைச் சாப்பிட்டார்! இதைக் கண்டு உறவினர் எல்லோருக்கும் ஆச்சரியம்! பாரிஜாதம் ரகசியத்தைப் பிறகுதான் வெளியிட்டார்: பெரியதாக இட்லி செய்து வைத்து அதைச் சுற்றி வட்டமாக கேக் தயாரித்துப் பொருத்தி இரண்டையும் இணைத்து ஐஸிங் செய்துவிட்டாராம்! இட்லிப் பகுதியைப் பன்னீர்தாஸ் வெட்டி மனைவி வாயில் போட, அவர் அதை மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு எல்லோரையும் திருப்தி செய்துவிட்டார்!

— கலாமூர்த்தி



மொட்டையப்பன் தலை உருண்டு உருண்டு மிருதங்கம் ஜமாய்க்கிறது. சுருதிக் கணக்கின்படி தாளக்கட்டையைக் குமரவேல் ஆசாரி போட்டுக் கொண்டு நிற்க, பூபாலன் நிஷ்காம்யமாக விளக்குத் தண்டைத் தாங்கிக் கொண்டு விடு விடாக எண்ணெய் வஞ்சிக்கிறான். எண்ணெய்க் குளத்தில் சில்லறைக் காசுகள் தெறித்துக் கொண்டு விழுகின்றன.

''தெறிக்கிற மாதிரி போடக் கூடாது. மொள்ளமா எண்ணெய்க்குள்ள நழுவுற மாதிரிதான் காசு போடணும்!'' கோடி வீட்டு மங்கம்மாப் பாட்டி பேரனுக்குச் சொல்லித் தருகிறாள்.

''பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்''

நாதமுனி நாயுடு கண்ணை மூடிக் கொண்டு நாதப்பிரம்மத்தில் மூழ்குகிறார். அடியாழம் தெரியாமல் மிதந்து நீந்த மனசு வராமல் சரசரவென்று பாதாளம் தொடுகிற நீர்ச் சிந்தையான முழுக்கு.

வீடுகளில் கைவேலையைப் போட்டுவிட்டு வெளியேபெண்கள் நிற்கிறார்கள்.. ஆண்கள் நிற்கிறார்கள். வயலுக்கு ஓட்டிச் செல்லப்படும் மாடு நிற்கிறது. மேய்க்கப் புறப்பட்ட ஆட்டு மந்தைநிற்கிறது.சுற்றுகிறபம்பரங்கள் நிற்கின்றன. உருளுகின்ற கோலிகள் நிற்கின்றன.

பாதாளம் தொட்டுவிட்டு நாயுடு மேல் எழுகிறார். ஆகாச கங்கைதான் இலக்கு மாதிரி ஸ்தாயி கூடுகிறது. மோர்க்காரி தலை மீது மொந்தையுடன் இடுப்பில் கைவைத்து நிற்கிறாள்.

''நாயுடு போன பெறவியிலே தேனபிஷேகம் பண்ணியிருப்பார்!''

''அட, வண்டி ஓட்டிகினு இருந்த நாயுடுப்பா இவுரு. சேனியம்பாடி ரோட்லே இவர் பாடின தெம்மாங்கைக் கேக்கணுமே!''

''நாப்பது வருஷமா விடாமே பஜனை பாடிட்டு வர்றாரு. அதான் பகவான் அவரை நல்ல நெலமைலே வெச்சிருக்கான்.''

மனசு வெள்ளாள வீதியிலிருந்து செங்குந்தர் வீதிக்குத் திரும்புகிறது.

இரண்டு பக்கமும் பாவு கட்டிய இடைவெளி வழியில்கோஷ்டி நடக்கிறது.ஓடுகின்ற தறி ஒலிகள் நிற்கின்றன. சுழலுகின்ற ராட்டினக் கடகடப்பு நிசப்தமாகிறது.

''புழுவாய்ப் பிறக்கினும்
புண்ணியா நின்னடி''

ராக சஞ்சாரத்தில் நேற்று தொட்ட வான உயரத்தை இன்று மிஞ்சிய பரவசக் களிப்பில் மூடிய கண்களிலிருந்து ஆனந்தம் முத்து முத்தாய் உதிர்கிறது.

எத்தனை நடை! எத்தனை பயணம்! எத்தனை மார்கழி! எத்தனை நிம்மதி!

தொண்டை கட்டு விடவில்லை. இப்போது ரயில்வே ஸ்டேஷனில் ஹார்மோனியத்தைக் கையில் கொண்டு வந்து கொடுத்தாலும் கணீரென்று ஆலய மணி நாதம் போல் பாட்டு பிறந்து விடும்.

''இதெல்லாம் ஒரு கண்கட்டு வித்தை மாதிரி... நமக்கு நாமே என்னவோ ஆயிடறதா கண்ணை மூடிக் கற்பனை பண்ணி மனசை எங்கியோ அடமானம் வெச்சுடற கதை நாயுடு!'' — இப்படி ஒரு சமயம் இதே வில்லாளன்.

''மனசு ஒரு பாரம்தானே வில்லாளன்! அதை எங்கியோ கொண்டு போய் எறக்கிட வேண்டியிருக்கு. ஏதாவது ஒரு சுமை தாங்கியிலே.''

அப்புறம் ஒரு வாதம். முடிவேயில்லாத விவாதம். வில்லாளன் விட்டுக் கொடுத்த சரித்திரம் இல்லாத விவாதம்—கடைசியில் மௌனம் கண்டெடுக்கும் மகத்தான நிம்மதி.

எல்லாவற்றுக்கும் காலையில் கோயில் மூலையில் மூட்டை முடிச்சு போட்டாயிற்று. இனி ஹைதராபாத். அங்கேயாருக்குவேண்டியிருக்கப் போகிறது இதெல்லாம்!

வேண்டப்பட்டவனுக்குக் கூட அதிகம் வேண்டியிருக்காது. ஒரு பிடி அவல் மாதிரி. ஏதோ கொறித்தோமா, விட்டோமா என்று ஓடுகிற ரயிலைப் பிடிக்க உட்கார்ந்திருக்கிற அவசரத்தில் ஒரு காதில் கொஞ்சம் போட்டுக் கொண்டு ஒரு கண்ணை அங்கே இங்கே மேய விட்டுக் கொண்டு.

நாயுடுவுக்குத் தூக்கம் வரவில்லை. அதுவெல்லாம் வரக் கூடிய வயது போய் விட்டது. ஆனால் ஓர் உறுத்தல் இருந்தது. வளை வளையாகத் தோண்டிக் கொண்டு ஒரு பெருச்சாளி மண்ணை வெளியே வெளியே தள்ளி விடுகிற மாதிரி இன்னும் உளைச்சல் பூர்த்தியாகாத மாதிரி ஓர் உறுத்தல்.

மொட்டையப்பனும்குமரவேலும்எழுந்து ஸ்டேஷன் பிளாட்பாரக் கடையில் வாழைப் பழமும் பிஸ்கெட்டும் வாங்கி வரக் கிளம்பினார்கள்.

''அதெல்லாம் வேண்டாம்யா!''

''வழியிலே சாப்பிடுவீங்க நாயுடு! நீங்க போய் வாங்கியாங்க!'' என்று அவர்களை வில்லாளன் விரட்டினான். அவர்கள் நகர்ந்தனர்.

விளக்குத் தண்டை பூபாலன் நாயுடு அமர்ந்திருந்த சிமெண்ட் பெஞ்சிலிருந்து தள்ளி இரண்டடி மரியாதை விட்டுக் கீழே உட்கார்ந்திருந்தான்.

''என்ன முகம் வாட்டமாயிருக்கு நாயுடு?''

''ஒங்களுக்குச் சொல்லி என்ன புண்ணியம்?''

''நான் நாஸ்திகன் என்பீங்க. பரவால்லே. சொல்லுங்க.''

நாயுடு ஒன்றும் சொல்லவில்லை. யோசித்தார்.

''ஒங்களுக்கு ஏன் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரத் தோணுச்சி வில்லாளன்?''

வில்லாளன் சிரித்துவிட்டார். ''இதென்ன கேள்வி?''

''கேள்வி கேள்விதான். பதில் சொல்



• துன்பப் பறவைகள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க முடியாது. ஆனால் அவை தலையில் கூடு கட்டி விடாமல் தடுத்துக் கொள்ள முடியும்.

— ஜப்பான் பழமொழி.

— ஏ. கே. நாசர்.

ஓங்க.''

''இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாதுங்க! மொதல்லே இப்படிக் கேக்கவே கூடாதுங்க.''

''சரி கேட்கக் கூடாது கேட்டுட்டேன். ஏன் வந்தீங்க? ஒரு பாசமா?''

''இல்லே.''

''ஒரு பிரியம்... அதானே!''

''இல்லே.''

''எம்மேலே பிரியமில்லேங்கறீங்க?''

''அப்படி இல்லே கணக்கு! பிரியம் இருக்கறவங்க, என்னைவிட ஜாஸ்தியா ஒங்க மேல பிரியம் வெச்சிருக்கிறவங்க எத்தனையோ பேர் உண்டே!''

''மடக்கிட்டீங்க! சரி... பின்னே?''

''அதானே சொல்லிட்டேனே?''

''கேக்க வாணுங்கறீங்களா?''

வில்லாளன் மசிந்துவிட்டார்.

''அடாடாடா... நீங்களும் விட மாட்டீங்க நாயுடு! நம்ப ஊர்லே ஒங்களுக்கு அப்புறம் இனிமே பாட்டுப் பாட யார் ஆளு?''

நாயுடுவின் அந்தரங்கத்தின் மீது அடி விழுந்தது. பலமான அடி. உறுத்தல், உளைச்சல், மீது விழுந்த அடி.

''என்னமோ பொளுது மொளைச்சா பொளுது போனா லவுட் ஸ்பீக்கரை வெச்சு நாலா பக்கமும் ஊளையிடறானுங்க. ஒரே சினிமாப் பாட்டு. அங்கே வாரியா இங்கே வாரியான்னு சில்லறைப் பாட்டு. அசல் பாட்டு... மனுஷன் மனசை அசத்துற பாட்டு பாட இனிமே ஆளு யாரு நாயுடு? என்னமோ அதை நெனச்சுட்டிருந்தேன். மனசு தாங்கலே.''

நாயுடு கேட்டுக் கொண்டிருந்தார். அது புகழ் மாலை மாதிரி இல்லே. ஈரமான மேல் துண்டை எடுத்து உதறிக் காயப் போடுகிற மாதிரி இயல்பாக வந்தது.

நாயுடு கண்களை மூடிக் கொண்டார்.

இதுதான்... இதுதான்... வம்சக் கொடி அறுந்த மாதிரி, தூக்கிய கொடியை வாங்கப் பின்னால் ஆளற்றுப் போன மாதிரி அந்த உறுத்தலுக்கு வடிவம் இதுதான். இதுவேதான்.

''வில்லாளன்! நீங்க நாஸ்திகளுக முடியாது!'' என்றார் நாயுடு கண் திறந்து.

''ஆகாட்டா போறேன்! அது ஒங்க அபிப்பிராயம்தானே!''

நாயுடுவின் பார்வை விளக்குத் தண்டு பூபாலன் மேல் விழுந்தது.

''என்டா பூபாலா... மாமா சொல்றதைக் கேட்டியா?''

''கேட்டுட்டுத்தானுங்க இருக்கேன்.''

''தடி மாடு மாதிரி தண்டு தூக்கிட்டுத் திரிஞ்சியே... எத்தினி பாட்டு பாடியிருப்பேன்? எதா... ஒரு பாட்டுப் பாடு.''

அவன் வெட்கத்தோடு சிரித்துவிட்டு அந்தத் திட்டுக் கூட ஓர் ஆசீர்வாதம் போல் தலைகுனிந்தான்.

''பாடுடான்னா... கல்யாணப் பொண்ணாட்டம் தலைகுனியறியே! வர்ற ஆனியிலே மனை மேல ஒருத்தி வந்து உட்காருவா... அவ பக்கத்திலேயும் தலையைக் குனிஞ்சுக்காதே!''

''போங்க நாய்க்கரே!'' அவன் இன்னும் நாணினான்.

நாயுடு பாடச் சொல்றார்லே..... பாடேண்டா!''

''ஐயய்ய... இங்கியாங்க! ரயில்வே ஸ்டேஷனு.''

''இவரு பெரிய சங்கீத வித்வான்! மேடை போட்டுப் பாடச் சொல்வாங்க. பாடுடா சோம்பேறி.''

டமாரென்று பாட ஆரம்பித்து விட்டான் பூபாலன்.

''தில்லை அம்பல நடராஜா.''

பிடரியில் அறைந்தது போல் நிமிர்ந்து உட்கார்ந்தார் நாயுடு. ஒரு பாட்டு முடிந்தது.

''பச்சை மாமலை போல் மேனி பாடுடா!''

வாழைப்பழம், பிஸ்கெட் வாங்கிக் கொண்டு மொட்டையப்பனும், குமரவேல் ஆசாரியும் திரும்பிவிட்டனர்.

''கேளுங்க ஐயா... நம்ப பூபாலன் பாடறான். எங்கேடா கத்துக்கிட்டே... ஊமைக்கோட்டான் மாதிரி இருந்துட்டு!''

நாயுடுவின் அதே ராக சஞ்சாரம். அதே ஸ்தாயி. அதே ஆரோகண அவரோகணம். அதே முழுக்கு. அதே பாய்ச்சல். அதே பறப்பு.

''அடேய்... அடேய்... அடேய்...''

நாயுடு மூன்று பாட்டு முடிந்ததும் எழுந்து போய் அவனை மார்போடு கட்டிக் கொண்டார். அதுதான் அவரால் முடிந்த பாராட்டு.

''வில்லாளன்! உம்ம கொறை நீங்கிப் போச்சா?'' என்று மார்பிலிருந்து பாறுங்கல் அகன்ற மாதிரி ஒரு பூரிப்போடு கண்களில் ஆனந்தம் முத்து முத்தாய்க் கொப்புளிக்கக் கேட்டார். உறுத்தல் ஓய்ந்த உபாதை நீங்கிய ஆசுவாசம்.

கணகணவென்று ஸ்டேஷனில் ரயில் வருவதற்கான மணியோசை கேட்டது. அதுவைரத ராபாத் போகும் வண்டிதான்.

## பக்தி நூல்கள் இலவசம்

எமது ருசிகரமான இனிப்பு அல்லது காரப் பண்டங்களை மூன்று கிலோவுக்குக் குறையாமல் வாங்குவோருக்கு பக்தி நூல்கள் அல்லது தெய்வீகப் பத்திரிகைகளில் ஒன்று (ஒரு வருட சந்தா) இனாமாக வழங்கப்படும்.

| இனிப்புகள் | காரங்கள் |
| --- | --- |
| 1. அதிரசம் | 1. பாம்பே அவல் மிக்ஸர் |
| 2. பாதாம் அல்வா (குங்குமப்பூ) | 2. பாம்பே உருளைக்கிழங்கு வறுவல் |
| 3. பாம்பே காஜா | 3. கார்ன் ஃப்ளேக்ஸ் மிக்ஸர் |
| 4. தேங்காய் போளி | 4. கைமுறுக்கு |
| 5. தேங்காய் கோவா | 5. ரயில் கட்டிடம் |
| 6. வேர்க்கடலை சுதளி | 6. சீப்பு சீடை |
| 7. கோதுமை அல்வா (குங்குமப்பூ) | 7. உருளைக்கிழங்கு & வாழைக்காய்வறுவல் |
| 8. குங்குமப்பூ ஜாங்கிரி | 8. ஸ்பெஷல் மிக்ஸர் |
| 9. மங்களூர் போளி | 9. தட்டை |
| 10. ரசமலாய் | 10. தேன்குழல் |
| 11. ரசகுல்லா | 11. வெஜிடபிள் சமூசா |

**திருமணவைபவங்களுக்கு: சீர்முறுக்கு, பருப்புத்தேங்காய், அதிரசம், திரட்டிபால், காப்பரிசி, வறுபயறு தயாரித்துத்தருகிறோம்.**

### தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2 வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை — 600 020.
Phone: 412557

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, தேனாம்பேட்டை, சென்னை.

## இல்லத்தரசிகளின் இனிய தோழி!

### ஏஞ்சல் வாஷிங் மெஷின்




முழுவதும் எவர்சில்வர்
உறுதியான கட்டமைப்பு
கொண்டது
சோப்பு, தண்ணீர், உங்கள்
நேரம், சிரமம், செலவு மிச்சம்
மின்செலவோ குறைவு

**ஏஞ்சல் டொமெஸ்டிக் எக்யுப்மென்ட்ஸ்**

கோயமுத்தூர் 641025

கிடைக்கும் இடம்: * மார்ஸ் எண்டர்பிரைசஸ், 2, முஸாபர் ஜங் பஹதூர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5. * அந்தோணி ஏஜென்ஸி, 20, கரேஷ் நகர், வளசரவாக்கம், சென்னை — 87, போன்: 4 2089 8. * ஜார்ஜ் எண்டர்பிரைசஸ், சூளைமேடு, சென்னை — 94, போன்: 4 2749 8. * பிரியா ஏஜென்ஸீஸ், பிளாட் 463, மஹாகவி பாரதி நகர், சென்னை — 39. * மகேஸ்வரி டிரேடர்ஸ், சௌராஷ்டிரா நகர், சூளைமேடு, சென்னை — 94. * மதன் எலக்ட்ரோ-மெஷின்ஸ், 7, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோவை — 18, போன்: 36401 & 35608. * முத்துசெல்வி கார்ப்பரேஷன், 26, கன்னாம்புக்கார தெரு, மதுரை — 1, போன்: 22488. * ஸ்டாண்டர்ட் எலக்ட்ரானிக்ஸ், 285, நேதாஜி ரோடு, ஈரோடு — 1, போன்: 73177, 72770. * சக்தி எலக்டிரிகல் ஒர்க்ஸ் கணேச புரம், திருச்சி — 13. * ஹெப்ஸி ஏஜென்ஸீஸ், திருநெல்வேலி & தூத்துக்குடி. * ஸ்வர்ணலக்ஷ்மி ஏஜென்ஸீஸ், தஞ்சாவூர் — 1. * சிவா ஏஜென்ஸீஸ், அண்ணா சாலை, பாண்டிச்சேரி — 1. * விஷால் மார்கெட்டிங் அஸோஸியேட்ஸ், ராம்விலாஸ் ஹோட்டல் காம்ப்ளெக்ஸ், தருமபுரி — 1.

# மந்திரிகள் மாறுவேடம் அணிந்து சென்றால்...

• க. தாணுமாலயப் பெருமாள்,
இடலாக்குடி.

? எம்.ஜி. ஆர். ஆட்சி பத்தாவது ஆண்டு துவங்குவதையொட்டி மாவட்டத் தலைநகர்களில் நினைவுத் தூண்கள் அமைக்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளாரே?

! கட்சித் தூண்கள் ஆட்டம் காணும்போது கற்றூண்களாவது நிலைக்கட்டும் என்ற எண்ணமாக இருக்கும்.

• பாலா அசோக், திருச்சி.

? தமிழ்நாட்டில் பதினொரு மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளதே?

! லிஸ்ட்டில் பதினொரு மந்திரிகள், பதினொருபேர் பெடிஷன் கமிட்டி, பதினொரு மாவட்ட கிஸ்தி ஒத்தி வைப்பு.... என்னய்யா இது, எதற்கெடுத்தாலும் பதினொன்றுதானா? ஹூம்.... பக்கத்தில் இன்னொரு ஒன்று சேர்க்காமலிருந்தால் சரி.

• வி. பாலன், கொடைக்கானல்

? பர்னாலா அரசால் தீவிரவாதிகளுக்கு 'பர்பர்' காட்ட முடியவில்லையே, ஏன்?

! தீவிரவாதிகள், அந்நியரின் உதவியுடன் பர்னாலா அரசுக்கு மட்டுமின்றி மத்திய அரசுக்கும் 'பர்பர்' காட்டுவதில் வெற்றி பெற்று வருவதால்தான்!

• ஆர். கே. அருள் செல்வன்,
விக்கிரபாண்டியம்

? இப்போது மிகவும் பாப்புலரான வார்த்தை எது?

! கொடைக்கானல் பாலனைக் கேட்டால் 'பர்பர்' என்பார்!

• த. ஜெயக்குமார், கொப்பம்பட்டி

? வங்கிக் கொள்ளைகள் அதிகமாகிவிட்டதே?


• செல்வாக்கு?


• மாற்று ஆவாரா?

! ஆமாம்! கொள்ளையர்களால் கொஞ்சம் கொள்ளை. லோன் மேளா என்ற பெயரில் மேலும் கொள்ளை! நிதி மந்திரியாக அன்று விளங்கிய பிரணாப் முகர்ஜியின் ஆசியுடன் ரிலையன்ஸ் (விமல்) நிறுவனத்தின் நலனுக்காக நடத்தப்பட்ட 'லோன் மேளா' கொள்ளையோ கொள்ளை!

• எம். இராஜேந்திரன், லால்குடி

? குற்றாலம், கன்னியாகுமரி, ஊட்டி மூன்றில் எது ரொம்பப் பிடிக்கும்?

! சீசனில்தான் குற்றாலத்தை அனுபவிக்க முடியும். சீசன் இல்லாதபோது கூட்டம் குறைவான சமயத்தில்தான் ஊட்டியை வெகுவாக அனுபவிக்க முடியும். கன்னியாகுமரியை எப்போ வேணுமானாலும் ரசிக்கலாம்.

• தே. காந்தி, மதுரை

? பிரதமரை அடிக்கடி டி.வி.யில் காட்டுவதாகக் குறை கூறுகிறார்களே. பிரதமர் கலந்து கொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகளை நாம் தெரிந்து கொள்ளத்தானே அப்படி காட்டுகிறார்கள். என்ன தவறு?

! பிரதமர் பற்றி மட்டும் தெரிந்து கொண்டால்போதும்என்றுநினைத்துவிடுகிறார்களே, அங்கேதான் உதைக்கிறது!

• எஸ். கலீல் ரகுமான், பொள்ளாச்சி

? டிசம்பர் 31ல் சாராயக் கடைகள் உறுதியாக மூடப்படுமா?


• விமலுக்கு ஆசி


• பர்பரின் தோல்வி.

! அது உறுதியானால் கள்ளச் சாராய மடை திறந்து விடப்படுவதும் உறுதி.

• செ. அன்பு மதியழகன், கொப்பம்பட்டி

? சிலம்பரசனுக்கு ரசிகர் மன்றம் அமைத்ததைக் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறீர்கள். வரவேற்கிறேன். ஆனால் குட்டி மைதிலியுடன் ஒருபேட்டி என்று வெளியிட்ட

தங்களை என்ன சொல்வது?

! அளவுக்குமிஞ்சினால் அமிர்தமும் விஷம்!

* தி.சு. ஸ்ரீராம், சென்னை—4

? இமயம் பார்த்தீர்களா? படித்தீர்களா? எப்படி?

! இமயமா அது? ரமணீயம்!

* கா.சு. வேலாயுதன், கோவை

? அந்தக் கால ராஜாக்கள் போல இந்தக் கால மந்திரிகள் மாறுவேடமிட்டு இரவில் நகர் சோதனைக்கு வர ஆரம்பித்தால்?

அந்தக் கால ராஜாக்கள் மக்களைக் கண்காணித்தார்கள். இந்தக் கால அமைச்சர்கள் சக அமைச்சர்களை வேவு பார்ப்பார்கள்.

* இரா. சுவாமிநாதன், சீர்காழி

? மயிலாடுதுறை பாதிரி சாப்பிட்டதுண்டா?


* என்ன தவறு?

நீங்கள்
கேட்டவை
— தராசு

!- ஜிலேபி கெட்டது போங்கள்! சென்னையில் நிறையக் கிடைக்கும் பங்கனபள்ளியும் நாக்கைச் சப்புக் கொட்ட வைப்பதுதான். இமாம் பசந்து ரொம்பப் 'பசந்த்', அதாவது பிடிக்கும்! தாடி பசந்து தெரியுமா?


* சிறப்பானதல்ல

* இமயமா அது?



ரூ 10 பரிசு பெறுபவர்:
த. ஜெயக்குமார், சிவன்கோயில் தெரு,
கொப்பம்பட்டி அஞ்சல்,
திருச்சி மா.வ. 621 012.

ஜூஸ் பிழிந்தால் அந்தக் கால டம்ளரில் முக்கால் டம்ளர் தேறும். மல்கோவா, குண்டு, நீலன் எல்லாம் ஒவ்வொரு ருசி என்றாலும் இரண்டாம்பட்சம்தான். பாதாம் அல்வாவைக் கூடத் தோற்கடிப்பது ஒன்று உண்டென்றால், அது அல்பூஸ்தான். ஆசைக்கு ஒரு பழம் வாங்கி, ஆளுக்கொரு துண்டம் சாப்பிடலாம். அதற்கு மேல் கட்டி வராது!

* எஸ். வெங்கட்ராமன், வேலூர்

? 'கல்கியை வாங்கிப் படிக்க வேண்டாம்' என்று கருணாநிதி சொல்லும் அளவுக்கு நீங்கள் அவரை விமர்சனம் செய்திருக்கிறீர்கள். அப்படிப்பட்டவர் எம்.ஜி. ஆருக்கு ஒரு மாற்று ஆக இருக்க முடியுமா?

! விமர்சனங்கள் என்பது அந்தந்தக் காலகட்டத்தில் அவரவர் நடந்து கொள்வதைப் பற்றியது. யாரையும் ஜன்ம விரோதியாகக் கருத முடியாது. யாருக்கும் ஆயுசு பரியந்தம் ஜால்ரா போடவும் முடியாது. நாளை கருணாநிதி தவறு செய்தால் சுட்டிக் காட்டவே செய்வோம்.

* ஆர். மைதீன் பாட்சா, வல்லம்

? ஆர்.எம்.வீ., ஜெயலலிதா யாருக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகம்?

! சேலைக்கு.




* பத்தாவது ஆண்டு

* சு. தாணுமாலயப் பெருமாள், குளத்தூர்

? - ஒரு மாநிலத்தைச் சட்டங்கள் ஆள்வதை விட நல்ல மனிதர்தான் ஆள வேண்டும்; அதுவே சிறப்பானது என்ற நெடுஞ்செழியன் பேச்சைப் பற்றி?

! நல்ல மனிதர் சட்டப்படிதான் ஆள்வார்; சட்டப்படி ஆள்பவர் நல்ல மனிதராகத்தான் இருப்பார். எனவே நெடுஞ்செழியன் அப்படி பேசியிருந்தால் அது சிறப்பானதல்ல.

* சித்ரா பிரியன், திருமுதுகுன்றம்

? வரதட்சணைத் தடைச் சட்டம் வந்துவிட்டதால் இனி வரதட்சணைக் கொடுமைக்கு வாய்ப்பு இல்லையே?

! அட நீங்க ஒண்ணு.... திருடக் கூடாது, லஞ்சம் வாங்கக் கூடாது, கறுப்புப் பணம் வைச்சுக்கக் கூடாது..... இன்னும் எத்தனையோ சட்டம் இருக்கு.... எல்லாமே ஒழிஞ்சுடுச்சா என்ன?



# மண்டேலா: தென்னாப்பிரிக்க அடிமைகளின் நம்பிக்கை நட்சத்திரம்!

கடந்த 23 வருடங்களாக இவர் சிறை வாசம் அனுபவித்து வருகிறார். பொது மக்களுக்கும் இவருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இருந்தும் இவருடைய உள்ளொளியும் உறுதியும், தென் ஆப்பிரிக்க மக்களுக்காக இவர் நடத்திய தன்னலமற்ற விடுதலைப் போராட்டமும் உலகின் பல பகுதிகளிலும் இவருக்கு அன்பையும் மதிப்பையும் பெற்றுத் தந்துள்ளது.

1918 இல் ஓர் ஆப்பிரிக்க அரச குடும்பத்தில் பிறந்தார் மண்டேலா. கிறிஸ்துவப் பள்ளி ஒன்றில் படித்தார். மாணவப் பருவத்திலேயே வெள்ளையர்களின் நிற வெறிக் கொள்கையைக் கண்டு அவர் மனம் அதிர்ந்தது. இந்த 'நோய்' தென் ஆப்பிரிக்கா முழுவதும் வியாபித்திருந்ததை உணர்ந்தார்.


ஆட்சியிலிருந்த வெள்ளையரால் கறுப்புத் தோல் படைத்தவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டதுமட்டுமல்ல; கறுப்பர்களுக்குவோட்டுரிமை உள்பட பல உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தன. 1936 ஆம் ஆண்டு வாக்குரிமை பெற்றிருந்த ஒரே ஒரு நகர கறுப்பர்களான கேப் டவுன் நகரத்துக் கறுப்பர்களுக்கும் அந்த உரிமை பறிக்கப்பட்டது. இனியும் பொறுக்க முடியாது என்று தீர்மானித்துப் போராட்டத்தில் இறங்கினார் மண்டேலா. முதல் காரியமாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரு தகுதியைத் துறந்தார். சாமானிய மக்களில் ஒருவரானார்.

வெள்ளையர் ஆதிக்கத்தையும் ஆப்பிரிக்கர்களுக்கு எதிராக நிறவெறி அடிப்படையில் இழைக்கப்படும் அநீதிகளையும் குறிக்கும் 'அபார்தைட்' என்ற சொல் 1948 இல் வழக்கிற்கு வந்தது. அப்போதுதான் இப்பிரச்னைக்கு உலகளாவிய முக்கியத்துவம் ஏற்பட்டது. மேற்கத்திய நாடுகள் ஒருபுறம் நிறவெறிக் கொள்கையை எதிர்த்த போதிலும் மறுபுறம் தென் ஆப்பிரிக்காவில் முதலீடு செய்து கொழுத்துக் கொண்டுதான் இருந்தன. பண அபிமானம், மனிதாபிமானத்தை வென்றது. இன்றும் இதே நிலைதான்.

மகாத்மா காந்தியைப் போல் மண்டேலாவும் சலிக்காமல் வன்முறையை வெறுத்து சாத்துவிக முறையில்தான் போராடினார். ஆனால் நிற வெறிக் கொள்கையால் உந்தப்பட்ட தென் ஆப்பிரிக்க அரசு கண்மூடித் தனமாகத் தன் படை பலத்தைப் பிரயோகித்து உரிமைப் போராட்டங்களை நசுக்க ஆரம்பித்த போது மண்டேலா தமது அஹிம்சைக் கொள்கையைத் தளர்த்திக் கொள்ளத்தான் செய்தார். உயிர்ச் சேதம் விளைவிக்காமல் ராணுவக் கிடங்குகளைத் தகர்ப்பது, அரசு உடைமைகளில் குண்டு

வைப்பது போன்ற நாசகரமான செயல்களில் ஈடுபடத் தமது சகாக்களுக்கு அனுமதி அளித்தார்.

1962 இல் மண்டேலா கைதானார். நீதிமன்ற விசாரணையின் போது வெள்ளையர் ஆதிக்கத்தை வெளிப்படையாகத் தாக்கினார். "எங்கள் நாட்டில் வெள்ளையர் ஆதிக்கம் செலுத்தும் நாடாளுமன்றம் இருப்பதால் எனக்கு வாக்குரிமை கிடையாது; சிறுபான்மையினரான வெள்ளையர்கள் என் நாட்டைக் கைப்பற்றி விட்டதால் எனக்கென்று கையகல நிலம் கூட வைத்துக் கொள்ள முடியாது! நிற வெறியையும், அதன் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளையும் நான் அறவே வெறுக்கிறேன்... என் வாழ்நாள் முடியும் வரை நிறவெறியை எதிர்த்துப் போராடத்தான் போகிறேன்! இந்தச் சூழலில் எனக்கு இங்கே மெய்யான நீதி கிடைக்கும் என்று உங்களில் யாராவது நெஞ்சைத் தொட்டுச் சொல்ல முடியுமா?" என்று நீதிபதிகளைப் பார்த்துக் கேட்டார் மண்டேலா.



• வினி, குழந்தைகள்

மண்டேலாவுக்கு விதிக்கப்பட்ட ஐந்து வருட கடுங்காவல் தண்டனை முடிவின்றி நீடிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. ஒரு சராசரிப் பெண்ணின் கனவுகளோடு அவரைக் காதல் திருமணம் புரிந்து கொண்ட வினி, தாம் ஓர் இயக்கத்தையே மணந்து கொண்டிருப்பதை உணரத் தவறவில்லை. மண வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் மண்டேலா மாறுவேடம் பூண்டு வினியைக் காணச் சென்றதுண்டு. குழந்தைகள் அப்பாவைக் காணாமலே வளர்ந்தனர். சீக்கிரமே அம்மாவைப் பிரிந்து வாழவும் கற்றுக் கொண்டனர். ஏனெனில் தென் ஆப்பிரிக்க அரசு வினியையும் நிம்மதியாக விட்டு வைக்கவில்லை. அவர் உளவாளி என்று ஒரு வதந்தியைப் பரப்பி அவருக்கு அவர் இனத்தவரிடையே அவப்பெயர் தேடித் தர முயன்றது உட்பட, பலவிதங்களிலும் அவரைத் துன்புறுத்தி வருகிறது.

'அரசியல் நோக்கில் எந்தவித திட்டமிடுதலிலோ; தூண்டி விடுதலிலோ வன்முறையிலோ ஈடுபட மாட்டேன்' என்று வாக்குக் கொடுத்தால் மண்டேலாவை விடுதலை செய்வதாகத் தென் ஆப்பிரிக்க அதிபர் போதா சென்ற ஆண்டு கூறியபோது, "தென்னாப்பிரிக்க மக்கள் சுதந்திரமாக இல்லாத வரை நான் இத்தகைய உறுதி மொழிகளை அளிக்க முடியாது" என்று உறுதியாகச் சொல்லி விட்டார் மண்டேலா. அவர் விடுதலை பெற்று வரத் தென் ஆப்பிரிக்க மக்கள் பொறுமையோடு காத்திருக்கின்றனர்.

நன்றி: இல்லஸ்ட்ரேடட் வீக்லி.
மேரி பென்ஸன் எழுதிய 'நெல்சன் மண்டேலா' என்ற புத்தகத்தின் விமர்சனம்.

தமிழாக்கம்: சீதா ரவி

* பிராமணப் பெண்மணிகளும் கேரள அரசுத் தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் செல்கின்றனர்.

* ஆண்களின் ஊர்வலம்.





தமிழ்நாட்டிலிருந்து கேரளத்துக்குச் சென்றுகுடியேறியபிராமணர்கள், இன்றைக்கும் 'பரதேசி பிராமணர்கள்' என்று குறிப்பிடப்படுகிறார்கள். பிறதேசத்திலிருந்து வந்தவர்கள் என்ற பொருளில் 'பரதேசி' என்று அழைக்கப்பட்டாலும் ஏழைகள் என்ற அர்த்தமும் இவர்களுக்குப் பொருத்தமாய்த்தான் இருந்தது. ஆனால் வெகு சீக்கிரமே இவர்கள் உன்னத நிலைக்கு உயர்ந்தார்கள். எப்படி? அது ஒரு கதை! ஒரு சிற்றரசனுக்கும் அழகிய ஆதிவாசிப் பெண்



* காரியதரிசி வி. எஸ். மணி அய்யர்.

* ஆதிவாசி அழகியைக் காதலித்த மன்னன்......

* இ. காங்கிரஸுக்குக் கைச்சின்னம் அளித்த கோயில்......

* பாரதத்துக்கு அறிஞர்களை 'அள்ளித் தந்த பகுதி......

* இன்று......

# மரண அடி வாங்கியுள்ள பாலக்காடு!

ணுக்கும் இடையே மலர்ந்த காதல் கதை!

1310 இல் மாற வர்ம பாண்டியன் இறந்ததும் அடுத்து பட்டத்துக்கு வருவது யார் என்பது பிரச்னையாகிக் குழப்பம் ஏற்பட்டது. இந்த நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு முஸ்லிம் மன்னர்கள் ஒவ்வொரு பகுதியாகத் தங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தனர். இதனால் தங்களுக்கு இனி பாதுகாப்பு இல்லை என்று உணர்ந்த பிராமணர்கள் கேரளத்துக்குக் குடிபெயர ஆரம்பித்தனர். சிலர் தெற்கே நாகர்கோயில் வழியே திருவனந்தபுரம் சென்றனர்; வேறு சிலர் திண்டுக்கல், பொள்ளாச்சி வழியாகப் பாலக்காடு சென்றனர். வடக்கே விஜயநகர சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்து பாமினி சுல்தான்கள் பலம் பெற, வட ஆர்க்காடு, காஞ்சிபுரம் போன்ற வட்டாரங்களிலிருந்தும் தெற்கே பிராமணர்கள் வர ஆரம்பித்தனர்.

இந்தச் சமயத்தில் பாலக்காடு ராஜா கொச்சி மன்னரின் கீழ் சிற்றரசனாக இருந்தான். இந்தப் பாலக்காடு ராஜா ஓர் அழகிய ஆதிவாசிப் பெண்ணின் மீது மையல் கொண்டான். இந்தக் காதலை நம்பூதிரி பிராமணர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் கோபமடைந்த அரசன், அவர்களைப் பாலக்காடு ராஜ்யத்திலிருந்தே நாடுகடத்தி விட்டான்!

ஆதிவாசிப் பெண் அரசியானாள். அவளுக்குக் கடவுள் பக்தி ரொம்ப அதிகம். ஆதிவாசிகள் வணங்கி வந்த பல தெய்வங்களுக்கு அவள் கோயில் கட்டினாள். இவற்



• வேத விற்பன்னரைக் கௌரவிக்கிறது சங்கம்.

றுள் ஒன்று அண்மைக் காலத்தில் நாடளாவிய அளவில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது! இ. காங்கிரஸ் கட்சிக்குக் கைச் சின்னத்தை அளித்ததே இந்தக் கோயில்தான்! ஏமூர் பகவதி அம்மன் உள்ளங்கை விரித்தபடிதான் காட்சி அளிக்கிறாள்! இந்தக் கோயிலுக்கு விஜயம் செய்த பிறகுதான் இந்திரா காந்தி இந்தச் சின்னத்தைத் தமது கட்சிக்குத் தேர்ந்தெடுத்தார்!

மீண்டும் சரித்திர காலத்துக்குப் போவோம். ஆதிவாசிப் பெண்ணை மணந்த பாலக்காடு அரசன் நம்பூதிரி பிராமணர்களை அனுப்பி விட்டானேயொழிய ரொம்பவும் கடவுள் பக்தி உள்ளவனாகவும் ஆசார சீலனாகவும் விளங்கினான். வைதீகக் காரியங்களைச் செய்ய அவனுக்குப் பிராமணர்கள் தேவைப்பட்டார்கள். தமிழகத்திலிருந்து முஸ்லிம் ஆட்சிக்குப் பயந்து குடி பெயர்ந்து வந்த பிராமணர்கள் பலரை வரவேற்று அவன் பாலக்காட்டில் வசிக்க வசதிகளைச் செய்து தந்தான். கோழிக்கோடில் அவ்வப்போது கூட்டப்படுகிற வேத — சம்ஸ்கிருத மாநாடுகளுக்குப் பல பிராமண அறிஞர்கள் தமிழ்

• நிலச் சீர்திருத்தத்தால் ஓட்டாண்டிகளாகிப் போன ஏராளமான பிராமணர்களில் சிலர். கடைசியாகக் காணப்படும் விதவை தனக்கிருந்த இரண்டே ஏக்கர் நிலத்தை இழந்து தவிக்கிறார்.



நாட்டிலிருந்து வருவது வழக்கம். அவர்களில் பலரையும் பாலக்காடு ராஜா அழைத்துத் தன் நாட்டில் குடியேற்றினான். இதன் விளைவாகத் தொண்ணூற்று ஆறு அக்கிரஹாரங்கள் தோன்றின. ஆனால் இன்று பாலக்காடு நகர எல்லைக்குள்ளே பதினெட்டு அக்கிரஹாரங்களும் புற நகரில் முப்பது அக்கிரஹாரங்களும்தாம் உள்ளன. மற்றவை அக்கிரஹாரத் தன்மையை இழந்துவிட்டன. அல்லது அடியோடு அழிந்து விட்டன. இந்த அக்கிரஹாரங்களில் வசித்தவர்கள்தாம் "பாலக்காடு அய்யர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். வேத பாராயணம் செய்வ

• தலைமைச் செயலகம் முன்பு "தர்ண



திலும் சம்ஸ்கிருத மொழி ஆய்விலும் இவர்கள் அளப்பரிய பணி ஆற்றினார்கள். இன்றைக்கும் ருத்ரம், அதிருத்ரம், மஹாருத்ரம் ஜபிப்பதிலும் ஸாஸ்தா பிரீதி செய்வதிலும் பாலக்காடு பிராமணர்களுக்கு இணையாக யாரையும் கூற முடியாது.

1840லிருந்து 1940 வரை பாலக்காடு பிராமணர்களுக்கு ஒரு பொற்காலம். இவர்கள் மொத்தத்தில் 20,000 பேர் கூட இருக்க மாட்டார்கள். ஆனால் இவர்களிடையிலிருந்து விஞ்ஞானிகள், இலக்கிய கர்த்தாக்கள், நிர்வாக நிபுணர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள் என்று பலர் தோன்றிப் பாரத நாட்டுக்கே அரிய பெரிய சேவைகள் புரிந்து பெரும்புகழ் பெற்றார்கள். திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாக இரண்டு மாபெரும் பிராமண சேனாதிபதிகள் தோன்றினார்கள். திருவிதாங்கூர் மகாராஜாவுக்கு உதவச் சென்றார் சுப்பய்யர். மைசூர் எல்லையில் சத்தியமங்கலம் கோட்டையைக் காத்தார் வேங்கடராம அய்யர். திவான் சேஷாத்திரி அய்யர், புரோகிதரின் மகனாகப் பிறந்து மைசூர் திவானாக உயர்ந்தார். அனந்த கிருஷ்ண அய்யர் மலைவாழ் ஆதிவாசிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்குப் பாரத நாட்டுக்கே முன்னோடியாகத் திகழ்ந்தார். நீதிபதிகள் அனந்த கிருஷ்ண அய்யர், ஏ. எஸ். பி. அய்யர், வி. ஆர். கிருஷ்ண அய்யர் முதலிய பெயர்கள் நமக்கு நன்கு அறிமுகமானவை. விஞ்ஞானிகள் என்று எடுத்துக் கொண்டால் விக்ரம் சாராபாயை உருவாக்கிய டாக்டர் கே. ஆர். ராமநாதன் பாலக்காடு அய்யரே. இவர் ஸர் ஸி. வி. ராமனுடன் இணை சேர்ந்து விஞ்ஞானப் பரிசோதனைகளைச் செய்தவர். இன்னும் எத்தனையோ பேர்களைப் பட்டியலிட்டுச் சொல்லலாம் என்றாலும் நமக்கு இசைத்துறையில் நன்கு அறிமுகமான கே. வி. நாராயணசாமி, பாலக்காடு ரகு, செம்பை, பாலக்காடு மணி அய்யர், எம். டி. ராமநாதன், கல்யாண கிருஷ்ண பாகவதர் ஆகிய பெயர்களைக் கூறுவதோடு நிறுத்திக்கொள்ளலாம். சுதந்திரத்துக்குப் பின் பாலக்காடு ஒரு பத்மவிபூஷண், 5 பத்மபூஷண்கள்; 31 பத்மஸ்ரீக்கள் பெற்றுள்ளது என்று சொன்னாலே போதும். இந்தியாவில் வேறு எந்த வட்டாரமும் இந்தச் சாதனையை வெல்ல முடியாது.

இத்தகைய பாலக்காடுக்கு கேரள நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒரு மரண அடியாக வந்து சேர்ந்தது. எப்படி என்று பார்ப்போம். பாலக்காடு பிராமணர்கள் சிறு சிறு நிலப்பரப்புக்களுக்கு உடைமையாளர்களாக இருந்தார்கள். 1970 இல் கம்யூனிஸ்ட் அரசு பிறப்பித்த சட்டம், நிலச்சீர்திருத்தம், அதிக உற்பத்தி, உழுபவனுக்கு நிலம் என்ற உயர்ந்த கொள்கையை உடையதாக இருந்தது. ஆனால் சட்டத்தைச் சரியாக அமுல்படுத்தாத காரணத்தால் புதிய நிலச் சொந்தக்காரர்கள் திடீரென்று தோன்றினார்கள். பழைய நிலச் சொந்தக்காரர்கள் — பரதேசி பிராமணர்கள் — நிஜமாகவே பரதேசிகளாகிப் போனார்கள். உழுதவனுக்கு நிலம் போய்ச் சேர்ந்ததா என்றால், அதுவும் இல்லை. அவர்களும் பரம ஏழைகளாகிப் போனார்கள். இடையில் இருந்த குத்தகைதாரர்கள் நிலப்பிரபுக்கள் ஆனார்கள்!

கிராமங்கள், அக்கிரஹாரங்கள் வெறிச்சோடிப் போயின. வேத விற்பன்னர்கள் உள்படப் பலர் பிழைப்புத் தேடி இந்தியாவின் வெவ்வேறு பாகங்களுக்குப் போய்க் குடியேறினார்கள்.

இந்த நிலையில்தான், இளைஞர்கள் ஊரை விட்டுப் போய் விடுவதைத் தடுக்கவும், கோயில்களைப் பாதுகாக்கவும், சம்ஸ்கிருதத்தையும் வேதத்தையும் படிக்க ஊக்குவிக்கவும் பாலக்காடு பிராமண சங்கம் தோன்றியது. 1978 இல் தோன்றிய இந்தச் சங்கத்தின் ஸ்தாபகக் காரியதரிசியாக நான் பணியாற்றினேன். இந்தச் சங்கத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய அதன் கிளையாக ஒரு கல்விச் சங்கமும் உருவாயிற்று. இன்று பாலக்காடு மாவட்டத்தில் 13 வேத பாடசாலைகளை நடத்துகிறோம். உயர்நிலைப் பள்ளி ஒன்றும் நடத்துகிறோம். சம்ஸ்கிருதப் பள்ளி ஒன்றும், சுயவேலை வாய்ப்புப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் சிறப்பாக இயங்குகின்றன.

இதன் பின்னர், மாவட்டம் மட்டுமின்றி மாநிலம் முழுவதும் உள்ள பிராமணர் சங்கங்களை ஒன்றுபடுத்தி ஒரே இயக்கமாக உருவாக்கினோம். கேரள பிராமணர் சங்கம் அரசியல் சார்பற்றது. சமூக நலனுக்கு மட்டுமே உழைப்பது. இட ஒதுக்கீடு கொள்கை, நிலச்சீர்திருத்தக் கொள்கை முதலியவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுப் பரம ஏழைகளாகிப் போன பிராமணர்களுக்கு உதவுவதும் அவர்களுக்காகப் போராடுவதுமே இந்தச் சங்கத்தின் நோக்கம். பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யுமாறு கோரி வருகிறோம்.

எங்களின் முயற்சிகளின் பலனாக இப்போது கேரள அரசு இந்தச் சமூகத்தினர் சந்திக்கிற கஷ்டங்களை ஆய்ந்தறிய ஒரு கமிஷன் நியமிப்பதாக வாக்களித்துள்ளது. நாங்களும் நம்பிக்கையோடு நாட்களை எண்ணி வருகிறோம்!

— வி. எஸ். மணி அய்யர்.


'மார்த்' படத்தில் அமிதாப் பச்சன் புரியும் சாகசங்களைப் பார்த்த, 'நாசிக்' அருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 8 பள்ளி மாணவர்கள், அமிதாப் போலவே தாங்களும் சாகசம் செய்ய நினைத்து, 'மார்த்' என்ற பெயரைத் தங்கள் மார்பில் பொறித்துக் கொண்டனர் பிளேடால்! பிறகு, வலி தாங்க முடியாமல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்!

— சம்பத்குமாரி.

ஆதாரம்: இல்லஸ்டிரேட்டட் வீக்லி.

# தென்றல் வரும் தெரு

-மு.மேத்தா



திருவிழாக் கூட்டத்தில்
காணாமல் போனது
எங்கள் தேசம்!


தெரு என்னவோ
தென்றல் வரும்
தெருதான்...
ஆனால்
புழுங்கிக் கொண்டிருப்பது
புயல்கள் அல்லவோ...



சங்கீதம்
எதற்கு?
ஊர்தான்
சந்தையாகிவிட்டதே!

வீதியில் கடைகள் எதற்கு?
வெற்றிகரமான வியாபாரம்
இப்போது
மேடைகளில் தான்!

நிலவைப் பார்க்க
யாருக்கு
நேரமிருக்கிறது?
தெருவெல்லாம்
இங்கே
தேய்பிறைகள்!



தண்ணீரில்
நனைந்த நிலா...
கரையருகே
அலைத் தும்மல்!

எதற்காக
அலங்கரிக்கிறீர்கள்...
இருட்டில்
இருந்து கொண்டு...?

கட்டிக் கொண்டிருந்த
துணியையும் அவிழ்த்துக்
கட்சிக்கொடி ஏற்றினான்!
எல்லாரும்
கைதட்டினார்கள்..
நிஜம்
நிரூபிக்கப்பட்டதென்று!



வார்த்தைகளால்
மோதிக் கொண்டார்கள்...
தடித்த கைகளுக்குத்தான்
தைரியம் இல்லையே!

# கல்கியா இப்படி எழுதுவது?

“**மா**திரிப் பள்ளிகளா? தந்திரப் பள்ளிகளா?” என்ற தலையங்கத்தைப் (15.6.86 இதழ்) படித்துவிட்டுப் பல வாசகர்கள் பாராட்டியிருக்கிறார்கள். சிலர் குறை கூறி விமர்சித்தும் இருக்கிறார்கள். பின்னவர் எண்ணிக்கையில் சொற்பம் பேர்களே என்றாலும் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ எழுப்பியுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்:

கேள்வி: புதிய கல்வி முறை பற்றி நாடு தழுவிய அளவில் விவாதிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதே அப்போது சும்மா இருந்துவிட்டு இப்போது மாதிரிப் பள்ளிகளை எதிர்ப்பானேன்?

பதில்: கல்கி, புதிய கல்வித் திட்டம் பற்றி இரண்டு துணைவேந்தர்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெற்றுப் பிரசுரித்துள்ளது. ஒருவர் முழு மனத்துடன் வரவேற்றிருந்தார். இன்னொருவர் நியாயமான சந்தேகங்களைக் கிளப்பியிருந்தார். கல்கி, மாதிரிப் பள்ளிகளை எதிர்க்கவில்லை. அதன் இரு அம்சங்களை மட்டுமே எதிர்க்கிறது. ஒன்று: மாதிரிப் பள்ளிகளிலும்கூட பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு முறை தேவையா? திறமைக்கு மட்டுமே இடம் என்ற அம்சம் இங்கேயாவது செயல்படக் கூடாதா? திறமைசாலிகளான ஏழைகளுக்கு ஜாதி வித்தியாசம் பாராமல் உதவித் தொகை அளித்துச் சேர்த்துக் கொள்ளக் கூடாதா? என்றுதான் கல்கி கேட்கிறது. 70 கோடி மக்களையும் 21ம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்ல முடியாது; 70 லட்சம் பேர்களையாவது அதற்குத் தயார்ப்படுத்துவது நோக்கமென்றால் திறமைக்கு மட்டுமே மதிப்பளித்தால்தான் அது சாத்தியமாகும். இரண்டாவது: இந்த மாதிரிப் பள்ளிகளில் இருமொழித் திட்டம்—அதாவது ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்கும் மட்டுமே போதனா மொழி முக்கியத்துவம் தந்து தாய்மொழி புறக்கணிக்கப்படுவதை கல்கி வன்மையாக எதிர்க்கிறது. அண்மையில் மாதிரிப் பள்ளிகளைத் தமிழகம் ஏற்க வேண்டும் என்று கூறிய எம்.ஜி.ஆர்., கூட அதற்குச் சில நிபந்தனைகளை விதித்துத்தான் பேசியிருக்கிறார்.

கேள்வி: கல்கியா இப்படி எழுதுவது? கல்கியின் மகனுக்கு என்ன ஆயிற்று?

பதில்: “ஹிந்தி ஏகாதிபத்யம்” என்று தலைப்புத் தந்து 1950களின் தொடக்கத்திலேயே மற்ற இந்திய மொழிகள் மீது ஹிந்தி மேலாதிக்கம் செலுத்தப் பார்ப்பதை வன்மையாகக் கண்டித்து எழுதியவர் “கல்கி.” ராஜாஜியோ, ஹிந்தி மத்தியில் ஆட்சிமொழியாக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார். இந்திய மொழிகள் அனைத்தும் சமமாகக் கருதப்பட வேண்டும்; மாநிலங்களில் மாநில மொழி ஆட்சி செலுத்த வேண்டும்; மத்திய—மாநில உறவுக்கும் அகில உலக உறவுக்கும் ஆங்கிலம் உதவ வேண்டும் என்ற அனைவருக்கும் பொதுவான சமநீதியைக் கூறினார். “கல்கி”யும் ராஜாஜியும் காட்டிய பாதையில் தான் இன்றைய கல்கி நடக்கிறது.

கேள்வி: ஆங்கிலத்தால் தமிழ் மொழி

சிரழிந்துவிட்டதா? ஹிந்தியைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? தமிழ் ஒன்றும் அழிந்து போய் விடாது!

பதில்: இது தமிழ் அழியும் என்ற பயமல்ல; ஓர் அநீதியை எதிர்த்துப் போராட்டம். நமது நாட்டிலேயே நமது தாய்மொழியை இரண்டாம்பட்சமாக்கவும் நம்மை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கவும் நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

கேள்வி: மூன்று மொழி கற்பது நல்லது தானே?

பதில்: தாராளமாக எட்டு மொழிகள் வேணுமானாலும் கற்கலாம். அதிக மொழிகள் கற்க வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று சொல்லுங்கள், ஆமோதிக்கிறோம். ஆனால் ஆட்சி மொழி, போதன மொழி போன்றவற்றில் நமக்கு உறுதியான அபிப்ராயம் உண்டு.

கேள்வி: ஹிந்தியில் படிக்க விரும்புகிறவர்கள்தானே மாதிரிப் பள்ளிக்ளில் சேரப் போகிறார்கள். இது எப்படி திணிப்பாகும்?

பதில்: அப்படியானால் ஹிந்தியில் படிக்க விரும்பாதவர்களுக்கு மாதிரிப் பள்ளியில் இடமில்லை என்றாகிறது. அதாவது ஹிந்தியில் படிக்க முன் வருகிறவர்களுக்கு மாதிரிப் பள்ளி என்னும் சிறப்புச் சலுகை வழங்கப்படும் என்றாகிறது. ஹிந்தி படித்தால் பிரமோஷன், சம்பள உயர்வு என்பது போல் இதுவும் ஒரு தந்திரமே!

கேள்வி: இப்படியெல்லாம் கல்கி எழுதுவது ஆச்சர்யமாகவும் கவலையாகவும் உள்ளது.....

பதில்: பாரதத்தின் ஒருமைப்பாடு குறித்து கல்கி கவலைப்படுவதால்தான் இப்படி எழுதுகிறோம். நமது நாட்டில் பெரும்பான்மையினர் ஹிந்தி பேசுகிறார்களா என்பதே சந்தேகம். அதை ஒப்புக் கொள்வதென்றாலும் ஹிந்தி திணிப்பு என்பது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு சிறுபான்மையினரை ஒடுக்குவதே ஆகும். மொழி விஷயத்தில் உணர்ச்சிகளைத் தூண்டி விடுவது ஆபத்தானது என்பதைத்தான் இலங்கை, அஸ்ஸாம், பஞ்சாப், கர்நாடகா போன்ற பல இடங்களில் நடக்கும் கிளர்ச்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

# மோகினி ஆட்டம்

**மோ**கினி ஆட்டத்துக்கு வயசு சுமார் 250. மகாராஜா கார்த்திகைத் திருநாள், குஞ்சன் நம்பியார் இவர்கள் காலத்தில் தோன்றியது. 'பாலராம பாரதம்' என்ற மோகினி ஆட்டம் பற்றிய நூலை எழுதியவர்தான் மகாராஜா. ஆனால் சுவாதித் திருநாள் காலம்தான் மோகினி ஆட்டத்துக்குப் பொற்காலம். பதினெட்டு, பத்தொன்பது நூற்றாண்டுகளில் செழித்திருந்த மோகினி ஆட்டம், இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் மோகினி மாதிரியே மறைந்துவிட்டது! பிறகு 1930 வாக்கில், மகாகவி வள்ளத்தோள், தமது கேரள கலா மண்டலம்மூலமாகத்தோள் கொடுத்துத் தூக்கிவிட்டார் இந்தக் கலையை.

இதற்கான சாகித்தியங்கள் குறைவு. ஏனென்றால் காலத்தால் அவை அழிந்துவிட்டன. அதனால் பரதநாட்டியம், ஒடிசி மாதிரி தனித்து நிற்கமுடியவில்லை. பிறகுதான் கதகளி சாயலுடன், மலையாள சாகித்தியங்களுடன் பரத நாட்டியம் பாணியில் இது ஆடப்பட்டது. இசையும் பரதநாட்டியம் மாதிரிதான். (தெலுங்குக் கீர்த்தனங்கள் கூட இருக்கிறது மோகினி ஆட்டத்துக்கு!) ஆனால் கதகளி முத்திரைகள், சொல்கட்டு எல்லாம் குச்சிப்புடி மாதிரியே இருக்கும்!

தகவல்:

**நடனக்கலைஞர் தனஞ்செயன்**

கேட்டு எழுதியவர்: **சித்தார்த்**

மூன்றாவது அட்டையில் வண்ணப்பட

**யோகா**



# “டிரில் வாங்கிய திரில் அளித்த

“அதென்னவோ வடநாட்டவருக்குத் தெற்கு என்றாலே இளப்பம்தான்” என்றார் வருத்தத்துடன் சுஹாசினி. இடம்: எல்டாம்ஸ் ரோடில் சுஹாசினியின் வீட்டில் அவரது அறை. சுவரை ஒட்டின அலமாரிகளில் நூற்றுக் கணக்கில் புத்தகங்கள். தரையிலே விசால மெத்தை. அழகாய்ச் சிரித்தார் சுவரிலிருந்த பாம்பே டையிங் காலண்டரில் சுஹாசினி. சிக்கனமாய் இரண்டு சோபாக்கள். எதிரே உட்கார்ந்து கொண்டு கேஷுவலான உரையாடல். சுஹாசினியின் பேச்சிலே ‘நான் ஒரு தமிழிச்சி; இந்திக்காரர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை’ என்கிற தன்னம்பிக்கை அழுத்தமாகவே இருந்தது.



டெல்லியில் இந்த மாதம் -12ம் தேதி நடந்த தேசிய விருது வழங்கும் விழாவுக்கான ஏற்பாடுகள் பற்றி ரொம்ப வருத்தப்பட்டார்: “ஆந்திராவில் எனக்கு மாநில விருது கொடுத்தார்கள். அதன் போதாகட்டும், பிலிமோத்ஸவின் போதாகட்டும்–எத்தனை கச்சிதமான ஏற்பாடுகள் தெரியுமா? விமான நிலையத்துக்கு செய்தித்துறை மந்திரியே வரவேற்க வந்திருந்தார். ஒவ்வொருவருக்கும் தனித் தனி கார். சின்னச் சின்ன விஷயங்களைக்கூட கவனித்துக் கவனித்துச் செய்தது, பாராட்டப்பட வேண்டிய விஷயம். விழாவுக்குத் தயாராகிக் கொண்டிருந்த போது தலைக்குப் பூ வேண்டுமா? அனுப்பலாமா?’ என்று கூடக் கேட்டு போன் வந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!



“ஆனால் டெல்லியிலோ, இதற்கு நேர் மாறாக, விமான நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் வரவில்லை. வந்தவருக்கோ இங்கிலீஷ் சரியாய்த் தெரியவில்லை. ஒரே குழப்பம். அசோகா ஓட்டலில் இரண்டு ரூம் தந்தார்கள். ஒன்று எனக்கு. இன்னொன்று என் கூட வந்த என் அப்பா, அம்மாவுக்கு. இரண்டில் ஒரு ரூம் என் சொந்தச் செலவு என்பது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். ஆனால், ரூம் சாவியைத் தரும்போது, ‘மேடம்! ரூமைக் காலி செய்கையில் பில்லை மறக்காமல் செட்டில் பண்ணிவிடுங்கள்’ என்று மூன்று, நான்கு தடவை திரும்பத் திரும்பச் சொன்னது எரிச்சலூட்டியது.

“டெல்லிக்கு வந்த விமானப் பயணக் கட்டணத்தைத் திருப்பித் தரும்போது, எல்லோரையும் க்யூவில் நிற்கச் சொன்னது படு அநாகரிகம். இப்படியா எங்களை நடத்துவது! ஒரு மலையாளத் தயாரிப்பாளர், ‘நான்

# அதிகாரிகள்! சசிகபூர்!”



கொச்சியில் ஒரு கருத்தரங்கில் பங்கெடுத்துக் கொண்டு விட்டு வருகிறேன். எனவே கொச்சி—டெல்லி விமான டிக்கெட்தான் என்னிடம்இருக்கிறது.அந்தக்கட்டணத்தைத் தர முடியுமா?' என்று கேட்டார். அவ்வளவு தான்! 'நீங்கள் ஏதாவது விஷயமாய் அமெரிக்கா போய்விட்டு; அங்கிருந்துகூட டெல்லி விழாவுக்கு வருவீர்கள். அதற்காக அந்தக் கட்டணத்தை நாங்கள் தர முடியுமா?' என்று கேட்டார் அந்த அதிகாரி. இப்படியா அவமானப்படுத்துவது?கொச்சிக்கும் திருவனந்தபுரத்துக்கும் அப்படி என்ன பெரிய வித்தியாசம்? பைசா கூட அதிகப் பணம் தரவே வேண்டாம். 'ரூல்ஸ் இடம் தரவில்லை ஸார். ஸாரி' என்று அழகாகச் சொல்லலாமில்லையா?'

''எனக்கு இந்தி தெரியாது. இந்தி படங்களும் அதிகம் பார்த்ததில்லை. பார்த்தவரை என்னைக் கவர்ந்தவர்கள் சசிகபூரும், ராஜேஷ் கன்னாவும். இந்த வருஷம் எனக்குச் சிறந்த நடிகை விருது கிடைத்ததைவிட சசிக்கு சிறந்த நடிகர் விருது கிடைத்ததில் எனக்கு இரட்டிப்பு சந்தோஷம். விழாவில் அவருக்குப் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து கொள்ளப் போகிறேன் என்கிற விஷயமே திரில்லிங்காய் இருந்தது.

''ரிகர்சலின்போது, ஒரு சிலர், 'விழாவுக்கு சல்வார்—கம்மீஸ் போட்டுக் கொண்டு வா' என்று சொன்னபோது, 'நான் டிபிகல் தென்னிந்திய உடையில்தான் வருவேன்' என்று முகத்தில் அடித்தாற் போல் பதில் சொல்லிவிட்டேன்.

''ரிகர்சலின்போது, இரண்டொரு வட இந்தியர்கள் தவிர மற்றவரெல்லாம், ஏதோ தாங்கள்தான் உசத்தி போலவும், தென்னிந்தியர்கள் ஏதோ மட்டமானவர்கள் போலவும் எங்களை அன்னியமாய்ப் பார்த்தார்கள். அதுபற்றி நான் துளியும் கவலைப் படவில்லை.

''விழாவுக்கு நான் எனக்குப் பிடித்த கறுப்பு நிறப் புடைவை கட்டிக்கொண்டிருந்தேன். சசிகபூரும் கறுப்பு டிரெஸ்ஸில் வந்திருந்ததைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை!

''சசிகபூர் நேரே என்னிடம் வந்து கங்கிராட்ஸ் சொல்லிக் கைகுலுக்கினார். 'என்னுடன் 'உத்ஸவ்' படத்தில் நடித்திருக்க வேண்டிய நீ அதில் நடிக்க ஒப்புக் கொள்ளாததில் எனக்கு எத்தனை வருத்தம் தெரியுமா?' என்று கேட்டார்.

''சாதாரணமாய் ஏதாவது சின்ன எக்ஸைட்மெண்ட் என்றால்கூட தடுமாறி விழுந்து விடுவேன். ஜனாதிபதியிடம் விருது வாங்கும் போது தடுக்கி விழாமல் இருக்க வேண்டுமே என்று ஒரே நெர்வஸ்ஸாய் இருந்தேன். நல்ல வேளை, அதுமாதிரி ஒன்றும் நடக்கவில்லை!

''நான் யாரிடமும் ஆட்டோகிராப் வாங்குவதில்லை. (எஸ்.பி.பி.யின் விசிறி என்பதால் அவரிடம் மட்டும் வாங்கியிருக்கிறேன்.) சசிகபூரிடம் ஆட்டோகிராப் கேட்டேன். 'என்ன குழந்தை மாதிரி ஆட்டோகிராப் கேட்கிறாய்?' என்றார். 'நான் உங்கள் நெடுநாளைய விசிறி'; அதனால்தான்' என்றதும், கையெழுத்துப் போட முற்பட்டார். 'என் பெயரை எழுதிப் பிறகு கையெழுத்துப் போடுங்கள்' என்றேன். 'உன் பெயர் என்ன? மறந்துவிட்டதே' என்றார் நமுட்டுச் சிரிப்புடன். 'என் பெயர் மறந்துவிட்டதா! அது எப்படி மறக்கும்? இன்னும் ஒரு வருஷத்துக்கு நீங்கள்தான் பெஸ்ட் ஆக்டர்; நான்தான் பெஸ்ட் ஆக்ட்ரஸ்; அதனால் என் பெயரை மறக்கவே கூடாது. மறக்கவும் முடியாது! ஒழுங்காய் என் பெயரை எழுதி ஆட்டோகிராப் போடுங்கள்' என்று நான் சிரித்துக் கொண்டே சொன்னதும், அவரும் உற்சாகத்துடன் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.''


பேட்டி: **மௌனஷ்மி.**




மானேஜர்: என்னடா இது... ஸ்கூல் புத்தகம்... பிரௌன் பேப்பர் எல்லாம் எம் மேஜை மேலே வைக்கிறே!

ப்யூன்: அம்மாதான், 'ஐயா ஆபீசுலே சும்மாதான் இருப்பார்'னு சொல்லி கொடுத்தனுப்பினாங்க!''

— ரம்யா.



''இது ரொம்ப ஹிட்டான பாடல் சார்!''

''அப்படியா...?''

''ஆமாம். இந்தப் பாட்டை வைச்சா 'உடனே நிறுத்து'ன்னு கல்லு பறந்து வரும்...!''


— ராஜி ராதா.

சென்னை போலீஸுக்கு ஒரு ஷொட்டு!

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கும் பயணிகள் ஆட்டோவில் செல்ல இனிமேல் பேரம் பேச வேண்டியதில்லை. போலீஸார் உதவியுடன் ஆட்டோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன. பயணி ஏறும் வண்டியின் நெம்பர் பொறிக்கப்பட்ட கார்டு ஒன்று அவரிடம் தரப்படுகிறது. இறங்கும் இடத்தில் கட்டணம் குறித்து ஏதாவது தகராறு ஏற்பட்டால் அந்தக் கார்டில் எழுதி போஸ்ட் செய்ய வேண்டியதுதான் பயணியின் வேலை. போலீஸ் கமிஷனர் அலுவலக விலாசம் அட்டையில் ''பிரின்ட்'' செய்யப்பட்டுள்ளது. இந்த யோசனையை மற்ற நகரங்களிலும் அதிகாரிகள் பின்பற்றலாமே!

— உஷா கிருஷ்ணமூர்த்தி.





''ஃபேன் வாங்கிட்டியாமே!''

''யார் சொன்னது?''

''காற்று வாக்கிலே கேள்விப்பட்டேன்.''

''எட்டாம் கிளாஸ் கணக்குப் புத்தகம் என்ன விலை?''

''ஐந்து ரூபாய்.''

''கொஞ்சம் சொல்லிக் கொடுங்க.''

''அதெல்லாம் ஸ்கூல்லதான். இங்கே இல்லை.''

— ராதா வாசுதேவன்.

''நம்மவன் வளர்ந்து பெரியவனானதும் பஸ் கண்டக்டராகத்தான் வரப் போறான் பாரு!''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஏதேனும் சாமான் வாங்கப் பணம் கொடுத்து அனுப்பினால் மீதி சில்லறை அவனிடமிருந்து வருவதில்லையே!''

— வி. எஸ். ராஜகோபால்.

''என் மனைவி தோசை சுட்டா ஓட்டல்ல பண்ற மாதிரியே இருக்கும்...!''

''சாதா, முறுகல்னு எப்படி வேணும்னாலும் செய்து போடுவாளா?''

''உம், அதெல்லாம் இல்லே, தோசை கேட்டு அரை மணி நேரம் கழிச்சுத்தான் எடுத்துட்டு வருவா...''

— வி. சாரதி டேச்சு.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka




இப்போது, லக்ஸையும் விட நான் அதிகம் விரும்பும் சோப் ஒன்று உள்ளது'', என்கிறார் ஸ்ரீதேவி.

# புதிய லக்ஸ்

**நேர்த்தியான புது மணம்**

அதன் புத்தம் புது, மலர்களின் சாற்று மணம் பற்றி ஒவ்வொரு சினிமா நட்சத்திரமும், தம் விருப்பமான முறையில் விளக்குகிறார்—"மென்மைய மிக்கது", "கிளர்ச்சியூட்டுவது."

**கவர்ச்சியான புதுத் தோற்றம்**

உங்களைப் போலவே கவர்ச்சியானது நவநாகரீகமானது அது—கண்ணைக் கவர்வதும்கூட! மூன்று வகை அழகிய வண்ணங்களில் கிடைக்கிறது—இளஞ் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள்.




HLL—2012